

## கஷ்மீர் - தீர்வு என்ன?

## இங்கிலாந்து பிரதமரின் மைத்துனி இஸ்லாத்தை ஏற்றார்!




VOLUME : 3 ISSUE - 10

# வைகறை வெளிச்சம்

₹ 15

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

நவம்பர் 2010 – துல்காயிதா 1431





# பாபரி மஸ்ஜித் தீர்ப்பு

## நீதிபதிகள் மிரட்டப்பட்டனரா. . ?

## ஆர்.எஸ்.எஸ். சதி – அஜ்மீர் தர்கா குண்டுவெடிப்பு?

மனிதர்களில் சிலரைச் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும், கிறிஸ்தவக் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வின் திரு நாமம் தியானிக்கப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டு போயிருக்கும்; அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான் **(அல்குர் ஆன் 22 : 40)**


# வைகறை வெளிச்சம்

நவம்பர் 2010 துல்காயிதா 1431

**Volume : 3 Issue : 10**

ஆசிரியர்
**மு. குலாம்முஹம்மது,** M.A.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

தனி இதழ் ரூ. 15/-

**ஆண்டுச் சந்தா**
உள்நாடு ரூ.180/-
வெளிநாடு ரூ. 1500/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**வைகறை வெளிச்சம்**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594



**VAIGARAI VELICHAM**
52/1, Mannadi Street, 4th Floor, Room-7,
Mannadi, Chennai - 600 001.
**Phone: 044-45566909 Mob: 9444239594**
E-mail: darultrust@yahoo.com
Website : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.


கவர் ஸ்டோரி



பக்கம் **13**

## பாபரி மஸ்ஜித் தீர்ப்பு - நீதிபதிகள் மிரட்டப்பட்டனரா!


| | | |
|---|---|---|
| 1. | தரீக்குல் குர்ஆன் | 4 |
| 2. | நாம் பிரிந்துவிட வேண்டாம் | 8 |
| 3. | 60 வயதுக்கு பிறகு. . . | 12 |
| 4. | கஷ்மீர் தீர்வு என்ன? | |
| 5. | கர்கரேயைக் கொலை செய்தது யார்? நூலின் புதிய திருப்பம்! | 40 |
| 6. | அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள் அனுபவம் புதுமை | 42 |
| 7. | கர்கரேயை கொலை செய்தது யார்? | 46 |
| 8. | அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு ஆர்.எஸ்.எஸ்.இன் சதியே. . .. | 50 |
| 9. | மகளிர் மன்றம் - டோனி பிளேயரின் மைத்து இஸ்லாத்தை ஏற்றார்! | 54 |
| 10. | கம்யூட்டர் கல்வி | 58 |
| 11. | பெய்ரூத்திலிருந்து ஜெருசலம் வரை | 61 |

# தலையங்கம்

# வழிபாட்டுத் தலங்களும் இஸ்லாமும்!

9

பாபரி மஸ்ஜித் இருந்தஇடம் யாருக்குச் சொந்தம் என்பது குறித்து அலஹாபாத் நீதிமன்றம் கூறிய தீர்ப்பில் இந்தியா இந்து ராஷ்டிரமாக இருந்தால் தீர்ப்புகள் எப்படி இருக்கும் என்பது தெளிவாகத் தெரியவந்தது.

தீர்ப்பின் உள்ளே புகுந்து படித்தால் அங்கு அரசியல் சாசன சட்டத்தை விட புராணங்களே அதிகமாக மேற்கோள்காட்டப்பட்டது தெரியவரும்.

இந்து ராஷ்டிராவில் இந்துக் கோயில்களைத் தவிர எல்லா வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்பட்டுவிடும் என்பது தெளிவு.

அலஹாபாத் நீதிமன்றம் கட்டப் பஞ்சாயத்தாகச் சொல்லும் தீர்ப்பைக் கூட ஏற்றிடமுடியாது. இதற்கு மதுராவில் நடந்த கட்டப்பஞ்சாயத்து பட்டவர்த்தனமான எடுத்துக் காட்டு!

மதுரா என்பது இதே உத்திரப்பிரதேசத்தைச் சார்ந்த ஓரிடம். இங்கே இந்தியாவை இந்து ராஷ்டிராவாக ஆக்கிட துடிக்கும் அமைப்புகளுள் ஒன்றான விஷ்வ ஹிந்து பரிஷத், (மதுராவிலுள்ள) ஈத்கா என்ற பள்ளிவாசலின் ஒரு பகுதியை கேட்டுப் போராடிவந்தது. வழக்குகள் பலவற்றையும் தொடர்ந்தது. முஸ்லிம்களுக்கு தொடர்ந்து நெருக்கடிகளைத் தந்தது. அச்சுறுத்தியது.

முஸ்லிம்கள், அமைதியை விரும்பினார்கள்.

அதனால் மாவட்ட நீதிபதி, மாவட்ட அரசு நிருவாகிகள் இவர்களுடைய நிர்ப்பந்தம், மேற்பார்வை, ஆகியவற்றின் கீழ் ஈத்கா என்ற பள்ளி வாசலுக்கு சொந்தமான நிலத்தில் பாதியை அக்டோபர் 1968ல் தாரைவார்த்து தந்தார்கள்.

முஸ்லிம்கள் தந்த இடத்தில் பிரம்மாண்டமானதொரு கோயிலைக் கட்டினார்கள். விஷ்வ ஹிந்து பரீஷத் - ஐச் சார்ந்தவர்கள்.

உடனேயே நன்றி கெட்டத்தனமாக ஈத்கா பள்ளிவாசலுக்குச் செல்லும் பாதையை அடைத்தார்கள்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் தொழுகைக்கு செல்ல முடியும் என்றொரு நிலையை முஸ்லிம்களைக்கு ஏற்படுத்தினார்கள்.

இத்தனையையும் முஸ்லிம்கள் பொறுத்துக் கொண்டார்கள், இப்போது ஈத்கா மஸ்ஜித் இன் மீதி இடத்தையும் கேட்கின்றார்கள்.

ஆக இவர்கள் இதர மக்களின் வழிபாட்டுத்தலங்களுக்கு கிஞ்சிற்றுமிடமில்லை என்பதைத் தெளிவுப்படுத்தி வருகின்றார்கள்.

அதே போல் அலஹாபாத் நீதிமன்ற தீர்ப்பு இன்னொரு உண்மையையும் தெளிவுபடுத்தும்.

அது இந்திய நீதிமன்றங்கள் இந்துத்துவ நீதிமன்றங்களாகச் செயல்படத் தொடங்கிவிட்டன என்பதே.

இதை உச்சநீதிமன்றம் சென்று கேட்போம் என்பது முஸ்லிம்கள் இப்போது எடுத்துள்ள முடிவு. என்னவாகும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

இப்படி அடுத்தவர்களின் வழிபாட்டுத்தலங்களை அழித்தே தீருவோம் என்பதை பாபரிமஸ்ஜித் இடிக்கப்பட்ட நாள்களிலிருந்தே சொல்லிவருகின்றார்கள்.

“நின்று கொண்டிருக்கும் ஒவ்வொரு பள்ளிவாசலும் நாட்டின் அவமான சின்னங்கள்.” “அவை அகற்றப்பட வேண்டும்” என்ற முழக்கத்தை இந்துத்துவவாதிகள் முன்வைக்க அதை “தி ஹிந்து” போன்ற நாளிதழ்களும் வெளியிட்டன அன்று.

அதே போல் பாபரி மஸ்ஜித் ஐ இடித்துவிட்டு “அடிமைச் சின்னம் அகன்றது” என்று சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

ஆக மொத்தத்தில் இவர்கள் இதர வழிபாட்டுத் தலங்களைப் பொறுத்துக் கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ மாட்டார்கள் என்பது தெளிவு. அத்தகைய உரிமைகளுக்கு இவர்களிடம் இடமில்லை.

*இதை உண்மைப்படுத்திடும் வகையில்தான் அன்று, வைஷ்ணவ கோயில்களையும் புத்த விஹார்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்.*

*இப்படி ஒவ்வொருவரும் இதர மக்களின் வழிபாட்டுத் தலங்களை குறி வைத்தால் என்ன நடக்கும் என்பதை மனதில் வைத்துப்பார்த்தால் எல்லா வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்கும் சட்டங்கள் - வழிகாட்டுதல்கள் கொண்ட சட்டங்களின் ஆட்சி இங்கே நிலைபெறவேண்டும். அப்போது மட்டுமே எல்லாத்தரப்புப் மக்களும் நிம்மதியாக வாழ முடியும்.*

*இந்த வகையில் இஸ்லாத்தின் வழிகாட்டுதல் ஒன்றை இங்கே நாட்டு மக்களின் பார்வைக்கு வைக்கின்றோம். அதையும் மனித இனத்திற்கு அல்லாஹ் வழங்கிய அறுதி வழிகாட்டுதலாம் அல்குர்ஆனை அடியொற்றியே தருகின்றோம்.*

*இறைவன் கூறுகின்றான்,*

***“மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரை அல்லாஹ் தடுக்காதிருப்பின், ஆசிரமங்களும் கிருஸ்தவ கோயில்களும் யூதர்களின் ஆலயங்களும் அல்லாஹ்வின் திருநாமம் தியானிக்கப்படும் மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டு போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கின்றானோ அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும் (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான்”*** *(22:40)*

*அல்லாஹ் ஒருவன் தான் இறைவன். அவனுக்கு இணையோ துணையோ இல்லை என்பதை வலியுறுத்த வந்த மார்க்கமே இஸ்லாம்.*

*இஸ்லாம்தான் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் என இன்னும் அழுத்தமாக கூறுகின்றான் அல்லாஹ்.*

*இப்படிக் கூறும் அல்லாஹ் இதர வழிபாட்டுத் தலங்களுக்கும் பாதுகாப்புத் தருகின்றான்.*

*ஆசிரமங்களுக்கும், கிருஸ்தவ ஆலையங்களுக்கும் யூதர்களின் தேவாலயங்களும்அந்த அல்லாஹ்வை வணங்கும் பள்ளிவாசல்களுக்கும் ஆபத்துக்கள் வருகின்றபோது அனைத்தையும் தடுக்க வேண்டியது முஸ்லிம்களின் கடமை. இந்தக் கடமையை நிறைவேற்றினால் அவர்கள் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவார்கள். இது அல்லாஹ்வின் வாக்குறுதி. அவனுடைய உதவி கிடைத்துவிட்டால் இந்த உலகின் எந்த சூப்பர் பவரும் - வல்லரசும் அவர்களை வெல்ல முடியாது. ஆகவே இந்த இறைவனின் வழிகாட்டுதல்கள், செயலில் வந்தால் அனைவருடையே வழிபாட்டுத்தலங்களும், நிச்சயமாகப் பாதுகாக்கப்படும்.*

*இங்கே இன்னொரு உண்மையையும் கவனிக்க வேண்டும். அஃது நானே இறைவன் என்னையே வணங்குங்கள் எனக் கூறும் இறைவன், ஏன்? இதர வழிபாட்டுத்தலங்களைப் பாதுகாத்திட முன்வந்திட வேண்டும்? அவற்றைப் பாதுகாப்பதை தன்னைப் பின்பற்றுபவர்களின் கடமையாக ஆக்கிடவேண்டும்.*

*இங்கேதான் இறைவன் மனிதனுக்கு அளிக்கும் நம்பிக்கை சுதந்திரத்தை நாம் புரிந்திட வேண்டும்.*

*நான் தான் உங்களையும் இந்த உலகிலிருப்பவற்றையும் படைத்தேன். நானே பாதுகாப்பவன் எனக் கூறும் இறைவன் நீங்கள் என்னை ஏற்கவும் செய்யலாம், மறுக்கவும் செய்யலாம். நீங்கள் என்னை மறுத்தால் உங்களிடம் அது குறித்த கணக்கை இறப்பிற்குப் பின்னால் வரும் இறுதித் தீர்ப்பு நாளில் தீர்த்துக் கொள்வேன் இந்த உலகில் இஸ்லாத்தில் எந்தக் கட்டாயமுமில்லை என்கிறான்.*

*இந்தப் பின்னணியில்தான் இறைவனின் இறுதி தூதர் பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களிடம் பாடம் கற்றவர்களும் தங்கள் ஆட்சியை நடத்தினார்கள். கி.பி. 634இல் ஜெரூசலம் கைப்பற்றப்பட்டபோது, ஜெரூசலத்தை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த இஸ்லாமிய குடியரசு தலைவர் உமர் (ரழி) அவர்களிடம் மீட்பின் ஆலயத்தில் நீங்கள் தொழுங்கள் என கிருஸ்தவ தலைமை பாதிரி கூறியபோது இல்லை இனிவரும் நாட்களில் என்னவர்கள் நான் தொழுத இடம் என இந்த கிருஸ்தவ ஆலயத்தைக் கோரினால் உங்கள் ஆலயம் பறிபோய்விடும் எனக் கூறி மறுத்துவிட்டார்கள்.*

*இதே உமர் (ரழி) அவர்களின் ஆட்சியில் ஒரு யூத பெண்ணின் சம்மதமின்றி அவருடைய வீட்டை விலைக்கு வாங்கி இடித்து பள்ளிவாசலை எகிப்தின் கவர்னர் விரிவாக்கினார். யூத பெண் தந்த புகாரின் அடிப்படையில் பள்ளிவாசலை இடித்து வீட்டை மீண்டும் கட்டிக் கொடுக்க ஆணையிட்டார்கள். கலீபா உமர் (ரழி) அவர்கள்.*

*அதேபோல் எகிப்தில் கிருஸ்தவ ஆலயங்கள் அதிகமாக எழுப்பப்பட்டதும் இஸ்லாமிய ஆட்சியில்தான்.*

*இன்னும் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழிருக்கும் பங்களாதேஷில்தான் இந்து மதத்தின் மகத்துவமிக்க கோயில்கள் நினைவிடங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.*

*ஆகவே நாம் மேலே எடுத்துக் காட்டிய இறைவனின் வழிகாட்டுதல்கள்தாம் இந்தியாவில் மட்டுமல்ல உலகின் இதரப் பகுதிகளிலும் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாத்திட இயலும். அதனை நடைமுறையில் கொண்டு வர அனைவரும் உழைப்போம்!*

# தரீக்குல் குர்ஆன் 32



**இல்யாஸ் ரியாஜி**

وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ وَ
تَكْتُمُوا الْحَقَّ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ۝
وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ ۝

**வசனம் - 42**

நீங்கள் தெரிந்து கொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை மூடி மறைக்காதீர்கள்.

**வசனம் - 43**

தொழுகையை நிலை நாட்டுங்கள், ஸகாத் வழங்குங்கள், குனிந்து வணங்குவோருடன் சேர்ந்து நீங்களும் குனிந்து வணங்குங்கள்.

உண்மை எது என்று தெரிந்தும் உண்மையை மறைப்பது, தவறு செய்கிறோம் என்ற தெரிந்தே உண்மையையும் பொய்யையும் கலந்து சமர்ப்பித்து முஸ்லிம்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவது ஆகிய யூதர்கள் செய்து வந்த பித்தலாட்டங்களை இங்கே கண்டிக்கிறான் அல்லாஹ்.

முஸ்லிம்களைக் குழப்பவும் வழி தவறச் செய்திடவும் தங்களுக்குக் கிடைத்த சிறிய வாய்ப்பைக் கூட தவறாமல் பயன்படுத்திக் குழப்பினர் யூதர்கள். என்றென்றும் இதைச் செய்தே வருகின்றனர். இந்த பாதகச் செயலையும் இழிந்த பிடிவாதத்தையும் கைவிட்டு ஈமானின் அரவணைப்பில் முஸ்லிம்களின் தூய அணியில் தங்களை விரைவாக இணைத்துக் கொண்டு கடமையான வணக்கங்களை நிறை வேற்றிட வாருங்கள் என்று யூதர்களை நோக்கி அழைப்புவிடுக்கிறான் அல்லாஹ். இதுவே இவ் விரண்டு வசனங்களின் சாராம்சம். **(நூல் ஃபீழிலாலில் குர்ஆன்)**

அறிஞர் அபுல் ஆலியா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள் என்பதன் பொருள். உண்மையையும் பொய்யையும் கலந்து குழப்பாமல் முஹம்மது நபி(ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்ட சமுதாயத்தின்

நல்லடியார்களுக்கு தூயவற்றைக் கூறுங்கள். ***(நூல்: இப்னு கதீர்)***

*ஹழ்ரத் கதாதா (ரஹ்) கூறுகின்றார்கள்:*

*"(நீங்கள் கடைபிடிக்கின்ற) யூத மற்றும் கிறிஸ்தவக் கோட்பாடுகள் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியவை அல்ல என்பதையும் இஸ்லாம் தான் அல்லாஹ்வின் மார்க்கம் என்பதையும் நீங்கள் அறிந்தே வைத்திருக்கிறீர்கள். எனவே தூய இஸ்லாத்தையும் நீங்களே வடித்துக் கொண்ட யூத, கிறிஸ்தவக் கோட்பாடுகளையும் ஒன்றாகக் கலக்க வேண்டாம் என்பதே இதன் பொருள்."* ***(நூல்: குர்துபீ, இப்னு கதீர்)***

*பேரறிஞர் அபுல் ஆலியா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "முஹம்மது (ஸல்) ஒரு இறைத்தூதர்தான். ஆனால் யூதர்களாகிய எங்களுக்கு அவர் அனுப்பப்படவில்லை. மற்ற சமுதாயங்களுக்கே அவர் தூதர் என்று யூதர்கள் கூறினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதர்தான் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டது உண்மை. அவர்கள் உலகம் முழுவதற்குமான பொதுவான தூதர் அல்ல என்று கூறுவது பொய். அவர்கள் கலந்து சொன்ன உண்மையும் பொய்யும் இதுவே. ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகின்றார்கள். பொதுவாக அவர்கள் தவ்ராத் வேதத்தில் செய்து வந்த மோசடிகள் தான் இங்கே கண்டிக்கப்படுகின்றன."* ***(நூல்: குர்துபீ)***

*'கலக்காதீர்கள்' என்பதற்கு திருக்குர்ஆன் மூலத்தில் 'லா தல்பிஸூ' என்ற பதம் கூறப்பட்டுள்ளது. இதன் மூலச் சொல் லப்ஸ் (குழப்புதல்) என்பதாகும். மேலும் லிபாஸ் (ஆடை அணிதல்) என்பது அதன் வேர்ச் சொல் என்று கருதவும் இடமுண்டு. அப்படிப் பார்த்தால் அவ்வசனத்தின் பொருள் உண்மைக்கு பொய்யை ஆடையாக உடுத்திக் காட்டாதீர்கள். உண்மையை பொய்யால் மூடிவிடாதீர்கள் என்பதாகும்.* ***(நூல்: குர்துபீ)***

### மறைக்காதீர்

*உண்மையை அறிந்துகொண்டே மறைக்காதீர்கள் என்பதன் பொருள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உண்மையான இறைத்தூதர் என்று தெரிந்து கொண்டே அதை மறைக்க வேண்டாம் என்பதாகும் என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) விளக்கமளிக்கின்றார்கள். பேரறிஞர் முஹம்மது பின் சீரின் (ரஹ்) கூறுகின்றார்கள். பனீ இஸ்ராயீல் எனப்படும் யூதர்களுக்கு எதிரிகளால் கடும் தொல்லையும் இழிவும் வந்தடைந்த போது இறைத்தூதர் ஹாரூன் (அலை) அவர்களின் வழித் தோன்றல்களான யூதர்களில் ஒரு கூட்டம் யத்ரிப் என்ற மதீனா நகரில் வந்து குடியேறினர். அந்த கால கட்டத்தில் இறை வேதமாம் தவ்ராத்தின்படி தம் வாழ்வை அமைத்துக் கொண்ட சமுதாயமாக அவர்கள் திகழ்ந்தனர். இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வரும் போது அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முடிவில் அங்கேயே தங்கியிருந்தனர். காலங்கள் கடந்தன. தலைமுறைகள் தோன்றின. முன்னோர்கள் மறைந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது இவர்கள் உண்மையான இறைவனின் இறுதித்தூதர் தான் என்று தெரிந்தும் ஏற்க மறுத்தனர். இதையே உண்மையை மறைக்காதீர்கள் என்று அல்லாஹ் இங்கே குறிப்பிடுகின்றான்.* ***(நூல் : குர்துபீ)***

*திருக்குர்ஆன் விரைவுரையாளர்களில் ஒருவரான பேரறிஞர் ஸமக்ஷரீ (ரஹ்) கூறுகின்றார் கள். நபித்தோழர் ஹழ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களுடைய குர்ஆன் பிரதியில் 'வதக்து மூனல் ஹக்க' என்று இருக்கிறது. இதன்படி நீங்கள் உண்மையை அறிந்துகொண்டே அதனை மறைத்தவர்களாக உண்மையை பொய்யுடன் கலக்காதீர்கள்" எனப் பொருள்படும்.*

*மேலும் நீங்கள் உண்மையை மறைப்பதால் (அதை நம்பும்) மக்களுக்கு மிகப் பெரும் தீங்கேற்படும் என்று அறிந்து கொண்டே இவ்வாறு செய்யாதீர்கள் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு.* ***(நூல்: இப்னுகதீர்)***

### தொழுகை, ஜகாத்

*ஹழ்ரத் முகாத்தில் (ரஹ்) கூறுகின்றார்கள்: இந்த (43வது) வசனத்தில் யூதர்கள் நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுதிட வேண்டும். தம் ஜகாத்தை நபியிடமே ஒப்படைக்கவேண்டும். முஸ்லிம்களுடன் சேர்ந்து அவர்களும் தொழ வேண்டும். அதாவது யூதர்களும் முஸ்லிம்களுடன் முஸ்லிம்களாக இருந்திட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான்.* ***(நூல்: இப்னு கதீர்)***

*திருக்குர்ஆனில் தொழுகையை வலியுறுத்தி வந்துள்ள எல்லா வசனங்களும் 'ஸல்லூ' தொழுங்கள் என்று கூறாமல் 'அகீமுஸ்ஸலாத்' தொழுகையை நிலை நாட்டுங்கள் என்று கூறுகின்றன.*

இதன் பொருள், தொழுகையை அதற்குரிய நேரத்தில் உரிய முறைப்படி தொழுங்கள். தொழுகைக்கு உள்ளே பேண வேண்டிய கடமைகளையும் சுன்னத்தையும் சரிவரப் பேணித் தொழுங்கள். நிரந்தரமாக இடையறாது தொழுங்கள். அதில் உறுதியாக இருங்கள் என்பதாகும். **(நூல்: குர்துபி)**

மேலும் ஜகாத்தை வழங்குங்கள் என்று இவ்வசனத்தில் கூறப்பட்டிருப்பது கடமையான 'ஜகாத்'தைப் பற்றித்தான் என்றே பெரும்பான்மையான அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஸகாத் என்பதற்கு வளர்ச்சி, தூய்மை ஆகிய இரு பொருள்கள் உண்டு. கடமையான ஸகாத்தை முறைப்படி வழங்குவதால் வழங்குபவரின் சொத்துக்கள் தூய்மையடைவதுடன் வளர்ச்சியும் பெறும் என்பதை 'ஸகாத்' என்ற வார்த்தை கூறி கொண்டிருக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான் : (தர்மம் கொடுத்தால்) வறுமை வந்துவிடும் என்று ஷைத்தான் உங்களை அச்சுறுத்தி தீமைகள் புரியத் தூண்டுகிறான். (தர்மம் கொடுத்தால்) பாவமன்னிப்பும் அருள் வளமும் உங்களுக்கு கிடைக்கும் என்று அல்லாஹ் வாக்களிக்கின்றான். அல்லாஹ் தாராளமானவன். மிக்க அறிந்தவன்." **(அல்குர்ஆன் 2:268)**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மூன்று விஷயங்களை நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். தர்மம் கொடுப்பதால் ஒருவரின் செல்வம் குறைந்து விடாது (வளர்ச்சி அடையும்). அநீதி இழைக்கப்பட்டவன் பொறுமையை கடைப்பிடித்தால் அவனின் மரியாதையை அல்லாஹ் உயர்த்துவான். யாசகத்தின் வாசலை ஒருவன் திறந்தால் அல்லாஹ் அவனுக்கு வறுமையின் வாசலைத் திறந்து வைத்துவிடுவான்." **(நூல்: திர்மிதீ)**

அருள் மறை குர்ஆனின் அந்த வசனமும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்தப் பொன்மொழியும் ஸகாத் என்பதற்கு வளர்ச்சி அடைதல் என்ற பொருள் சரியாகப் பொருந்திப் போவதற்கு சிறந்த சான்றாக அமைகின்றன.

மேலும் அல்லாஹ் கூறுகிறான் : (நபியே ஓரிறை நம்பிக்கை கொண்ட) அவர்களின் செல்வங்களிலிருந்து தர்மத்தை நீர் எடுப்பீராக. அதன் மூலம் அவர்களை அகமும் புறமும் சுத்தப்படுத்துவீராக."

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக இந்த தர்மங்கள், அவை மக்களின் அழுக்குகள் ஆகும். எனவே அவை இந்த முஹம்மது (ஸல்) அவர்களுக்கோ அவர் தம் குடும்பத்தவருக்கோ ஹலால் ஆகாது."

இந்த நபி மொழிக்கு பேரறிஞர் முல்லா அலீ காரீ (ரஹ்) அவர்கள் தமது மிர்காத் என்ற நூலில் விளக்கமளிக்கிறார் : 'திருக்குர்ஆன் (9:103) வசனம் ஸகாத் மனிதனின் அகம், புறம் இரண்டையும் தூய்மையாக்குவதாக கூறுகின்றது. எனவே ஜகாத் ஒரு அழுக்கு நீக்கி.' இதுபோன்ற ஜகாத் விளக்கத்தையே பேரறிஞர் குர்துபீ அவர்களும் கூறுகின்றார்கள்.

வறுமை ஒழிப்பு மட்டுமே ஸகாத்தின் நோக்கமன்று. மனித குலத்துக்கு இஸ்லாம் வழங்கிட விழையும் முழுமையான சமூக, பொருளாதார விடுதலையை அடைய வழி கோலும் திட்டம் தான் அது. பின்னர் இதுபற்றி விரிவான விளக்கம் வரும் இன்ஷா அல்லாஹ்.

**ருகூஃ**

இந்த 43வது வசனத்தின் ஆரம்பத்திலேயே 'தொழுகையை நிலை நாட்டுங்கள்' என்று அல்லாஹ் கூறிவிட்டான். ருகூஃ எனும் குனிந்து வணங்குதலும் தொழுகையின் ருகூஃவை தனியாகக் கூறியுள்ளான். இதற்கு அறிஞர்கள் பல விளக்கங்களைக் கூறியுள்ளனர்.

கியாம் - நிற்பது, கிராஅத் - ஓதுதல், ருகூஃ- குனிதல், சுஜூத் - சிர வணக்கம் ஆகியவை தொழுகையின் அங்கங்கள் ஆகும். இவை அனைத்தும் சேர்ந்ததே தொழுகை ஆகும். எனினும் தொழுகை என்று குறிப்பிட வேண்டிய இடத்தில் அதன் அங்கமான இவற்றில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடுவது திருக்குர்ஆனின் பல வசனங்களில் இடம் பெற்றுள்ளன.

"உள்ளச்சம் கொண்டவர்களாக அல்லாஹ்வுக்காக நில்லுங்கள்" **(அல்குர்ஆன் 2:238)**

"போர்வை போர்த்தியிருப்பவரே (நபியே) இரவில் நிற்பீராக" **(73:2)**

இதன் பொருள் நின்று தொழுவீராக, வணங்குவீராக என்பதாகும்.

மேலும் அல்லாஹ் கூறுகிறான்.

"நிச்சயமாக அதிகாலைத் தொழுகை சாட்சி கூறப்படுவதாக இருக்கிறது" **(17:78)**

இவ்வசனத்தில் தொழுகை என்பதற்கு குர்ஆன் ஓதுதல் என்ற சொல்மூலத்தில் கூறப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

தொழுவீராக என்ற கூற வேண்டிய இடத்தில் சிரவணக்கம் (சுஜூது) செய்வீராக என்று கூறுகின்ற வசனங்கள் ஏராளம் உள்ளன.

"இரவில் அவனுக்கு சிரவணக்கம் செய்(து வணங்கு) வீராக". **(அல்குர்ஆன் 76:26)**

ருகூஃ - குனிந்து வணங்குதல் என்பதும் தொழுகையின் ஓர் அங்கம் தொழுவோருடன் சேர்ந்து நீங்களும் தொழுங்கள் என்று கூறுவதற்கு பதிலாக குனிந்து வணங்குவோருடன் சேர்ந்து நீங்களும் குனிந்து வணங்குங்கள் என்று திருக்குர்ஆன் 2:43வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது. வேறு சில வசனங் களிலும் தொழுகை என்று கூறவேண்டிய இடத்தில் ருகூஃ என்ற வார்த்தை கூறப்பட்டுள்ளது.

பனீ இஸ்ராயீல்களின் தொழுகை முறையில் ருகூஃ - குனிதல் என்பது கிடையாது. இவ்வசனத்தில் பனீ இஸ்ராயீல்களை நோக்கியே பேசப்படுவதால் தொழுகையை நிலைநாட்டுங்கள் என்று அவர் களிடம் கூறிய பின் குனிந்து வணங்குங்கள் என்று தனியாக கூறப்படுகிறது. அதாவது உங்களின் வழிபாட்டு முறையில் ருகூஃ என்பது இல்லா விட்டாலும் கூட அண்ணல் நபி (ஸல்) அவர்களை இறைத்தூதர் என ஏற்றுக் கொண்டு அவர்களுடன் சேர்ந்து தொழும் போது ருகூஃ செய்யுங்கள் என்று பனீ இஸ்ராயீல்களிடம் அல்லாஹ் கூறுகிறான்.

இதே கருத்தையே பேரறிஞர் பைளாவீ அவர்களும் தங்களின் திருக்குர்ஆன் விரிவுரையில் கூறுகின்றார்கள்.

குனிந்து வணங்குவோருடன் சேர்ந்து நீங்களும் குனிந்து வணங்குங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். இந்த வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவது கடமை என்று ஏராளமான அறிஞர்கள் கருத்து கூறியுள்ளனர். (நூல்: இப்னு கதீர்)

சில அறிஞர்கள் ஜமா அத்துடன் தொழுவது சுன்னத் முஅக்கதா - உறுதி வாய்ந்த சுன்னத் - என்கின்றனர். மார்க்கம் அனுமதிக்கின்ற காரணங்கள் ஏதுமின்றி ஜமா அத்தை தொடர்ந்து தவற விட்டுக் கொண்டேயிருப்பவர் தண்டிக்கப்பட வேண்டி யவர். அல்லாஹ்வை வணங்குவதற்காக கட்டப் பட்டுள்ள மஸ்ஜிதுகளில் ஜமாஅத்துடன் தொழு வதற்கு விடுமுறை விடுவது அறவே கூடாது என்று மார்க்க அறிஞர்கள் ஏகோபித்துக் கூறியுள்ளனர். எனவே ஜமாஅத்துடன் தொழுவது பர்ளு கிஃபாயா ஆகும். சிலர் ஜமா அத்தாக தொழுகின்றனர். இன்னும் சிலர் தனியாகத் தொழுகின்றனர் என்றால் அது பெரும் குற்றமாகாது. **(நூல்: குர்துபீ)**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"தனியாகத் தொழுவதைவிட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்து ஏழு மடங்கு சிறப்புடைய தாகும்." (நூல்: புஹாரீ, முஸ்லிம்)

"சில இளைஞர்களை அனுப்பி விறகுகளைப் பொறுக்கி சேர்த்து வரச் செய்து எவ்வித காரணமும் இன்றி (ஜமாஅத் தொழுகைக்கு வராமல்) வீடுகளில் தொழுது கொண்டிருப்பவர்களை தீ வைத்து கொளுத்தி விடலாம் என நான் எண்ணிய துண்டு" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அபூதாவூத்)

**இல்யாஸ் ரியாஜி**

**தொடரும். . .**


# தமிழன் தொலைக்காட்சியில் தரீக்குல் குர் ஆன்


**வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி-யின் திருக்குர் ஆன்விரிவுரை தமிழன் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகிறது.**

**வாரந் தோறும் செவ்வாய்க் கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப் பாகும் இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது. காணத் தவறாதீர்கள்!**

**இது வரை ஒளிபரப்பான உரைகள் குறுந் தகடுகளாகவும் (DVD) கிடைக்கும்**

தொடர்புகளுக்கு : **காயல் தர்வேஷ்**
**9841898044**

# நாம் பிரிந்து விட வேண்டாம்




பேராறிஞர் யூசுப் அல்கர்ளாவீ

## இவை வெறும் வார்த்தைச் சண்டைகள்

முஸ்லிம்களுக்கு மத்தியில் குறிப்பாக இஸ்லாமுக்காக உழைக்கின்ற சிறப்புக் குரியவர்களுக்கு மத்தியில் நிலவி வரும் கருத்து வேறுபாட்டின் இடைவெளியைக் குறைக்கின்ற மிக முக்கிய விஷயங்களுள் சர்ச்சை எதில் எழுகின்றதோ அந்த கருத்துக்களை வரையறுப்பதும் குழப்பங்களையும் மூடலையும் நீக்கிடும் வகையில் அது மிக நுட்பமாகத் தெளிவாக்கப்படுதலும் ஒன்றாகும்.

ஏனெனில் ஒரு வார்த்தைக்குரிய அர்த்தத்தை யோ அதன் குறிப்பிட்ட கருத்தையோ சுற்றித்தான் பெரும்பாலான சர்ச்சைகள் கூர்மையாகின்றன. எனவே அவை தெளிவாக விளக்கப்பட்டுவிட்டால் நுட்பமாக வரையறுக்கப்பட்டுவிட்டால் (சர்ச்சை செய்திடும்) இருதரப்பும் ஒரு நடுப்புள்ளியில் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

இதனால்தான் முன்னோர்களானாலும் அறிஞர்கள் விவாதங்களின் போதும் கருத்துக்களங் களிலும் விவாதத்தின் தலைப்பை எழுதிவிட வேண்டும் என்பதை மிகவும் வலிறுயுறுத்துவார்கள். ஏனெனில் அந்தக் களம் பொருளற்றதாகப் போய் விடக் கூடாதல்லவா?

பெரும்பாலும் இருக்குழுக்களிடையே கடும் சர்ச்சை ஏற்படும். இருதரப்பும் ஓங்காரக் குரலெழுப் பும். பின்னர் பார்த்தால் அந்த விவாதம் ஒரு வார்த்தைச் சர்ச்சையாக முடியும். ஆக்கப்பூர்வமான எந்த பலனும் அதில் விளைந்திருக்காது.

“முஸ்லிம்களெல்லாம் காஃபிர்களே. அவர் களைக் கொல்லலாம் செல்வங்களை அபகரிக்கலாம்” என்று முன்னர் கூறிவந்த ‘ஹாரிஜிய்யா’களும் அவர்களுடன் இணைந்து கொண்டு நிகழ்காலத்தில் மற்றவர்களை காஃபிர்கள் எனக் கூறிக் கொண்டி

ருப்பவர்களும் இந்தப் பாதாளத்தில் விழுந்ததற்குக் காரணம் ஷரீஅத்தின் மூலச் சொற்களில் இடம் பெறும் ஏராளமான வார்த்தைகளின் சரியான பொருளையும் கருத்தையும் அறியாமலிருப்பதுதான்.

அவ்வார்த்தைகளை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். எந்த அர்த்தத்தில் ஷரீஅத் அச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளதோ அதை விடுத்து தாமாகவே (தம்விருப்பப்படி) ஒரு கருத்தை வைத்துக்கொண்டனர். இதனால் தாமும் வழிகெட்டு பிறரையும் வழிகெடுத்தனர்.

ஈமான், குஃப்ர், ஷிர்க்,நிஃபாக், ஜாஹிலிய்யா ஆகிய சொற்கள் பயன்பட்டுள்ளதைப்பற்றி எழும் விவாதங்கள் இவ்வகையைச் சார்ந்ததுதான்.

இச்சொற்கள் பல்வேறு வகையாக ஷரீஅத் பயன்படுத்தியுள்ள சில நேரங்களில் நேரடிப் பொருளிலும் சில நேரங்களில் சூசகமாகவும் நேரடியற்ற (Mataphorically)தாகவும் பயன்படுத்தி யுள்ளதை அவர்கள் பகுத்தறிவதில்லை.

திருக்குர்ஆனிலும் ஹதீசிலும் 'ஈமான்' என்ற சொல் பெரும்பாலும் முழுமையான இறை நம்பிக்கை என்ற கருத்தில் இடம் பெற்றுள்ளது. 'அதை இழந்தவன் காஃபிராகிவிட்டான்' என்ற அளவுக் குள்ள பொதுவான ஈமான் என்று அவ்விடங்களில் பொருள் கூற முடியாது. ஆதாரபூர்வமான நபிமொழி களிலும் மகத்தான குர்ஆனின் வசனங்களிலும் இது மிகத் தெளிவாகவே காணக்கிடைக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான் : "முஃமின்கள் யாரென்றால் அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டால் அவர்களின் இதயங்கள் (பயந்து) நடுங்கிடும். அவனின் திருவசனங்கள் அவர்களிடம் ஓதிக்காட்டப்பட்டால் அவர்களின் ஈமானை அது அதிகப்படுத்தும். தம் இறைவனையே அவர்கள் சார்ந்திருப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலை நாட்டுவார்கள். அவர்களுக்கு நாம் வழங்கிய (செல்வம்) வற்றிலிருந்து (நல்வழியில்) செலவு செய்வார்கள். இவர்களே (உண்மையில்) இறை நம்பிக்கை கொண்டவர்கள்" ***(8:3-5)***

இவ்வசனத்தின் கருத்து 'இத்தகையோர் தாம் பரிபூரணமான முஃமின்கள்' என்பதுதான். யாரின் உள்ளம் அல்லாஹ்வை கூறியவுடன் நடுங்கவில்லை யோ யார் அல்லாஹ்வை மட்டும் சார்ந்திருக்க வில்லையோ அவர் ஈமானின் அடிப்படையிலிருந்தே விலகிச் சென்று காஃபிராகி விட்டார் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது.

இதே போல் மற்றொரு வசனம்.

"முஃமின்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் யாரென்றால் தம் தொழுகையின் போது உள்ளச்சத்து டனிருப்பார்கள். வீணான வற்றைப் புறக்கணித்து விடுவார்கள். ஜகாத் கொடுப்பதையும் தவறாமல் செய்து வருவார்கள். தம் வெட்கஸ்தலங்களைப் பாதுகாப்பார்கள் தம் மனைவியரிடமோ அல்லது தம் வலக்கரம் சொந்த மாக்கி கொண்டவர்களிடமோ தவிர நிச்சயமாக இவர்கள் பழிப்புக்குரியோரல்லர். இதற்கு அப்பால் (தவறான வழியை) எவர் நாடுகிறாரோ அவர்கள் வரம்பு மீறியவர்கள் தாம். அவர்கள் தம்மிடமுள்ள அமானிதங்களையும் ஒப்பந்தங்களையும் பேணிடு வார்கள். தம் தொழுகைகளை பேணிக்காப்பார்கள் இத்தகையோர் (சுவனத்தின்) வாரிசுதாரர்கள் ***(23:1-10)***

பரிபூரணமான ஈமான் உடையவர்கள் என்பது தான் இந்த வசனத்தின் கருத்தும். வீணானவற்றைப் புறக்கணிக்காத இறையச்சத்துடன் தொழுதிடாதவர் காஃபிரைப் போலாகிவிட்டார் என்பதல்ல. அவர் குறையுள்ள ஈமானுடையவர் என்பதே பொருள்.

இதே போல்தான் பின்வரும் நபிமொழி "ஒரு விபச்சாரன் விபச்சாரம் செய்யும் நேரத்தில் முஃமினாக

**"முஃமின்கள் யாரென்றால் அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டால் அவர்களின் இதயங்கள் (பயந்து) நடுங்கிடும். அவனின் திருவசனங்கள் அவர்களிடம் ஓதிக்காட்டப்பட்டால் அவர்களின் ஈமானை அது அதிகப்படுத்தும். தம் இறைவனையே அவர்கள் சார்ந்திருப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலை நாட்டுவார்கள். அவர்களுக்கு நாம் வழங்கிய (செல்வம்) வற்றிலிருந்து (நல்வழியில்) செலவு செய்வார்கள். இவர்களே (உண்மையில்) இறை நம்பிக்கை கொண்டவர்கள்" (8:3-5)**

இருப்பதில்லை. மது அருந்தும் போது ஒருவன் முஃமினாக இருப்பதில்லை. ஒரு திருடன் திருடும் போது முஃமினாக இருப்பதில்லை" **(அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புஹாரீ, முஸ்லிம்)**

ஈமானின் அடிப்படையே அவனிடமிருந்து அகன்று விடுகின்றது என்பதல்ல. இந்தப் பெரும் பாவங்களில் ஒன்றை ஒருவன் செய்துவிட்டால் அவன் இந்த முஸ்லிம் உம்மத்திலிருந்தே வெளியேறி விட்டான் என்பதல்ல. அவன் அந்த நேரத்தில் முழு முஃமினாக இருப்பதில்லை என்பதே பொருள்.

ஈமானின் அசலே இல்லை என்று பொருள் கொண்டால் இவர்கள் மதம் மாறிவிட்டனர் (முர்த் தத்) என்றாகிவிடும். முர்த்தத்துக்குரிய தண்டனைதான் இவர்கள் அனைவருக்கும் பொருத்தமானது என்றாகி விடும். கசையடி கல்லடித்துக் கொல்லுதல் கையை வெட்டுதல் என தண்டனைகள் பற்பலவாறாய் வந்திருக்காது.

மதுவைக் குடித்துவிட்டு போதையில் உழல்வோரைத் திட்டக் கூடாது என்று நபி-ஸல்- தடைசெய்துள்ளார்கள். அப்படியிருக்க அவர்களை காஃபிர், முர்த்தத் என்று எப்படிக் கூறிடமுடியும்.

(மதுக் குடித்த ஒருவர் தண்டனைக்காக நபியிடம் கொண்டு வரப்பட்டிருந்தார்) "அல்லாஹ் அவரை சபிப்பானாக. பலமுறை இவ்வாறு அவர் கொண்டுவரப்பட்டுள்ளாரே"என்று ஒரு நபித்தோழர் கூறினார். அப்போது நபி-ஸல்- கூறினார்கள். அவரை சபிக்காதீர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக நானறிந்தவரையில் அவர் அல்லாஹ்வை யும் அவனின் திருத்தூதரையும் விரும்புகின்றார்" **(அறிவிப்பாளர்: உமர் (ரழி) நூல்: புஹாரீ)**

ஒருவர் பெரும் பாவம் செய்திருந்தால் கூட பாவத்தின் காரணமாக மட்டுமே அவரின் இதயத்தின் மையப் பகுதியிலிருந்து ஈமான் கழன்றுவிடாது என்பதை இந்த ஹதீஸ் மிகத் தெளிவாகச் சொல்கிறது. "அவர் அல்லாஹ்வையும் அவனின் திருத்தூதரையும் விரும்பிக் கொண்டிருக்கிறார்" என்ற சொல் அவர் ஈமானுள்ளவர் என்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது.

இதுபோல் ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன. ஹதீஸ் நூல்கள் அவற்றைத் தொகுத்து வைத்துள்ளன. ஈமானுக்கு எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் உண்டு என்பதைப் பற்றிப் பேசும் நூல்களிலும் அவற்றைக் காணலாம்.

இது போலத்தான் பின்வரும் ஹதீஸ்கள் அனைத்தும் "தனக்கு விரும்புவதையே தன் சகோதரனுக்கும் விரும்பும்வரை உங்களில் எவரும் ஈமான் கொண்டவராக முடியாது" (அறிவிப்பாளர் : அனஸ் (ரழி) அபூஹுரைரா (ரழி) நூல் : புஹாரீ, முஸ்லிம்)

"என் உயிர் யார் வசமுள்ளதோ அந்த இறைவன் மீது சத்தியமாக நீங்கள் ஈமான் கொள்ளும்வரை சுவனம் புகமுடியாது. ஒருவரையொருவர் நேசம் கொள்ளும் வரை ஈமான் கொண்டவர்களாக முடியாது" (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

"யாருடைய தொல்லைகளிலிருந்து அவரின் அண்டை வீட்டார் பாதுகாப்புப் பெறவில்லையோ அவர் அல்லாஹ் மீது சத்தியமாக ஈமான் கொண்டவராக மாட்டார்" (இவ்வாறு நபி-ஸல்- மூன்று தடவை கூறினார்கள்) **(நூல் : புஹாரீ)**

"அண்டை வீட்டார் பசியுடனிருப்பதை அறிந்திருந்தும் (அவர்களுக்கு எதுவும் கொடுக்காமல்) தான் மட்டும் வயிறு நிறைய உண்பவன் என்னை ஈமான் கொண்டவனாக மாட்டான்" **(அறிவிப்பாளர் : அனஸ் (ரழி) நூல் : தப்ரானீ)**

இந்த நபிமொழிகளில் இடம் பெற்றுள்ள வாசகங்களுக்கு முழுமையான ஈமான் என்று பொருள். மதம் மாறிவிட்டார்கள் என்று கருதிவிடக் கூடாது.

ஷிர்க் = இணை வைப்பு எனும் சொல்லும் இப்படித்தான். பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க் என்று உண்டு அல்லாஹ்வுக்கு நிகராக மற்றொரு கடவுளைக் கற்பிப்பது பெரிய ஷிர்க். "இணைவைத்தவர்கள், இணைவைப்பாளர்கள்" என்று வருணிக்கப்படுவோர் இவர்கள்தாம்.

தனக்கு இணை கற்பிக்கப்படுவதை நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கமாட்டான். இதைத் தவிர உள்ளதை தான் விரும்புவோருக்கு மன்னிப்பான் (4:48,116) என்ற திருவசனத்தில் கூறப்பட்டிருப்பதும் பெரிய ஷிர்க் தான்.

**தொடரும். . . .**

**தமிழில் : இல்யாஸ் ரியாஜி**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ ஒய்டு டிராவல்ஸ்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருணை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

**சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு**

SAUDI WAKALA CARD

بطاقة الوكالة السعودية

رسنا إنتر برائزز

المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية

رقم التسجيل: اي ٠٣١٠/ موم/ ٣٠٠/ ٤ ٣/٤ /٧٨٧٠/ ٢٠٠٦

* Saudi Arabian Consulate, Mumbai accept wakalah from any Recruitments office.

## RASNA ENTERPRISES

GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

**எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!**

தலைமை அலுவலகம்:

எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

**கிளைகள் :**

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

# மலச்சிக்கல்

**தினமும் இரண்டு வேளை மலம் கழித்தாலும், தங்களுக்கு மலச்சிக்கல் இருப்பதாக சில முதியவர்கள் கூறுவார்கள். அது ஏன்?**

மலச்சிக்கலில் இரண்டுவகை உண்டு.

முதல் வகையில்,வயதானவர் தினமும் மலம் கழித்தாலும் அதுமிகவும் கெட்டியாக இறுகி இருக்கலாம்.

இரண்டாவது வகையில், மலம் கெட்டியாக இருக்காது. ஆனால், ஜீரண உறுப்புகளின் இயக்கம் ஒழுங்கற்று இருக்கும். இதனால், இரண்டு மூன்று நாள்களுக்கு ஒரு முறை மலம் கழிக்க நேரலாம்.

**மலச்சிக்கலுக்கான காரணங்கள் என்னென்ன?**

குடல் பகுதியில் ஏற்படக்கூடிய புற்று, ஹெர்னியா எனப்படும் குடல் இறக்கம் மற்றும் மூலநோய்.

தைராய்டு சுரப்பி குறைவாகச் சுரத்தல்

மன அழுத்தம்

உணவில் நார்ச் சத்து குறைவாக இருப்பது

உடற்பயிற்சியின்மை

வலி நிவாரணி, தூக்கத்துக்கு உதவும் மாத்திரைகள்.

**மலச்சிக்கலுக்கு மருந்து இல்லாமல் தீர்வு கிடையாதா?**

பொதுவாக, பெரும்பாலான முதியவர்கள் தேவையில்லாமல் மலம் இளக்கிகளைப் பயன்படுத்து வார்கள். கீழ் கண்டவற்றைப் பின்பற்றினால் மலச்சிக்கல் வாராமல் தடுக்கலாம்.

திரவ உணவு அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். (முதுமைக் காலத்தில் தினமும் 2 முதல் 2.5 லிட்டர்).

தினசரி உடற்பயிற்சியும், நடைப்பயிற்சியும் பலன் அளிக்கும்.


எடுத்துக் கொள்ளும் மருந்துகளால் பக்க விளைவு என்று தோன்றினால் அதைக் குறைக்கவும்.

நார் சத்து உள்ள உணவை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு மாத்திரை வடிவில் நார்ச் சத்தை 40 கிராம் அளவுக்குத் தினமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கோதுமை, ராகி, கொள்ளு, கைக்குத்தல் அரிசி போன்றவற்றில் அதிக அளவு நார்ச் சத்து உள்ளது. மேலும் கீரை, வாழைத்தண்டு, பாகற்காய், பேரீச்சம்பழம், மாம்பழம், அத்திப்பழம், கொய்யா, மிளகு, கொத்தமல்லி, ஓமம், வெந்தயம், சுண்டைக்காய் ஆகியவற்றில் இருந்தும் நார்ச் சத்தைப் பெறலாம். பால், சர்க்கரை, முட்டை, இறைச்சி, மீன் இவற்றில் கொஞ்சம் கூட நார்ச்சத்து இல்லை.

**நார்ச் சத்தால் வேறு ஏதாவது நன்மை உண்டா?**

நார்ச் சத்து என்பது மலச்சிக்கலை மட்டுமின்றி குடலில் ஏற்படும் புற்றுநோய், ரத்தத்தில் கொழுப்பு மற்றும் சர்க்கரை அளவுகளைக் குறைக்கிறது. பித்தப்பையில் கற்கள் சேருவதையும் தடுக்கிறது.




**(தொடரும். . . )**

பாபரி மஸ்ஜித் தீர்ப்பு

# நீதிபதிகளை மிரட்டிய மத்திய உளவுத்துறை !

## அதிர்ச்சி ஆனால் உண்மை!

வைகறை வெளிச்சம் செப்டம்பர் - அக்டோபர் 2010 இதழில் பாபரி பள்ளிவாசல் தீர்ப்பு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பு அல்ல.

மாறாக இது இந்து ராஷ்டிரா என்ற ஆரிய ராஷ்டிராவிற்காக வடிவமைக்கப்பட்ட அரசியல் சாசனப்படி எழுதப்பட்ட தீர்ப்பு என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அதனை பொது ஊடகங்களில் உள்ளவர்கள் கூட வரவேற்றார்கள்.

அபிநவ் பாரத் இன் திட்டப்படி விரைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது நமது மத்திய உளவுத்துறை என்பதை நாம் அண்மை காலந்தொட்டே தெளிவுப்படுத்தி வருகின்றோம்.

இந்த பேருண்மையை தெளிவுபடுத்திய பெருமை மராட்டிய காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களைச் சாரும்.

26/11 என்று அடையாளப் படுத்தப்படும் மும்பை தாக்குதல் வழக்கில் கேசாப்புக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்பு மத்திய உளவுத்துறையின் கை வண்ணந்தான்.

மத்திய உளவுத்துறை தீர்ப்பை மட்டும் தன் விருப்பப்படி மாற்றிடும் ஓர் உளவுத்துறைஅல்ல. மாறாக அது வழக்கு எப்படி நடக்க வேண்டும், யார் நீதிபதியாக அமர்த்தப்படவேண்டும், எந்தெந்த சாட்சியங்களை மறைக்க வேண்டும் எந்தெந்த சாட்சியங்கள் மட்டும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவேண்டும் என்ற எல்லா நிலைகளிலும் வரிந்து கட்டிக் கொண்டு செயல்படும் ஓர் துறை.

இதே போல் அஃது பாபரி பள்ளிவாசல் தீர்ப்பு விவகாரத்துக்கு முழுமையாகக் களமிறங்கி செயல்பட்டிருக்கின்றது என்ற உண்மை இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

எடுத்த எடுப்பிலேயே அஃது நீதிபதி சிபத்துல்லாஹ்கான் அவர்களைக் குறி வைத்திருக்கின்றது. அவர் ஓர் நேர்மையான நீதிபதியாக இருப்பதால், அவர் பாபரி மஸ்ஜித் இருந்த இடம் முஸ்லிம்களுக்கே சொந்தம் என்பதில் உறுதியாக இருக்கலாம் எனக் கருதிய மத்திய உளவுத்துறை அவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது. அதிலும் பச்சையாக, அவருக்கும் சவூதி அரேபியாவுக்கும் தொடர்ப்பிருப்பதாக ஒரு பெரிய அறிக்கையை தயார் செய்து அதை வைத்து அவரை மிரட்டியுள்ளது.

இந்த உண்மையை இந்தியா டுடே இதழ் தனது அக்டோபர் 11,2010 இதழில் குறிப்பிட்டுள்ளது. அந்த வரிகளை அப்படியே இங்கே தருகின்றோம்.

"The IB has a dossier on Justice A's Saudi connections . . . . Justice 'B' has been threatened. . . . Justice 'C' is contemplating joinging politics after he retires. . . . "

தமிழாக்கம்,

"நீதிபதியின் 'A' யின் சவூதி தொடர்புகள் பற்றி 'IB' என்ற மத்திய உளவுத்துறை ஓர் அறிக்கையை தயார் செய்து வைத்துள்ளது . . . . . நீதிபதி 'B'ஐ மிரட்டிவிட்டார்கள். . . . நீதிபதி 'C' தான் ஒய்வு பெற்றபின் அரசியலில் சேர்வது பற்றி ஆலோசித்து கொண்டிருக்கின்றார். . . . ".

இப்படி உண்மையைச் சொல்லும் இந்தியா டுடே சில புள்ளிகளை வைத்திருக்கின்றது. அந்த புள்ளிகளுக்கு தரமான விளக்கங்கள் சில தகவல்கள் மறைக்கப்பட வேண்டியுள்ளது என்பதே.

இதனிடையே மத்திய உளவுத்துறை பாபரி பள்ளிவாசல், குறித்து அவ்வப்போது

இந்தியாவின் தலைமை நீதிபதி யிடம் தகவல் சொல்லிக் கொண்டே இருந்ததாம்.

இஃது உச்ச நீதிமன்றத்தி லிருந்து உயர்நீதிமன்றம் வரை நமது நீதிபரிபாலனத்தில் ‘IB’ என்ற மத்திய உளவுத்துறை புகுந்து விளையாடுகின்றது என்பதைக் காட்டுகின்றது.

ஆகவே தீர்ப்பு திரிக்கப் பட்டது என நமது நக்கீரன் கூறுவதிலும், காங்கிரஸ் தலை யிட்டுத்தான் தீர்ப்பை மாற்றியது என டெல்லி இமாம் புகாரி அவர்கள் கூறுவதிலும் உண்மை உண்டு.

‘IB’ மத்திய உளவுத்துறை தான் இந்து ராஷ்டிராவின் முகமும் முன்கையும் என்றாகி விட்டதால் பாபரி மஸ்ஜித் தீர்ப்பு நாம் கூறிய இந்து ராஷ்டிராவின் அரசியல் சாசன சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்பே

**மேலும் ஓர் உண்மை!**

பாபரி மஸ்ஜித் தீர்ப்புப் பற்றி தனது கருத்துக்களை வழங்கிய மில்லி கெஜட் என்ற உலகப்புகழ் பெற்ற ஆங்கிலப் பத்திரிகை யின் ஆசிரியர் டாக்டர் ஜஃப்பருல் இஸ்லாம் கான் அவர்கள் இப்படித் தலைப்பிட்டிருந்தார்கள் தான் எழுதிய தலையங்கத்திற்கு.

பாபரி மஸ்ஜித் பள்ளி வாசல் நிலத்தில்

2/3 முதல் தர குடிமக்களுக்கு for 1st class citizens

1/3 இரண்டாந்தர குடி மக்களுக்கு for 2nd class citizens

வேகமாகவும், கோபமாக வும் எழுதப்பட்டது போல் தோன்றும் இந்தத் தலையங்கம் ஆய்ந்த எழுத்து என்பதை நாம் எளிதில் புரிந்திடலாம்.

இந்து ராஷ்டிராவில் முஸ்லிம்களும் இதர சிறுபான்மை யினரும் இரண்டாம்தர குடிமக் களே!

இந்த அடிப்படையில்தான் பல வகுப்புக் கலவரங்களின் போது நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

பல முக்கிய அரசு பணிகள் - உளவுத்துறையில், சில துறை களில் உயர்பதவிகள் முஸ்லிம் களுக்கு மறுக்கப்பட்டு வரு கின்றன. இவற்றையெல்லாம் முஸ்லிம்களும் மௌனமாக சகித்தே வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தியா இந்து ராஷ்டிரா வாக மாறுவதைத் தடுக்க முறை யான முயற்சிகளை மேற்கொள் வதை விடுத்து, இந்தத் தீர்ப்பின் தாரதம்மியங்களை மட்டும் ஆய் வது சிறுபான்மையினர் இரண் டாந்தர குடிமக்களாக ஆவதி லிருந்து காப்பாற்றிட இயலாது.

கவனிக்கப்பட வேண்டிய முக்கிய உண்மை!

பாபரி மஸ்ஜித் பற்றிய தீர்ப் புக்கு வெகுநாள்களுக்கு முன்னரே முஸ்லிம்கள் தங்களுக்குள் என்ன பேசிக் கொள்கின்றார்கள் என் பதைக் கண்காணிக்க பல நுண் ணிய கருவிகளை முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் அரசு பொ ருத்தி வைத்திருந்தது. இதற்கு பல்லா யிரங்கோடி ரூபாய்க்கு இஸ்ரேலி டமிருந்து விசேஷ கருவிகளை மத்திய அரசு விலைக்கு வாங்கி யுள்ளது. மேலும் தகவல்களுக்குப் பார்க்க வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2010 இதழ். இவை யெல்லாம் பாபரி மஸ்ஜித் நிலத்தில் கோயில் கட்டவும் முஸ்லிம்களை இரண் டாந்தர குடிமக்களாக ஆக்கிட வும் செய்யப்படும் நிரந்தர ஏற்பாடுகள்.


## வைகறை விஷன் - வீடியோ -சி.டி., டி.வி.டி

1. நாளைய முஸ்லிம் பெண்கள் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு.குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும், பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் சோதனைகள், சவால்கள், சாதனைகள் (எம்.ஜி.எம்)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொன்றது யார்? புத்தக வெளியீட்டு விழா (மதுரை)

தொடர்புக்கு : **வைகறை விஷன்**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909

# அலஹாபாத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு!

அலஹாபாத் நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் குறித்து வழங்கிய தீர்ப்பு பற்றி பிரபல வழக்கறிஞர் ஏ.ஜி. நூரானி தன் கருத்துக் களைப் பதிவு செய்யும் போது,

"இந்தியர்களாகிய நாம் ஓர் தனித்த தீவில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. மாறாக நமது நீதிபரிபாலனத்தை உலகமே கவனித்து வருகின்றது. அங்கே நமக்கு அதாவது உலக அரங்கில் நமக்குத் தலைகுனிவையே அலஹாபாத் நீதிமன்ற தீர்ப்பு ஏற்படுத்தியுள்ளது" எனக் கூறியுள்ளார்.

அதே போல் நீதிமன்றங்கள் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு அநீதியையே இழைத்து வருகின்றன என்றும் கூறியுள்ளார். (Front Line, Oct, 22,2010)

இந்நிலையில் பாபரி மஸ்ஜித் நின்று கொண்டிருந்த இடத்தில் ஒரு கோயில் தான் 500 ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்பதை மையமாகக் கொண்டே அலஹாபாத் நீதிமன்றம் முஸ்லிம்களுக்கு இமாலய அநீதியை இழைத்தது.




அங்கே 500 ஆண்டு களுக்கு முன் கோயில்தான் நின்று கொண்டிருந்தது என்பதற்கு ஆதாரமாக தொல்லியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வறிக் கையை ஆதாரமாகக் காட்டிற்று அலஹாபாத் நீதிமன்றம்.

நமது இந்தியாவை பாரதீய ஜனதா என்ற தீவிரவாத கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கும் போதுதான் அதன் ஏற் பாட்டில் இந்த தொல்லி யல் ஆராய்ச்சி கழகம் இந்த ஆய்வை நடத்தியது. பின்

## இந்தியாவை உலக அரங்கில் தலைகுனிய வைத்தது!

னர் அறிக்கையையும் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையை மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டும் எனக் கேட்டபோது அன்றைய தீவிரவாத பாரதீய ஜனதா கட்சி அரசும், அதன் கடைக்கண் பார்வையில் இயங்கிய அலஹாபாத் உயர்நீதி மன்றமும் முடியாது என மறுத்துவிட்டன.

பின்னர் இந்த தொல்லியல் ஆராய்ச்சி குறித்து, ஒரு நூலை 2007 இல் தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்களாக ஷரீன் ரட்னாஹர் என்பவரும் டி. மண்டல் என்பவரும் எழுதினார்கள். அந்த நூலின் பெயர் "Ayodhya Archeology After Excavtions" "அயோத்தியா அகழ்வுக்குப் பின் தொல்லியல்" Tulika 'துலிகா' என்ற வெளியீட்டு நிறுவனந்தான் இதனை வெளியிட்டது.

ஆனால் அலஹாபாத் நீதிமன்றம் இந்த நூலை தடை செய்துவிட்டது.

**ஆதாரங்கள் மக்கள் மன்றத்தில்**

இப்போது அலஹாபாத் அநீதிமன்றம் தனது தீர்ப்பை முழுக்க முழுக்க இந்த ஆர்கியோலாஜிக் சர்வே எனக் கூறப்படும், தொல்லியல் ஆராய்ச்சியை மையப்படுத்தியே அமைந்திருப்பதால் அந்த தொல்லியல் ஆய்வை மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும் என இந்தியாவிலுள்ள தொல்லியல் ஆய்வாளர்களும், உலக அரங்கிலுள்ள தொல்லியில் ஆய்வாளர்களும் நமது உச்சநீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த மனுவின் மீது உச்சநீதிமன்றம் வழங்கிடும் தீர்ப்பிலிருந்து அதன் லட்சனம் உலகுக்குப் புரியும்.

இப்போது உச்ச நீதிமன்றத்தில் தந்துள்ள மனுவில் பின் வரும் தொல்லியல் ஆய்வாளர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள். **சுமித் சார்கர். உமா சக்கரவர்த்தி, கே.என். பணிக்கர், கே. சுச்சுதானந்தன், அஜய் தந்தேகர்,** ஆவணப் படத்தயாரிப்பாளர் **ஆனந்த பட்வர்த்தன்**. சில மென் பொருள் நுண்மாண் நுழை புலத்தார், இன்னும் பலர்.

பல வெளிநாட்டு ஆசிரியர்கள், லண்டனை சார்ந்த சில ஆய்வாளர்கள், சிக்காக்கோ, ஸ்டாக்கோல்ம் கோபன்ஹேஹன் என்ற இடங்களைச் சார்ந்த வெளிநாட்டு ஆய்வாளர்களும் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். இவர்கள் இந்தியா வின் நண்பர்கள் என தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக்கின்றார்கள்.

மேலே நாம் தந்த தகவல்கள் ஓர் உண்மையை ஊர்ஜிதப் படுத்தும், அது வெளிநாடுகளில் வாழும் ஆய்வாளர்களுக்கும் அலஹாபாத் நீதிமன்றத்தீர்ப்பின் மேல் அதிருப்தி வந்துவிட்டது. அவர்களும் அதனை அநீதி என்றே நினைக்கின்றார்கள்.

இந்நிலையிலும் வெளிநாடுகளில் நமது இந்தியாவுக்கு தலை குனிவுதான்.

இந்நிலையில் தொல்லியல் ஆராய்ச்சி குறித்து நாம் அன்று வெளியிட்ட ஆய்வு ஒன்றை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.


# 31ம் ஆண்டில் தாஃவா பணிகள்

# அன்பகம் இஸ்லாமிய கல்விக் கூடம் கும்பகோணம்

இஸ்லாத்தை தன் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்பவர்களை ஆதரியுங்கள். உங்கள் குர்பானி தோல்களை அன்பகம் இஸ்லாமிய கல்விக் கூடத்திற்கு தந்து இந்த தாஃவா பணியில் உங்களுடைய பங்களிப்பை உறுதி செய்யுங்கள்.

*தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்*

அகழ்வாராய்ச்சி முடிவு - ஓர் ஆய்வு

# அகழ்வாராய்ச்சி என்றால் என்ன?

"'பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் ஒன்று இருந்தது. அதை பாபர் இடித்து விட்டார். இடித்த அந்த கோயில் இராமர் கோயில். அந்தக் கோயில் இருந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார்.'"

இதனை இப்போது அலஹாபாத் நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இப்படியொரு வாதத்தை முன்வைக்கிறார்கள் சங்பரிவார் என்றழைக்கப்படும் ஆர்.எஸ்.எஸ். முதலான அமைப்புகள். இதற்காக பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தை தோண்டி (அகழ்ந்து) பார்த்தார்கள். தோண்டிய இடத்திலிருந்து கிடைக்கும் மண், சாம்பல், கண்ணாடி துண்டுகள், பாத்திர பண்டங்களின் உடைபாடுகள் கட்டடங்களின் இடிந்த பகுதிகள், பிணங்கள், புதை குழிகள் இவற்றை அகழ்ந்து எடுத்தார்கள். பின்னர் அவற்றை ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள்.

பின்னர் இந்த மண், சாம்பல் இவையெல்லாம் எந்தக் காலத்தைச் சார்ந்தவை என பார்த்தார்கள். இந்தப் பொருட்கள் எந்தக் காலத்தைச் சார்ந்தவை என்பதைக் கண்டுபிடிக்க பல நவீன விஞ்ஞான முறைகள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று தான் (Carbon Dating) கார்பனைக் கொண்டு அவற்றின் காலத்தைக் கண்டுபிடிப்பது. வரலாற்றின் எந்தக் காலக்கட்டத்தைச் சார்ந்தவை அவை (மண், சாம்பல் இடிபாடுகள்) என்பது கண்டு பிடிக்கப்பட்டபின் அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றிய வரலாற்றைப் பார்க்க வேண்டும். (ஆனால் இப்போதைய ஆய்வில் அதை பார்க்கவில்லை).

இதற்கு வரலாற்றைப் பற்றிய ஆழ்ந்த அறிவு வேண்டும். வரலாற்றில் அவை எந்த மக்களோடு சம்மந்தப்பட்டவை என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.

பின்னர் பூமியைத் தோண்டி கண்டுபிடித்தவை அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் நாகரீகம், பழக்க வழக்கங்கள் இவற்றோடு பொருந்திப் போகின்றனவா என பார்க்க வேண்டும். (அதுவும் பார்க்கப்படவில்லை)

இப்படிப் பூமியைத் தோண்டி கண்டுபிடிக்கப்பட்டவை பற்றிய ஆராய்ச்சி செய்யும் திறமை அறிவு, வரலாற்றைப் பற்றிய ஆழ்ந்த அறிவு இவற்றின் உதவியோடு எடுக்கப்படும் முடிவுகளே அகழ்வாராய்ச்சி முடிவுகள்.

இதையே ஒற்றைச் சொல்லில் அகழ்வாராய்ச்சி எனக் குறிப்பிடுகிறோம்.

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் ஒன்று இருந்ததா? என்பதை முடிவு செய்ய இந்த அகழ்வாராய்ச்சி இப்போது பயன்படுத்தப்பட்டது. இதனால் நாடு முழுவதும் இந்த அகழ்வாராய்ச்சி என்ற சொல் பாமரர் முதல் பண்டிதர்கள் வரை பிரபல்யமாகிவிட்டது. அலஹாபாத் நீதிமன்றம் அதை இன்னும் பரவலாக்கியது. இதோடு பிணைந்த இன்னொரு சொல் தொல்பொருள் ஆராய்ச்சி என்பதாகும்.

தொன்மையான பொருள்களின் ஆராய்ச்சி என்பதே அதன் பொருள்.

### அகழ்வாராய்ச்சி முடிவுகள் அறுதியானவையா?

அகழ்வாராய்ச்சி என்றால் என்ன என்பதை அறிந்தபின் அகழ்வாராய்ச்சிகள் எந்த அளவுக்குப் பிரச்னைகளைத் தீர்க்கும் என்பதை அறிந்து கொள்வது நல்லது.

> "பாபர் வருவதற்கு முன்பே முஸ்லிம்கள் அங்கே குடியமர்ந்து வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களே அதிகமாகக் கிடைக்கின்றன.
>
> இதற்கு அத்தாட்சியாக இரண்டு அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இரண்டுமே மொகலாயர் காலத்திற்கு முன்னால் உள்ள புதைகுழிகள். புதைகுழியிலிருந்த உடல்கள் மேற்கே முகம் பார்த்து அடக்கப்பட்டிருந்தன. இதனால் அவை முஸ்லிம்களுடையது என்பது இன்னும் உறுதியாகின்றது. "
>
> **Outlook, May 5, 2003**

நாமும் எல்லோரையும் போல் அகழ்வாராய்ச்சி அல்லது தொல் பொருள் ஆராய்ச்சி என்றால் பெரியதாகத்தான் எண்ணிக் கொண்டோம்.

ஆனால் இந்தத்துறையைச் சார்ந்த நிபுணர்கள் - அறிஞர்கள் சில உண்மைகளைச் சொல்கிறார்கள். அவற்றைச் சுருக்கமாக இங்கே தருகிறோம்.

1. தோண்டும் போது பெரும்பாலும் கிடைப்பவை குப்பைகள், உடைந்தவை, உதவாதவை என விட்டுவிட்டவை, இடிந்த வீடுகளின் அல்லது கட்டடங்களின் எஞ்சிய பகுதிகள், புதைக்குழிகள், இவை தான். பல நேரங்களில் இவற்றைக் கொண்டு எந்த அறுதியான முடிவுக்கும் வர முடிவதில்லை.

   எடுத்துக் காட்டாக : பல மொழிகளை பேசுபவர்கள், பல இறைக் கொள்கையை உடையவர்கள், பண்பாடு கலாச்சாரங்களைக் கொண்டவர்கள், ஒரே மாதிரியான பாத்திரம் பண்டங்களைப் பயன்படுத்தலாம்.

   இரும்பைப் பயன்படுத்தி கட்டடங்களைக் கட்டும் காலத்தில் எல்லோரும் இரும்பைத் தான் பயன் படுத்துவார்கள். இதை வைத்துக் கொண்டு இரும்பு பயன்படுத்தப் பட்டிருப்பதால், இந்த வீட்டில் இருந்தவர்கள் இன்ன மதத்தைச் சார்ந்தவர்கள் என்றோ, இன்ன மொழியை பேசுபவர்கள் என்றோ முடிவு செய்திட இயலாது.

2. பல வருடங்கள் கழித்து நாம் அகழ்ந்து அல்லது தோண்டி எடுக்கும் போது மண்ணோடு மக்கி தடந் தெரியாமல் போன பொருள்கள் கிடைப்பதில்லை. மண்ணில் கலக்க முடியாத பொருள்கள் தான் கிடைக்கும். அந்த இடங்களில் கிடைக்கும் பொருள்கள், அந்த மக்களின் வாழ்க்கைப் போக்கில் மிகக் குறுகிய, மிகவும் சிறிய, ஒரு பகுதியைத்தான் நமக்குச் சொல்லும். இதனை ஆய்வாளர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள்.

   "Excavation reveals, but a very small fraction of the total of the group"

   அதாவது, "அகழ்ந்தெடுக்கப்பட்டவை செய்தியைச் சொல்லும். ஆனால் அது அந்த மக்களின் மொத்த வாழ்க்கையின் ஒரு சிறு பகுதியை மட்டுமே சொல்லும்."

3. அகழ்வாராய்ச்சியாளர்களில் சிலர் இன்றளவும் ஒரு உண்மையை ஏற்க மறுக்கிறார்கள். அது தான் ஆரியர்கள் இடம் பெயர்ந்து வந்த உண்மை. காரணம், அகழ்வாராய்ச்சி இதை இன்னும் நிரூபிக்கவில்லையாம். அகழ்வாராய்ச்சி இந்த விவாதத்தில் இதுவரை இறங்கவில்லை என்பதே உண்மை. அது வரலாற்றாசிரியர்களின் ஆராய்ச்சிக்கு விடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு புதை குழிகளும் பாபரி பள்ளிவாசலின் பிரதான கட்டடத்திற்கு கீழேதான் இருந்தன. இதற்குப் பக்கத் துணையாக முகலாயர்கள் காலத்திற்கு முன்னாலுள்ள லாக்கவ்ரி செங்கல்கள், சுண்ணாம்புக் கலவையின் அடையாளங்கள், (இந்தச் சுண்ணாம்புச் கலவைதான் அன்றைய நாட்களில் செங்கற்களை இணைக்கும் பொருளாக பயன்படுத்தப்பட்டன). எலும்புகள், கண்ணாடிகள் இவையும் அந்த இடங்களிலிருந்து கிடைத்தன. இவை அனைத்தும் 9ஆம் நுற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டவை.

டெல்லி பல்கலைக்கழத்தைச் சார்ந்த தொல் பொருள் நிபுணர்கள், "பாபர், அயோத்தி வருவதற்கு முன்பே அயோத்தியில் முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதையே அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தடயங்கள் நிரூபிக்கின்றன என்கிறார்கள்."

**Outlook, May 5, 2003**

**ஆகவே அகழ்வாராய்ச்சிகள் எல்லாவற்றையும் நிரூபிக்க வேண்டும் என்றோ, நிரூபிக்க இயலும் என்றோ சொல்வதற்கில்லை.**

4. ***'கார்பன்' முறையில் காலத்தைக் கண்டுபிடிப்பது என்பது அதிநவீன - விஞ்ஞான முறைதான். ஆனால் அது ஒரு அதிசய சக்தி அல்ல. அனைத்தையும் அளந்து துல்லியமாக காலத்தைச் சொல்லிட.***

**இதனை ஆய்வாளர்கள் பொட்டில் அறைந்தாற் போல் இப்படிச் சொல்கிறார்கள்.**

Radiocarbon measurement, however sophisticated the equipment and computers it utilisers is no magical device for dating.

***அதாவது 'ரேடியோ கார்பன் முறை' என்ற தோண்டி எடுக்கப்பட்டப் பொருள்களின் வரலாற்றுக் காலத்தைக் கண்டு பிடிக்கும் முறை, அது எவ்வளவு நுட்பமான முறையாக இருந்தாலும் அஃதொன்றும் காலத்தைக் கண்டுபிடிக்கும் அதிசய உத்தியல்ல'***

5. **சில நேரங்களில் பின் வருவது போன்ற தவறுகளும் நடக்கலாம்.**


ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் போது அவர்களோடு பணம், தங்க நகைகள் இவற்றை யெல்லாம் போட்டு புதைப்பார்கள். அந்த இடங்களைத் தோண்டும் போது கொத்துக் கொத்தாக தங்க நகைகள் அல்லது கட்டித் தங்கம் கிடைக்கும். இதை வைத்துக் கொண்டு, சில தங்க நகைகள் கிடைக்கும் இடங்களி லெல்லாம் பிணங்கள்தாம் புதைக் கப்பட்டிருந்தன என்றோ, அல்லது தங்க நகைகள் கிடைக்கும் இடங்களிலிலெல்லாம் அந்தக் குறிப்பிட்ட காலத்து மக்கள் தாம் வாழ்ந்தார்கள் என்றோ, முடிவுக்கு வருவது பொருத்தமானதாக அமையாது.

இந்தப் பின்னணியில் அகழ்வாராய்ச்சி வந்லுநர்கள் இன்னொன்றையும் சொல்லுகின்றார்கள். அரசியல் செல்வாக்குடையவர்கள் அல்லது ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் வைத்திருப்பவர்கள், தங்கள் இலக்கை அடைய அகழ்வாராய்ச்சி முறைகளை நேர்மையின்றி திரிக்க முயன்றால் அவர்கள் தாராளமாக அதைச் செய்ய, அகழ்வாராய்ச்சியில் அவகாசம் இருக்கின்றது. இஃதொன்றும் முற்றும் முடிவான அறிவியல் துறையல்ல. இஃது குறைகளும் குளறுபடிகளும் நிறைந்த ஒரு துறைதான்.

இதை விளக்கமாக இப்படிச் சொல்லலாம்.

பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில்தான் இருந்தது என்ற முடிவை மட்டுந்தான் ஃபாஸிஸ்டுகள் ஒத்துக் கொள்வார்கள். அல்லது அப்படி ஒரு முடிவைத் திணிப்பார்கள். இப்படியொரு முடிவைத் திணிக்கும் அதிகாரம் அன்று பாரதீய ஜனதா கட்சியின் கைகளில் இருந்தது.

ஏனெனில் இந்த அகழ் வாராய்ச்சி துறை அல்லது தொல் பொருள் ஆராய்ச்சித் துறை முரளி மனோகர் ஜோஷி என்பவரின் கீழ்தான் அன்று இயங்கிவந்தது.



இவர் பாபரி மஸ்ஜிதை இடித்ததில் சதி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டவர். இவர்கள் இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியை எப்படி பயன்படுத்துவார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆராய்ச்சியாளர்களும் தொல் பொருள் அறிஞர்களும் இந்தத்துறையில் இன்னும் பல ஓட்டைகள் உண்டு என்று கூறுகிறார்கள்.

ஆதாரம் : (Ayodhya Archaeology after demolition) by D. Maodal, 2003 Edition tracts for the Tima : 5, Orient Logman

"அங்கே கோயில் என்றொன்று இருந்தது என்ற பேச்சே இல்லை. நான் ,இதைத் திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் இந்திய இஸ்லாமிய நினைவிடம் ஒன்றை தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இது வரை கிடைத்த தடயங்கள் அங்கே முஸ்லிம்களின் குடியிருப்பு ஒன்று இருந்தது என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன" இப்படிக் கூறுகின்றார் முன்னாள் தொல் பொருள் ஆராய்ச்சியகத்தின் இயக்குநர் எம்.சி. ஜோதி அவர்கள்

**Outlook, May 5, 2003**

# பாபரி மஸ்ஜித் அகழ்வாராய்ச்சி ஒரு வரலாற்றுச் சுருக்கம்

உலகிலேயே ஒரு வழக்கு 126 வருடமாக முடியாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதுதான் பாபரி மஸ்ஜித் வழக்கு.

தீர்ப்புகள் வந்துள்ளன. ஆனாலும் மேல் முறையீடு என வழக்கு நீண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இரண்டு முறை வழங்கப் பட்ட தீர்ப்பிலும் முஸ்லிம்களே வென்றார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த இடத்தில் தொழுவதற்கு சமிஞ்ஞையாகக் கூட உரிமை வழங்கப்படவில்லை. எதிராக, வழக்கு இரண்டு முறை தோற்றுப் போனவர்களின் பூஜா புனஸ் காரங்கள் நடக்கின்றன.

“பாபரி பள்ளிவாசல் இடம் யாருக்குச் சொந்தம்” என்பதை முடிவு செய்கின்ற வழக்கைத்தான் அலஹாபாத் நீதிமன்றம் விசாரித்தது. குறிப்பிட்ட இந்தவழக்கு இப்போது ஒரு முடிவுக்கு வந்து விட்டது. முடிவும் நிச்சயமாக ஃபாஸிஸ்டுகளுக்கு சாதகமாக அமையப் போவதில்லை என்பதுதான் முதலில் இருந்த நிலை.

இதை ஃபாஸிஸ்டுகள் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். இதனால் நாங்கள் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க மாட்டோம் என்றும் கூறினார்கள். அங்குதான் இராமர் பிறந்தார், அது மத நம்பிக்கை இதற்கு ஆதாரங்களோ சாட்சியங்களோ, தேவையில்லை என்றார்கள். இவர்கள் தங்களுக்குச் சாதகமாக அமையாத எந்த நீதிமன்றத் தீர்ப்பையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்கு அன்று விஷ்வ ஹிந்து பரிஷத்தின் அகில இந்தியத் தலைவர் பேசிய பேச்சு ஓர் எடுத்துக் காட்டு.

(ஆதாரம் : பிரவீன் தொகாடியா, டெல்லியில் 27.03. 2003இல் பேசிய பேச்சு)

பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை கொண்டுவந்து அந்தச் சட்டத்தின் மூலம் பாபரி மஸ்ஜித் ஷஹீதாக்கப்பட்ட இடத்தைப் பிடுங்கி கோயில் கட்டலாம் என முனைந்தார்கள் அன்று. அது முடிய வில்லை.

அலஹபாத் தீர்ப்புக்குப் பின்பும் இந்த முயற்சி தொடருகிறது.

மார்ச் 15,2001 அன்று கோயிலைக் கட்டுவோம் என மார்தட்டினார்கள் உச்ச நீதிமன்றம் அழகியதொரு தீர்ப்பைத் தந்து அதைத் தடுத்து விட்டது. இனி நீதிமன்றத் தீர்ப்பு வந்தால் மீண்டும் அங்கே பள்ளிவாசல் வந்து விடுமோ எனக் கொதித்த ஃபாஸிஸ்டுகள், ஒரு உத்தியை அன்று கையாண்டார்கள். அது தான் அகழ்வாராய்ச்சி.

சில தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

“இந்தப் புதைகுழிகளை நாம் கண்டு பிடிக்காமலிருந்திருந்தாலும், அங்கே பாபரி பள்ளிவாசலை கட்டுவதற்கு முன்னால் ஓர் முஸ்லிம் குடியிருப்பு தான் இருந்தது என்பதற்கு அளவுக்கதிகமான ஆதாரங்கள் இருக்கின்றன.”

**Outlook, May 5, 2003**



அதாவது பாபரி மஸ்ஜிதின் அடியில் ஒரு பிரம்மாண்டமான கோயில் இருந்தது. அந்தக் கோயில் இடிக்கப்பட்டு பள்ளிவாசல் கட்டப்பட்டது. பாபரி மஸ்ஜிதிற்கு அடியில் தோண்டினால் ஒரு கோயில் இருந்த அடையாளங்கள் தெரிய வரும் எனப் பசப்பினார்கள்.

ஃபாஸிஸ்டுகள் எதையும் சொல்லி விட்டு வெறுமனே போய்விடமாட்டார்கள். பொய்யை வரலாறாக மாற்றிக் காட்டும் வல்லமையும் யுக்தியும் அவர்களுக்குண்டு. இந்தப் பொய்யையும் அதாவது பாபரி பள்ளிவாசல் ஒரு கோயில் மீது கட்டப்பட்டது என்ற பொய்யையும் உண்மைப் படுத்த வரலாற்றை எழுதினார்கள். இந்தப் பொய் “வரலாறு (1955-56) ஆய்வுகளின் முடிவு”என தங்களை அலங்கரித்துக் கொண்டு வெளிவந்தன. 1955-56 களில் பி.பி.லால் என்ற தொல்

பொருள் ஆய்வாளர் இராமர் பிறந்த இடத்தில் தான் ஒரு தொல் பொருள் ஆய்வை நடத்தியதாக பீற்றினார்.

*1961-62களில் வி.எஸ். டுபே என்பவர் ஓர் ஆய்வை நடத்தினார். இந்த ஆய்வுகள் வெறுமனே காகித கட்டுகளாகத்தான் கிடந்தன. இந்த ஆய்வுகள் 1970 ஆம் ஆண்டுதான் முதன் முதலில் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தின. இந்த 'பொய்' அகழ் வாராய்ச் சியை செய்து முடித்தவர் தான் பி.பி. லால் என்பவர்.*

இவர் ஆராய்ச்சி செய்தாரோ இல்லையோ ஒரு கட்டுக் கதையைக் கட்டவிழ்த்து விட்டார். அந்தக் கட்டுக்கதை இது தான் : 'பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தின் கீழ் கோயில் இருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன' என்றார். இந்த பி.பி. லால் என்பவரிடம் ஒரு பிரச்னை. அவர் அகழ்வாராய்ச்சியை பொறுத்தவரை ஒரு பெரும் நிபுணர். இதனை அனைவரும் ஒத்துக் கொள்கிறார்கள். இவர் நமது அரசு தொல் பொருள் ஆராய்ச்சியகத்தில் பொது இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர்.

அகழ்வாராய்ச்சியில் இன்றைக்கிருக்கும் நிபுணர்கள் அனைவரும் இவரது அறிவை குறை கூறவில்லை. இவரைப் பற்றி எழுதும் போதெல்லாம் ஒரு மூத்த அகழ்வாராய்ச்சி அறிஞர் என்ற அடைமொழியோடுதான் எழுதுகிறார்கள். பேசுகிறார்கள். ஆனால் இவரோடு உள்ள எல்லோரும் பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் (அல்லது) இராமருக்குக் கோயில் இருந்தது என்ற விவகாரத்தில் இவரது முடிவை விமர்சிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளார் கள். இந்த விமர்சனங்களையும் மிகவும் இங்கிதத்தோடு தான் செய்கின்றார்கள்.


*1955-56களில் பின்னர் 1961-62 களில் முறையான முயற்சிகளோ ஆய்வுகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்த முறையற்ற முயற்சி பலருக்கு உந்துதலைக் கொடுத்தது.*

இந்த முறையற்ற முயற்சிகளால் உந்தப்பெற்ற பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்கள் 1969-70 களில் பாபரி பள்ளிவாசலுக்கு வெகுதூரத்தில் சில இடங்களில் மூன்று குழிகளை வெட்டினார்கள்.

அங்கே அகழ்ந்தெடுத்த மண்ணைக் கொண்டு சில முடிவுகளை வரைந்தார்கள். இந்த முடிவுகள் அவற்றின் அளவில் எந்த முக்கியத்துவமும் பெற்றவையல்ல. ஆனால் அவற்றிற்கு ஓர் அரசு அங்கீகாரத்தை தந்துவிட்டார்கள். அதாவது இந்த முடிவுகள் நமது அரசு நிறுவனமான தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் வருடாந்தர வெளியீடான 'Archa eological survery of India A review' இந்திய தொல் பொருள் ஆய்வு ஒரு மீளாய்வு என்ற இதழில் வெளி வந்தது. இந்த ஆய்வை ஏ.கே. நாராயணன், டி.என். ராய் மற்றும் பி.சிங் ஆகியோர் நடத்தினார்கள்.

இந்த ஆய்வில் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. ஆனால் பின்னால் ஆய்வு அங்கம் வகித்த டி.என். ராய் ஒரு நூலை எழுதினார்.

அதில் பாபரி பள்ளி வாசலை சுற்றியுள்ள இடங்கள் பலமுறை கட்டடங்களை எழுப்பவும் பின்னர் இடித்து விட்டு அந்த இடத்தில் கட்டடங்களைக்



கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

(T.N. Roy A study of the northern black polished ware culture. New Delhi. Ramanand Vidya Bhavan)

இந்த அனுமானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பி.பி. லால் என்பவர் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டார். அந்த ஆராய்ச்சிக்கு 'The Rama Yana sites' என்ற இராமாயண இடங்கள் என்று பெயரிட்டார்.

பி.பி. லால் அவர்கள் 1970ல் தான் சொன்ன வாதத்தை 1975ல் மீண்டும் ஊர்ஜிதம் செய்தார். பாபரி பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் உள்ள சில இடிபாடுகளைத் தான் அகழ்ந்து அல்லது தோண்டி பார்த்ததாகவும் அங்கே ஒரு கோயில் தென்படுவதாகவும் தெரிவித்தார்.

அதற்கு மேல் உண்மைகள் தெரியவேண்டும் என்றால் பாபரி மஸ்ஜித்தையே இடித்துவிட்டு அதற்கு கீழே தோண்டிப் பார்த்தால்தான் உண்மைப் புலப்படும் என்றும் கூறினார்.

பின்னர் இந்த ஆராய்ச்சியில் அவர் கே.வி. சவுந்திரராஜன் என்பவரை இணைத்துக் கொண்டார்.

**இந்த நூலில் அவர் இன்றைக்கிருக்கும் அயோத்தி இராமர் காலத்தில் இருந்த அயோத்தியா அல்ல என்பதை தெளிவுப்படுத்தினார்.**

இவர்கள் ஒரு பெரிய செங்கல் சுவர் இருந்தது என்று மட்டுமே குறிப்பிடுகிறார்கள். இந்தப் பெரிய செங்கற் சுவர் கோயிலைச் சுற்றி எழுப்பப்பட்ட மதிற் சுவராக இருக்கும் என்று கருதுகின்றார்கள்.

ஆனால் அவர்கள் எங்கேயும் ‘Pillar Bases’ என்று சொல்லக்கூடிய ‘தூண் களை’ கண்டுபிடித்ததாகச் சொல்ல வில்லை. இந்து பனாரஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டி.என். ராய் அவர்கள் வெளி யிட்ட ஆய்வறிக்கையிலும் எங்கே யும் தூண்கள் இருந்ததாகச் சொல்லவில்லை.

ஆனால் விஷ்வ இந்து பரிஷத் மற்றும் சங்கபரிவாரின் இதர அமைப்புகள் அனைத்தும் அங்கே எண்பத்துநான்கு தூண் களை கொண்டஓர் பிரமாண்ட மான கோயில் இருந்தது என வாய்விடாமல் சொல்லிவரு கின்றார்கள்.

இவர்கள் இந்த வாதத்தை 1985 முதலே சொல்லிவரு கிறார்கள். அப்போது அவர்கள் நாங்கள் சொல்வதெல்லாம் இலக்கியங்களிலிருந்து கிடைத்த வரலாற்று ஆவணங்களின் அடிப் படையில் அமைந்தவை எனக் கூறினார்கள்.

இவர்கள் அன்று தந்த ஆவணங்களை மறுத்து 1989ல் ‘வரலாற்றை அரசியலுக்காகத் திரிப்பது’ என்ற நூலை வரலாற்று வல்லுநர் பிராப் நாராயண் மிஸ்ரா என்பவர் வெளியிட்டார்.

இந்த நூலில் அவர் இன்றைக்கிருக்கும் அயோத்தி இராமர் காலத்தில் இருந்த அயோத்தியா அல்ல என்பதை தெளிவுப்படுத்தினார்.

ஆகவே இரண்டு அயோத்தி யாவும் வேறு வேறு. இப்போது நாட்டின் ஒருமைப்பாட்டை குலைக்க ஃபாஸிஸ்டுகள் சொல் லும் அயோத்தியா அல்ல. இராமர் பிறந்த அயோத்தியா.

இந்த விவாதம் இப்போது நடந்து முடித்த வழக்கிலும் வந்தது. சங்க பரிவார அமைப்புகளால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் களாலும் வரலாற்றாசிரியர்க ளாலும் இரண்டு அயோத் தியாவும் ஒன்றுதான் என்று நிரூபிக்க இயலவில்லை.

இந்தச் செய்தியை முஸ்லிம் கள் தரப்பில் வாதாடும் வழக் கறிஞர், ஜஃபரியாப் ஜீலானி அவர்கள் அழகுபட எடுத்துரைத் துள்ளார்கள்.

அதன் பிறகு 1990ல் இராம ஜென்ம பூமி குறித்து அத்வானி நடத்திய ரதயாத்திரை நாட்டில் மிகப்பெரிய கிளர்ச்சியை ஏற்படுத் திற்று. அப்போது பி.பி. லால், தான் புதிதாக பல புதிர்களைக் கண்டு கொண்டதாகச் சொன்னார். பள்ளி வாசல் இடிக்கப்பட்டால், தான் அன்று வரைச்சொன்ன அனு மானங்கள். அனைத்தையும் நிரூ பிக்கப் போவதாகக் கூறினார்.

இது 1990 அக்டோபர் 2 விஜயதசமி நாளில் அயோத்தியா வில் கூடிய கரசேவகர்களை ஊக்கப்படுத்தி பள்ளிவாசலை இடிக்கச் செய்ய மேற்கொள்ளப் பட்ட ஒரு முயற்சி என்பதைத் தவிர வேறெதுவுமில்லை. இந்த ஆய்வை பி.பி. லால் ஆர்.எஸ். எஸ்.இன் பத்திரிகையான ‘மன்தான்’ என்பதில் வெளியிட்டார். (மன் தான் அக்டோபர் 1990)

ஆனால் இதில் 1980ல், தான் ஆராய்ச்சி செய்தவை என்றும் குறிப்பிட்டார். 1980ல் தான் கண்டெடுத்த உண்மைகளை அவர் பத்து ஆண்டுகள் கழித்து வெளியிடக் காரணமென்ன?

இங்கே தான் பி.பி. லால் அவர்களின் எண்ணங்கள் கேள்விக்குறியாகின்றன. தொடர்ந்து 1992ஆம்ஆண்டு ஜூன் மாதம் 18ம் நாள் தொல் பொருள் ஆராயச்சியாளர்கள் அங்கு வந்தார்கள். வந்ததன் நோக்கம் அந்த இடத்தை உத்திரபிரதேச அரசு தன்னகப் படுத்திக் கொண்டதன் விளைவு களைப் பார்வையிடுவதே.

உத்திரப்பிரதேச அரசு பாபரி மஸ்ஜிதை சுற்றியுள்ள இடங்களை கையகப்படுத்தி யவுடன் அந்த நிலத்தை சமன்படுத்தியது. சமன்படுத்திய போது ‘பரந்த மண்ணில் இராமர் கோயில் இருந்ததற்கான அறி குறிகள் தென்படுகின்றன’ என அவர்கள் மீண்டும் அறிவித் தார்கள்.

பின்னர் 1992 டிசம்பர் 6ல் பள்ளிவாசலை இடித்தபின் அங்கு கிடைத்த இடிபாடுகள் அங்கு ஒரு கோயில் இருந்ததை அறிவிக் கின்றது என்றார்கள். இதனை புரட்சிகரமான புதிய கண்டு பிடிப்புகள் எனக் கூறினார்கள்.

இத்தனைக்கும் மேலாக அலஹாபாத் உயர் நீதிமன்றம் ஓர்அகழ்வாராய்ச்சிக்கு உத்தர விட்டது. 5.3.2003 அன்று தான் இந்த உத்தரவு பிறப்பிக்க பட்டது. அந்த உத்தரவைத் தொடர்ந்து மீண்டும் ஒரு தோண்டுதல் நடந்தது 2003 இல்.

# அலஹாபாத் நீதிமன்றத்தின் அகழ்வாராய்ச்சி ஆணையின் பின்னணி!

அலஹாபாத் நீதிமன்றத்திற்கு முன்னால் இருக்கும் வழக்கு, பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயிலோ - குளமோ இருந்ததா என்பதல்ல.

அலஹாபாத் நீதிமன்றத்திற்கு முன்னால் இருக்கும் வழக்கு, பாபரி மஸ்ஜித் இருந்த இடம் யாருக்கு சொந்தம்? என்பதே!

அந்த இடம் சுன்னி வஃக்ப் போர்டுக்குசொந்தம். இந்த வகையில் அது முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். வழக்குமுடியுந்தருவாயில், அகழ்வாராய்ச்சிக்கு நீதிமன்ற உத்தரவிட்டது அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்திற்று.

எனினும் முஸ்லிம்கள் அதை ஒத்துக் கொண்டார்கள். இந்த அகழ்வாராய்ச்சிக்கு நீதிமன்றம் துணைபோக ஒரு காரணம் உண்டு. நமது சங்பரிவார் அப்படியொரு ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள்.

முன்னர் 1955-56 களில் பி.பி. லால் என்பவர் கற்பனைக் கோயிலைக் கண்டுபிடித்தார். இப்போது இதை ஒரு கம்பெனி பெயர் 'டோஜோ விகாஸ் இன்டர்நேஷனல்'. இந்தக் கம்பெனி டெல்லியில் ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கின்றது.

அது டெல்லியில் சுரங்க ரெயில் பாதை அமைக்க, பூமிக்கு கீழ் எப்படி அதை அமைக்கலாம் எங்கிருந்து எங்கே சுரங்கம் தோண்டலாம் என்பதையெல்லாம் கண்டறிந்து கொண்டிருக்கின்றது.



எங்கெங்கே சுரங்கம் தோண்டலாம் என்பதை கண்டறிந்த பின் அதற்கான வரைப்படம் ஒன்றையும் அது வரைந்து தந்திட வேண்டும். இந்த நிறுவனம் திடீரென ஓர் அறிவிப்பைச் செய்தது.

அந்த அறிவிப்பு:

'அயோத்தியில் பாபரி பள்ளிவாசலுக்குக் கீழ் என்னவிருக்கின்றது என்பதை தன்னால் கண்டுபிடிக்க இயலும். அதற்காகவே தனியாக ஒரு விஞ்ஞான முறையை வளர்த்திருக்கின்றோம்' என்பதே அது. இந்தக் கம்பெனி டெல்லியில் தங்களுடைய பணி நடந்து கொண்டிருக்கும் போதே இப்படி அறிவிப்பைச் செய்தது வியாபார உத்தியா? அல்லது பாபரி பள்ளிவாசல் இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்பது குறித்து நீதிமன்றத் தீர்ப்பு வந்து விடாமல் தடுக்க சங்பரிவார் செய்த சதியா? புரியவில்லை.

இது ஃபாஸிஸ்டுகளின் திட்டமிட்ட சதிதான் என்பதை நிரூபிக்கும் வகையில் இந்தக் கம்பெனி அயோத்தியா சென்றவுடன் ஓர் அறிவிப்பைச் செய்தது.

அந்த கம்பெனியில், "பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ஒரு பெரும் கட்டடம் இருந்ததற்கான ஆதாரங்கள் சிக்கி இருக்கின்றன" என்றார்கள். உடனேயே சங்க அமைப்புகள் அவற்றையெல்லாம் தூக்கிக் கொண்டு நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றமும் ஆணை பிறப்பித்துவிட்டது.

இதில் ஃபாஸிஸ்டுகளின் சூழ்ச்சி அமிழ்ந்து கிடக்கின்றது என்பதற்கான அத்தாட்சி என்னவெனில், இந்த அகழ்வாராய்ச்சிக்கு உத்தரவு பிறப்பித்தவுடன் இதற்கான ஒப்பந்தம் அதாவது பாபரி பள்ளிவாசலை சுற்றியுள்ள இடங்களை தோண்டி, அகழ்ந்திடும் ஒப்பந்தம் ஒரு பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த இந்த ஒப்பந்தக்காரரின் பெயர் கிருஷ்ண குமார் குன்று பாண்டே. முன்னர் இவர் பா.ஜ.க. வின் தலைவராக இருந்தார். இவர் பாபரி பள்ளிவாசலை இடிப்பதில் முக்கிய குற்றவாளியாக இருந்த வினையகட்டியாரின் வலது கரம். இப்போதும் இவர் அந்தப் பகுதியின் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கின்றார்.

ஒப்பந்தம் கிடைத்ததும் கிடைக்காததுமாய் இவர் தன்னுடைய இளைஞர் அணியை களத்தில் இறக்கினார். ஒரு கர சேவையைத் தொடங்கினார்.

ஆமாம்! முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் இதனை "அரசாங்கமே நடத்தும் கரசேவை" என்றுதான் அழைத்தார்கள்.

மூன்றாவது நாள் முஸ்லிம்கள் தரப்பில் ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டது நீதிமன்றத்தில். அதில் முஸ்லிம்களும் இந்த அகழ்ந்து தோண்டும் பணியில் சேர்த்து கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. முதலில் ஒப்பந்தம் கொடுப்பது பொதுப் பணித் துறையின் பணி என்றது கீழ் நீதிமன்றம். பின்னர் இந்த மனுவை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அத்தோடு பாண்டேயை அழைத்து முஸ்லிம்களை இணைத்துக் கொள்ளவில்லையா? எனக் கேட்டது. அதற்கவர் நான் தன்னார்வ தொண்டர்களை அழைத்தேன். இந்துக்கள்தாம் வந்தார்கள் முஸ்லிம்கள் வர வில்லை என பதில் தந்தார்.

பின்னர் முஸ்லிம்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இது குறித்து முஸ்லிம் தனியார் சட்டவாரியத்தின் கீழ் இயங்கும் பாபரி மஸ்ஜித் செயற்குழுவின் தலைவர் காசிம் ரசூல் இலியாஸ் அவர்களிடம் நேரில் கேட்ட போது,

"நாம் முஸ்லிம்களைப் பணியில் சேர்த்ததோடு அல்லாமல் நமது சார்பில் பத்துபேர் கொண்ட ஓர் குழுவை அமைத்தோம். அத்தனை பேருமே முதிர்ந்த தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள். இவர்கள் தினமும் அங்கு செல்கிறார்கள். அங்கே ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியிருந்தால் அதைத் தவறாமல் தெரிவிக்கிறார்கள். நமது எதிர்ப்புகளை நீதிமன்றத்தில் அறிக்கையாகத் தாக்கல் செய்கின்றோம்" என்றார்.

இத்தனையும் செய்தாலும் என்னவும் எதுவும் எந்த நேரமும் நடக்கலாம் என்றார். பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் முஸ்லிம்கள்தாம் வாழ்ந்து வந்தார்கள். ஒரு பள்ளிவாசல் தான் அங்கு இருந்தது என்பதற்கான சான்றுகளே தொடக்கத்தில் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் தோண்டியெடுத்தவர்கள் எடுத்து வெளியே வீசிவிட்டார்கள். பின்னர் முஸ்லிம்கள் தலையிடவே அவை பாதுகாக்கப்பட்டன. ஆனால் ஆரம்பத்தில் நாம் இழந்தவை இழந்தவைதான்.

முதலில் ஒரு பிரமாண்டமான கோயில் உள்ளே இருக்கின்றது என்ற 'டோஜோ விகாஸ் சர்வதேச கம்பெனி' பின் வாய்திறக்கவே இல்லை. அந்த இடத்திற்கு விஜயம் செய்த பூர்ணிமா ஜோஷி என்ற பத்திரிக்கையாளர்.

'சர்வதேச கம்பெனி சொன்னதில் எந்த உண்மையும் இல்லை. மாறாக மக்கள் புரளிகளையும் வதந்திகளையும் பரப்பி வருகிறார்கள்' என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றார்.

(Outlook 24.4.2005)

'டோஜோ விகாஸ்' என்ற கம்பெனி பின்னர் நீதிமன்ற ஆணைப்படி அகழ்வாராய்ச்சிக்கு ஈடுபட்டவர்களும் ஒரு உண்மையைக் கண்டு கொண்டதாக ஏப்ரல் மாதம் முழுவதும் பீற்றி வந்தார்கள். அது இராமர் கோயில் நின்று கொண்டிருந்த தூண்களைக் கண்டுபிடித்தாகக் கூறியதுதான்.

உடனேயே பி.பி. லால் இதுதான் நாம் இதுவரை எதிர் பார்த்த அத்தாட்சி என்றார்.. ஆனால் கடைசியில் அது களிமண் மேடு என்பது உறுதியானது.

இன்னொரு 'திட்டு' போன்ற மேட்டு பகுதியைக் கண்டு பிடித்தார்கள் என்று உடனேயே அந்தப் பக்கம் திரும்பினார்கள். அது ஒரு அலங்கார மேடைதான். பெரும்பாலும் அங்கிருந்த பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையாக இருக்கலாம் என்பதே இறுதியில் தெளிவானது.

இப்படி இவர்கள் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடித்தவையெல்லாம் அங்கே 13ஆம் நூற்றாண்டு முதல் முஸ்லிம்களே வாழ்ந்து வந்தார்கள் என்பதையே ஊர்ஜிதம் செய்கின்றன.

இப்படி எல்லாமே சங்கபரிவாரங்களுக்கு எதிராகப் போய்க் கொண்டிருந்தது. முஸ்லிம்களின் பூர்வீக இடத்தில் தான் பாபரி பள்ளிவாசல் நின்று கொண்டிருந்தது என்பது தெளிவானது.

இந்நிலையில்தான் தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகம் தன் இறுதி அறிக்கையை சமர்ப்பித்தது.

# அகழ்வாராய்ச்சியின் இறுதி தில்லுமுல்லுகள்

டாக்டர் மணி என்பவர் தான் அப்போது நமது தொல் பொருள் ஆராய்ச்சி மையத்தின் பொது இயக்குநர்.

இவர் தனது இறுதி அறிக்கையை அலஹாபாத் நீதிமன்றத்தி முன் சமர்ப்பித்தார். அந்த அறிக்கை 347 பக்கங்களைக் கொண்டது. அந்த அறிக்கை ஒரு பிரம்மாண்டமான கட்டடம் அங்கே இருந்ததாகக் கூறிக் கொள்கின்றது. அதைக் கண்டு பிடித்துவிட்டதாகச் பிரகடனம் செய்கிறது. அது ஒரு வேளை ஒரு கோயிலாக இருக்கலாம் என்றும் அனுமானிக் கின்றது.

தூண்கள் (Pillar Basses) நின்றதாக அறிவிக்கப்பட்டவை. இந்த அறிக்கையை ஊர்ஜிதம் செய்யவில்லை. இவர்கள் தூண் கள் எனச் சொல்லும் களிமண் மேடுகள் சம காலத்தைச் சார்ந்த வை அல்ல. இவை அப்போதைய காலக் கட்டடத்தை சார்ந்தவை.

அறிக்கையில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்களுக்கும் இவர்கள் முடிவாக அறிவித்த வற்றிற்கும் எந்தச் சம்பந்தமு மில்லை. வரலாற்று வல்லுநர் இர்பான் ஹபீப் அவர்கள் இந்த அகழ்வாராய்ச்சிகள் முடிவதற்கு முன்னரே இப்படிக் கூறினார்:

“கண்டு பிடிக்கப்பட்டுள்ள வற்றில் ஒட்டு முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. இது முஸ்லிம்களோடு சம்பந்தப் பட்டவை. இதனால் அங்கிருந் தவை முஸ்லிம்களோடு சம்பந்தப் பட்டது. இதனால் அங்கி ருந்தவை முஸ்லிம்களின் காலத் திற்கு முற்பட்டவையாக இருக்க வியலாது. இது போன்ற ஒட்டு முறை முஸ்லிம்கள் இந்தியாவுக்குத் தந்ததுதான். ஆனால் அகழ்வாராய்ச்சி துறை முரளி மனோகர் ஜோஷியின் கீழ் வருவதால் அவர் அங்கே ஒரு கோயில்தான் இருந்தது என்ற முடிவுக்கு வந்து விடுவாரோ என அஞ்சுகின்றேன். ஏனெனில் அவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டு நிற்கிறார்.”

(Outlook 2nd June 2003)

அப்போது கோயில் இருப் பதாக அனுமானித்த அகழ் வாராய்ச்சிக்கழகம், 2003ஆம் வருடம் ஏப்ரல் 24ஆம் நாள் அலஹாபாத் நீதிமன்றத்தில் இப்படி ஒரு அறிக்கையை தாக்கல் செய்தது.

“இதுவரை அங்கே கண்டு பிடிக்கப்பட்டவை ஒன்றில் பாபரி மஸ்ஜிதோடு சம்பந்தப்பட் டவை. அல்லது பல ஆண்டு களுக்கு முன் முஸ்லிம்கள் அங்கே குடியிருந்த காலத்தோடு சம்ம பந்தப் பட்டவை.”

(Frontline 01.08.2003)



முடிவுகளை இன்றளவும் யாரும் மறுக்க வில்லை. அதே போல் இடைக் கால அறிக்கை, பாபர் பள்ளி வாசல் மட்டத்திற்கு கீழ் எந்தக் கட்டடமும் இல்லை என்பதை உறுதி செய்தது.

(Frontline01.08.2003)

ஆனால் இறுதி அறிக்கை கோயில் இருந்ததாக அனுமானிக் கின்றது. அகழ்வாராய்ச்சியைச் செய்தவர்கள் நேர்மையாகவும் நடந்து கொள்ளவில்லை. அகழ் வாராய்ச்சிகளைக் கண்காணிக்க நீதிமன்றம் நியமித்தவர்களிடம் பல புகார்கள் செய்யப்பட்டன. இந்தப் புகார்களில் பாபரி மஸ்ஜிதின் கீழ் குழிதோண்டுபவர் கள் கிடைக்கும் பொருள்களை



வரிசையாக அடுக்கி தூண்கள் இருந்தது போல் மாற்றுகிறார்கள் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் இறுதிவரை இந்தத் தவறு திருத்தப்படவில்லை.

அகழ்வாராய்ச்சி பேரா சிரியர்களும் ஆராய்ச்சியாளர் களும் வரலாற்று வல்லுநர்களும் டாக்டர் மணி பி.பி.லால் போன்ற அறிஞர்களின் நேர்மை யின்மையைக் கண்டு மலைத்துப் போய் நின்றார்கள். இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும் முன் பல விஞ்ஞான உத்திகளை பயன் படுத்தி ஆய்வுகளை ஊர்ஜிதம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதையும் இந்த அகழ் வாராய்ச்சியினர் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

பல கண்ணாடி பாத்திரங் கள், முஸ்லிம்கள் பயன்படுத்தும் வேலைபாடுகள் அமைந்த பாத்திரங்கள், எலும்புகள் (இவை மிருகங்களுடையவை) இவற்றை அகழ்வாராய்ச்சியின் போது எடுத்து வீசி விட்டார்கள்.

இவற்றைப் பாதுகாத்து வைக்க சொன்னபோது அவர்கள் செவிமடுக்கவில்லை. இறுதியில் நீதிமன்றத்திடமே மீண்டும் வந்திட வேண்டிய நிலை. நீதி மன்றம் ஆணையிட்டபிறகே அவற்றை எடுத்துப் பத்திரப் படுத்தினார்கள். இறுதி அறிக்கை யில் அவை பற்றி எதுவும் சொல்ல வில்லை.

“இறுதி அறிக்கையில் கண்ணை மூடிக்கொண்டு உண்மை யை திரித்து இருக் கின்றார்கள்” என்கிறார் பேராசி ரியர் இர்ஃபான் ஹபீப்.

(Frontline 26.9.2003)

ஏனைய ஆய்வாளர்கள் இப்போது நடந்த அதாவது நீதிமன்றம் உத்திரவிட்டு நடத்திய அகழ்வாராய்ச்சிகளின் அடிப் படையில் ஒன்றை அறுதியாக கூறுகின்றார்க்ள. அது, பாபரி மஸ்ஜித் ஒரு திறந்தவெளி பள்ளி வாசலின் இடிபாடுகளின் மேல் தான் கட்டப்பட்டுள்ளது.

இறுதி அறிக்கையில், நான்கு அடுக்கு எனக் குறிப்பிடப்படுவது ஒரு பள்ளிவாசல்தான் அதில் ஒரு ‘மிஹ்ராப்’பும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இது அங்கே பள்ளி வாசல் இருந்ததை அறுதியிட்டு கூறுகின்றது.

ஆனால் இவற்றையெல்லாம் இப்போது தாக்கல் செய்யப் பட்டுள்ள இறுதி அறிக்கை கண்டு கொள்ளவே இல்லை. ‘அடுக்கு 4’ என இறுதி அறிக்கையில் கூறப் பட்டுள்ளவற்றிற்கு கீழும் முஸ்லிம்கள் குடியிருப்பின் அத் தாட்சிகள் தென்படுகின்றன.

(Ftrontline 26.9.2003)

அகழ்வாராய்ச்சியில் முக லாயர்கள் காலத்திய இரண்டு ‘சுபரஸ்தான்களை’ புதை குழிகளைக் கண்டுபிடித்தார்கள். இவற்றை இறுதி அறிக்கையில் காட்டவே இல்லை என்கின்றார் சுராஜ்பன் என்ற அகழ்வாரர்ய்ச்சி பேராசிரியர்.

பாபரி மஸ்ஜித் வழக் கறிஞர் ஜஃப்ரியாப் ஜீலானி, இந்த அறிக்கை எங்கேயும் கோயில் இருந்ததாக சொல்லவுமில்லை. நிரூபிக்கவுமில்லை என்கின்றார் நம்பிக்கையுடன். அகழ்வாராய்ச் சியின் உண்மையான முடிவு பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் முன்னர் ஒரு பள்ளி வாசல் இருந்தது என்பதே. அத்தோடு அந்த இடம் பூர்வீக மாக முஸ்லிம்கள் குடியிருந்த இடம் என்பதும் உறுதி யாகின்றது.

இந்த உண்மைகள் வெளி வர உதவிய சங்க அமைப்பு களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம் என்றார்கள் முஸ்லிம்கள் அன்று.

இனி வெல்ல முடியாது என்பதால் தான் பிரவீன் தொகாடியா நாங்கள் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தைப் பிடுங்கிக் கொள்வோம் எனக் கூறினார்.

ஃபாஸிஸ்டுகள் எப்படி வேண்டுமானாலும் பசப்பலாம். ஆனால் உண்மையே இறுதியில் வெல்லும் என எதிர்பார்த் முஸ்லிம்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

# பாபரி பள்ளிவாசலை விட்டுக் கொடுத்துவிடலாமா?



பாபரி மஸ்ஜிதை விட்டுக் கொடுத்திடலாம் என சிலர் வாதிக்க தொடங்கிவிட்டனர்.

இந்த வாதத்தை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் மௌலானா வஹீதுத்தின் கான் தான்.

அதே வாதத்தைத் தான் இப்போதும் சிலர் வைக்கின்றார்கள். அவர்கள் பார்வைக்கு இந்தக் கட்டுரையை வைக்கின்றோம்.

பாபரி பள்ளிவாசல் குறித்து இஸ்லாமியப் பார்வை என்ன என்பதையும் இந்தக் கட்டுரை விளக்குகின்றது.

மௌலானா தன்னுடைய கருத்துக்களைத் தான் நடத்தும் அர்ரிசாலா என்ற பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றார்.

இந்த அர்ரிசாலா என்ற பத்திரிகையில் பாபரி மஸ்ஜித் பிரச்னைக்கு இப்படித் தீர்வு சொல்கின்றார்:

“முஸ்லிம்கள், பாபரி மஸ்ஜித் மீட்புக்காகப் போராடுவதை நிறுத்தவேண்டும். இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் அவர்கள் இப்போது அப்படிச் செய்வது நியாயமானதே. இதில் அவர்கள் தங்கள் போராட்டங்களைத் தொடர்ந்தால் என்ன நடக்கும் என்ற பார்வையே அவர்களை வழி நடத்த வேண்டும். ஒரு காலத்தில் பாபரி பள்ளிவாசலைப் பாதுகாப்பதும், அதற்காகப் போராடுவதும் அவர்களின் கடமையாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது மாறிப் போய் விட்ட இந்தச் சூழ்நிலையில் அவர்கள் அப்படியொரு கடமையைச் சுமக்கவில்லை.”

“சூழ்நிலைகளின் கட்டாயம்” என்ற கொள்கையின் அடிப்படையில் அவர்கள் இந்தப் பாபரி பள்ளிவாசல் பிரச்னையை விட்டு ஒதுங்கிட வேண்டும். இதனால் அவர்கள் இனிமேல் வரும் அவமானங்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.”

இன்னும் அவர் கூறுகிறார்:

“பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்டுவிட்ட இன்றைய சூழ்நிலையில் சூழ்நிலைகள் முற்றாக மாறிப் போய்விட்டன. இதனால் நாம் இன்றைய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் திட்டங்களைப் புதிதாகத் தீட்டவேண்டும். சூழ்நிலைகள் மாறும்போது மார்க்கத் தீர்ப்புகளும் மாறிட வேண்டும். மாற்றிட வேண்டும் என்பது இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நியதியாகும்.”

ஒரு இடத்தில் பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட்டுவிட்டால் அது பள்ளிவாசலாகவே இருக்கும் அது காலாகாலத்திற்கும் பள்ளிவாசலே!

அதனை விட்டுத் தருவதற்கு முஸ்லிம்களுக்கே உரிமை இல்லை. இந்த உண்மையை மௌலானா அவர்களும் ஏற்றுக் கொள்கின்றார்கள். என்னதான் சூழ்நிலைகள் மாறினாலும் ஒரு பள்ளிவாசல் பள்ளிவாசலாகத்தான் இருக்கும் என்பதில் மௌலானாவிற்குச் சந்தேகங்கள் இல்லாதபோது, மாறிவிட்ட சூழ்நிலையில் அதனை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?

இதற்கு மௌலானா அவர்கள் சொல்லும் காரணம். ‘நாம் ஒதுங்கியிருந்தால் மேற்கொண்டு வரும் அவமானங்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளலாம்’ என்பதே.

மௌலானாவின் கவனத்திற்கும் கருத்திற்கும் இன்னும் அவரைப்போல் சிந்திப்பவர்களுக்கும் ஒன்றை நாம் சொல்ல வேண்டும்.

பாபரி மஸ்ஜித்தை மீட்கும் பணியில் நாம் ஈடுபட்டால் நாம் அழிக்கப்படுவோம் என்ற அச்சம் ஏன் வந்தது?

இன்றைய ஆட்சியாளர்களோ இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்களோ ‘நீங்கள் பாபரி பள்ளிவாசலை மீட்கப் போராடினால் நாங்கள் உங்களை அழித்து விடுவோம்’ என்று சொல்லவில்லையே!

இப்படி ஒரு அச்சம் வந்ததற்கான அடிப்படையை மௌலானா அவர்கள் சொல்ல வேண்டும். இல்லையேல் அடிப்படையற்ற அச்சங்களை அவர் அவனியில் திணிப்பதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

இன்றைய ஆட்சியாளர்களும், பொதுமக்களும் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் பாபரி பள்ளிவாசலை மீட்கின்ற பணியில் நாம் யாரையும், எதையும் அழிக்கவோ, அழிக்க வழிவகுக்கவோ கூடாது என்பதைத்தான்.

இப்படி செய்தவதற்கு இஸ்லாமும் அனுமதிக்கவில்லை என்கின்றபோது இது போன்ற அழிப்புகளுக்கு இடமே இல்லை.

இவற்றையெல்லாம் கடந்து முஸ்லிம்கள் பாபரி மஸ்ஜிதை மீட்பதற்காக மீண்டும் கட்டுவதற்காகஎடுக்கும் முயற்சியில் அவர்களை யாரேனும் அழித்தால் அந்த முஸ்லிம்களுக்கு அல்லாஹ் போதுமானவன்!

அவர்களைப் பின்வரும் இறைவசனத்தின் அடிப்படையில் அல்லாஹ் அரவணைத்துக் கொள்வான்:

அல்லாஹ்வின் பாதையில் இறந்தவர்களை ‘மரித்தவர்கள்’ என்று நிச்சயமாக எண்ணாதீர்கள் - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கின்றார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப் படுகின்றார்கள்.

***(அல்குர்ஆன் 3:169)***

இதில் இன்னொரு திருமறை வசனத்தையும் மௌ லானா அவர்களுக்கும் அவர் பாணியில் சிந்திப்பவர்களுக்கும் சமர்ப்பிக்கின்றோம்:

“எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசித்து ஜகாத்தும் கொடுத்து வருவதுடன் அல்லாஹ்வையன்றி

மற்றெவருக்கும் பயப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள்தாம் அல்லாஹ்வுடைய பள்ளிவாசல்களைப் பரிபாலனம் செய்யக் கூடியவர்கள். இத்தகையோர் தாம், நேரான வழியில் இருப்பதாக நம்பத்தகுந்தவர்கள்.”

***அல்குர்ஆன் 9:18***

தன்னுடைய வாதத்தை வலுப்படுத்த மௌலானா அவர்கள் இன்னொரு உத்தியையும் முன் வைக்கின்றார்.

“இஸ்லாம் பயன்படக் கூடிய செயல்களைச் செய்யும்படி தான் தூண்டுகின்றது. பலன் பயக்காத செயல்களைச் செய்வதற்கு இஸ்லாம் ஒருபோதும் தூண்டவில்லை.”

இப்படி மௌலானா சொல்வதன் விரிந்த பொருள் - பாபரி பள்ளிவாசலைக் கட்டுவது என்பது அல்லது அரசு வாக்களித்தபடி கட்டித் தருவது என்பது நடக்கப்போவதில்லை. அலஹாபாத் நீதிமன்ற தீர்ப்பிற்குப் பின் அறவே வாய்ப்பில்லை. அப்படி இருக்க அந்தத் திசையில் எடுக்கப்படும் முயற்சிகள் பலன் அற்றவை என்பதே!

இப்படியொரு நிராசைக்கும் - பின்னர் விரக்திக்கும் மௌலானா அவர்கள் வருவதற்கு என்ன காரணம் என்பதை நாமறியோம். மௌலானா அவர்களும் இதற்கு எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை. இங்குள்ள நீதிமன்றங்களின் மேல் குறிப்பாக உச்சநீதிமன்றத்தின் மேல், நம்பிக்கை இழந்து விட்டார்கள்.

அடுத்து இது போன்ற முயற்சிகளை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கு மௌலானா அவர்கள், திருக்குர் ஆனிலிருந்தோ நபிவாழ்விலிருந்தோ இஸ்லாமிய வரலாற்றிலிருந்தோ எந்த ஒரு ஆதாரத்தையும் எடுத்துக் காட்டவில்லை.

மௌலானா அவர்கள் இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிராக சூல்கொண்டலையும் திட்டங்களையும் தீவிரவாதங்களையும் கண்டு அரண்டு போய் இருக்கின்றார் என்பதையே தெளிவுப்படுத்தியிருக்கின்றார்.

விழலுக்கு நீர் இறைப்பதை இஸ்லாம் விரும்பவில்லை. ஆனால் அநியாயத்தைத் தடுத்து நிறுத்துவதையும் எதிர்த்துப் போராடுவதையும் இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. இது திருக்குர்ஆனின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் நாம் பெறும் பயனுள்ள பாடம். (பார்க்க இந்த இதழ் தலையங்கம்)

இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் நாம் இந்த உலகில் வெற்றிகளைக் குவிக்காவிட்டாலும் நிச்சயமாக இந்த வகையில் நாம் எடுத்து வைக்கும் சிறிய முயற்சிகளிலிருந்து பெரிய முயற்சிகள் வரை அனைத்திற்கும் மறுமையில் நற்கூலி உண்டு!

இன்னும் சொன்னால் ஈமானின் கடைசிப்படி அநியாயத்தை மனத்தளவிலாவது வெறுப்பது தான்.

இன்னும் மௌலானா அவர்கள் பின் வரும் இறைவசனங்களை ஆழ்ந்து கவனிப்பது நல்லது:

(நபியே) கடற்கரை ஓரத்திலிருந்த ஓர் ஊர் மக்களைப் பற்றி அவர்களைக் கேளும். (ஓய்வு நாளாகிய) சனிக்கிழமையன்று (மீன் வேட்டையாடக் கூடாது எனத் தடுக்கப்பட்டிருந்தும்) அவர்கள் வரம்பு மீறி (மீன் வேட்டையாடிக்) கொண்டிருந்தார்கள். ஏனென்றால் சனிக்கிழமையல்லாத நாள்களில் அவர்களிடம் (அவ்வாறு) அவை வருவதில்லை. அவர்கள் பாவம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்களை இவ்வாறு கடினமாக சோதனைக்குள்ளாக்கினோம்.

இதனை அவ்வூரிலிருந்த நல்லோர் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து தடைசெய்தார்கள். இதனைக் கண்ட அவர்களில் ஒரு கூட்டத்தினர் இவர்களை நோக்கி, “அல்லாஹ் எவர்களை அழித்திட வேண்டுமென்றோ அல்லது கடினமான வேதனைக்குள்ளாக்க வேண்டுமென்றோ (நாடி) இருக்கின்றானோ அந்த மக்களுக்கு நீங்கள் ஏன் நல்லுபதேசம் செய்கின்றீர்கள்?” என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் இதனால் நாம் உங்கள் இறைவனிடம் பொறுப்பிலிருந்து நீங்கி விடுவதற்காக நாங்கள் நல்லுபதேசம் செய்கின்றோம். அதனால் மீன் பிடிக்கும் அவர்கள் (ஒருக்கால்) விலகி விடலாம் என்றும் கூறினார்கள்.

அவர்களுக்கு எச்சரிக்கப்பட்டதை அவர்கள் (பொருட்படுத்தாது) மறந்து பின்னும் மீன் பிடிக்க முற்படவே பாவத்திலிருந்து விலகி வந்தவர்களை நாம் இரட்சித்துக் கொண்டு வரம்பு மீறியவர்களை அவர்கள் செய்து கொண்டிருந்த பாவத்தின் காரணமாக கொடிய வேதனையைக் கொண்டு நாம் பிடித்துக் கொண்டோம்.”

***அல்குர்ஆன் 7:163-165***

இந்த வரலாறு நமக்கோர் உண்மையை உணர்த்துகின்றது.

அநியாயத்தைச் செய்பவர்கள் - வரம்பு மீறுபவர்களை நாம் பார்த்துக் கொண்டிருந்தால் அல்லாஹ் நம்மைச் சும்மா விடமாட்டான்.

நாம் அநியாயத்தைத் தடுக்க நம்மால் முடிந்ததையெல்லாம் செய்வது, நாளை மறுமையில் இறைவனிடம் நமது பொறுப்பை நாம் நிறைவேற்றினோம் என்பதை நிரூபிக்கவே!

அல்லாஹ்வின் நாமம் துதிக்கப்பட்ட இடத்தை இணை வைப்போர் ஆக்கிரமிப்பதும், தீவிரவாதிகள் இடிப்பதும், நாம் பார்த்துக் கொண்டிருப்பதுமா? இல்லை. நிச்சயமாக இல்லை.

அல்லாஹ்வை 'ஸஜ்தா' செய்த இடத்தை மீட்க உளத் தூய்மையோடு எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சிக்கும் அல்லாஹ் நிரம்ப நற்கூலிகளை நல்கிடவே செய்வான் மறுமையில்.

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வின் இல்லங்கள், அவற்றைச் சிதைப்பதும், இடிப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்கள். இறைவன் இதை இப்படிச் சுட்டிக்காட்டுகின்றான்:

அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அவனுடைய நாமத்தைத் துதி செய்வதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முயற்சி செய்பவனைவிட,மகா ஆக்கிரமக்காரன் யார்?

**அல்குர்ஆன் 2:114**

இங்கே இந்தியாவிலும், பள்ளிவாசலுக்குள் சிலைகளை வைத்தவர்கள் மீதும் பின்னர் அதை இடித்தவர்கள் மீதும் கிரிமினல் வழக்குகள்தான் பதிவு செய்யப்பட்டுள்ளன. அலாஹாபாத் நீதிமன்றம் அநீதியையே தீர்ப்பாகத் தந்த நிலையிலும், பள்ளிவாசலை இடித்ததை கிரிமினல் குற்றம் என்றுதான் கூறுகின்றார்கள். யதார்த்தங்கள் இப்படி இருக்கவே, மௌலானா அவர்கள் ஏன் இப்படி நடுங்குகின்றார்கள்? மௌலானா அவர்கள் இன்னொரு வாதத்தையும் இங்கே முன் வைக்கின்றார்கள்.

அது, "டிசம்பர் 6, 1992 வரை பள்ளி வாசலைப் பாதுகாப்பதே நமக்கு மிக முக்கியமான கேள்வியாக இருந்தது. பள்ளிவாசல் இடிப்பிற்குப் பின் முஸ்லிம்களின் உயிரும், ஜீவிதமும் கேள்விக் குறியாகி விட்டது. ஆகவே இப்போது முஸ்லிம்களின் உயிர்களைக் காப்பதற்கே அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும்" என்பதாகும்.

மௌலானா அவர்களும் அவர்களின் கருத்துக்களை விதைக்க விரும்புவோரும் ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வில்லை. முஸ்லிம்களின் உயிரும் உடைமைகளும் ஆண்டாண்டு காலமாக இங்கே ஆபத்துக்களையும் அழிவுகளையும் சந்தித்தே வந்திருக்கின்றன.

நாளொன்றுக்கு மூன்று வகுப்புக்கலவரம்; அதில் முஸ்லிம்களின் உயிர்கள் நூற்றுக் கணக்கில் சேதம்; திட்டமிட்டு அவர்கள் பொருளாதாரத் துறையில் அழிக்கப்பட்டார்கள் என அழுத்தமாகப் பேசுகின்றன ஆதார பூர்வமான புள்ளி விவரங் கள்.

இந்நிலையில் பாபரி பள்ளிவாசல் இடிப்பிற்குப் பின்னர் தான் முஸ்லிம்களின் உயிர்களும் உடைமைகளும் ஆபத்திற்குள்ளானது என்பது வரலாறு மறந்த பயமும் பீதியுமாகும்.

பாபரி மஸ்ஜிதை இடித்தவர்களின் பட்டியலில் இன்னும் 3,000 பள்ளிவாசல்கள் இருக்கின்றன என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

ஆகவே மௌலானா அவர்கள் காலா காலத்திற்கும் கதி கலங்கியே வாழ வேண்டியிருக்கும்.

ஆமாம்! நமக்கு மத்திய, மாநில அரசுகளும், அவற்றிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருக்கும்போது மௌலானா ஏன் நடுநடுங்குகின்றார்கள்?

இந்த அரசமைப்புகள் நம்மைப் பாதுகாக்காது என அவர்கள் எண்ண ஆரம்பித்து விட்டார்களா? அரசு இயந்திரங்களில் அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றால் அதை அவர்கள் அப்படியே அறிவிக்கட்டுமே. . .!

வரலாறு நெடுகிலும் முஸ்லிம்கள் அல்லல்களுக்கு ஆட்பட்டு வந்திருக்கின்றார்கள்! அவற்றில் ஒன்றுதான் முஃமின்கள் நெருப்புக் குண்டத்தில் எறியப்பட்டு அவர்கள் எரிக்கப்பட்ட வரலாறு. இத்தனைக் கொடுமையான தண்டனையைப் பெறும் அளவுக்கு அவர்கள் அப்படி என்ன தவறைச் செய்துவிட்டார்கள்? அல்லாஹ்வே அதைக் கூறுகின்றான்:

"விசுவாசங்கொண்ட அவர்களிடம் யாதொரு குற்றத்தையும் அவர்கள் காணவில்லை. எனினும், மிக்கப் புகழுடையோனும் யாவரையும் மிகைத்தோனுமாகிய அல்லாஹ்வை அவர்கள் விசுவாசித்ததையன்றி (ஈமான் கொண்டதையே அவர்கள் குற்றமாகக் கண்டார்கள்.)

**அல்குர்ஆன் 85:8**

பாபரி மஸ்ஜித் இடிப்பின் போது ஃபைஸாபாத்தில் பிஜேபி.

யில் முக்கியப் பொறுப்பைச் சுமந்த ஒரு முஸ்லிம் கோரமான வகையில் கொலை செய்யப் பட்டார் என்பது உண்மையாக இருக்கும்போது வஹீதுத்தீன் அவர்களது வாரிசுகள் எங்கே ஓடப் பார்க்கின்றார்கள்?

கஷ்டங்களுக்கிடையேயும் நாம் உறுதியாக நின்றால் அல்லாஹ் நம்மை நிலைப்படுத்தி வைப்பான் என்ற அல்லாஹ்வின் உறுதிமொழிகள் நம்மை வழிநடத்தட்டும்.

“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி புரிந்தால் அவனும் உங்களுக்கு உதவி புரிந்து உங்களுடைய பாதங்களை உறுதியாக்கி வைப்பான்.”

சூரா : முஹம்மது:7

இன்னொன்றையும் இங்கே நினைவு கூர்வோம்:

(விசுவாசிகளே) அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தால் உங்களை வெற்றி கொள்வோர் ஒருவருமில்லை! உங்களை அவன் (கை) விட்டுவிட்டாலோ, அதற்குப் பின்னர், உங்களுக்கு எவர்தான் உதவி செய்யமுடியும்? ஆதலால் அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் நம்பிக்கை கொள்ளட்டும்.

இன்னும் அல்லாஹ் தன் திருமறையில் இப்படிக் குறிப்பிடு கின்றான்:

இவர்கள் (எத்தகையவர்கள் என்றால்) நியாயமின்றி தங்கள்வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டவர்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன் தான் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம்! மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், கிறிஸ்தவர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாகத் துதிக்கப்படும் மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டே போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கின்றானோ, நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுக்கு உதவி செய்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலவானும் யாவரையும் மிகைத்தோனுமாக இருக்கின்றான்.

இதற்கான விளக்கம் தலையங்கத்தில் தரப்பட்டுள்ளது

***(22:40)***

# பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்டபோது . . .

பால முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள் அத்தனையும் காவல் துறையின் உதவியோடு தான். சுமார் 500 முஸ்லிம்கள் அயோத்தில் தங்கள் உடைமைகளை அப்படியப் படியே போட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

இப்படிக் கொலை செய்யப் பட்டவர்களில் அயோத்தியில் பி.ஜே.பியின் கிளைத்தலைவராக இருந்தவரும் அடங்குவார். அவர் ஒரு முஸ்லிம் என்பதாலேயே கொலை செய்யப்பட்டார். அன்று காவல் துறையினர் நடந்து கொண்டதைப் பார்த்த முஸ்லிம்கள் இனி தங்களுக்கு இழைக்கப் படும் அநீதிகளைப் புகார்களாக எடுத்துக் கொண்டு காவல் துறையிடம் செல்வதில்லை என்றே முடிவு செய்தார்கள்.

***சுல்தான் அஷார் என்பவர் ஒரு தீவிர காங்கிரஸ்காரர் அவர் தனது சொந்த அனுபவத்தை இப்படிக் குறிப்பிடுகிறார்:***

‘டிசம்பர் 7, 92 அன்று 1000 கரசேவகர்கள் என்னுடைய வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள். அதை இடித்துக் தரைமட்டமாக்கினார்கள். பிஏசி என்ற சிறப்புக் காவல் பிரிவினர் என்னுடைய வீட்டை நோக்கி அவர்கள் இந்தக் கரசேவகர்கள் வருவதைப் பார்த்து ஓடிப் போய் விட்டார்கள். கரசேவகர்கள் ஒரு பெரிய இரும்புத் தடியால் என் தந்தை யைக், கொலை செய்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் ‘சுத்ரா’ காவல் நிலையத்தின் துணை ஆய்வாளர் வந்தார். அவரது பெயர் மிஸ்ரா. அவர் என் தந்தையின் உடலை அங்கேயே எரித்துவிடும்படி ஆணையிட்டார். கரசேவகர்கள் உடனேயே என் தந்தையின் உடலை எரித்து விட்டார்கள் என்வீட்டு வாசலிலேயே என் தந்தை கொலை செய்யப்பட்டார். கொளுத்தப் பட்டார் என்னுடைய தந்தை ஓய்வு பெற்ற வனத்துறை அதிகாரி.

அஷார் தன்னுடைய தாயாரைப் பக்கத்திலுள்ள இந்துக்களின் வீட்டில் மறைந்து வைத்திருந்தார். அதனால் அவருடைய தாயார் காப்பாற்றப் பட்டார். அவருடைய குடும்பத்திலுள்ள ஏனைய உறுப்பினர்கள் பக்கத்திலிருந்த காட்டுக்குள் ஓடிக்கொண்டே இருந்தார்கள். பொருள் அளவில் மட்டும் அவர் 8 லட்சம் ரூபாய் பெறுமான உடைமைகளை இழந்தார். இதில் எந்த நியாயமும் கிடைக்கவில்லை.

இதில் இன்னொரு அநீதி என்னவெனில் அஷாருக்குச் சொந்தமான 2.77 ஏக்கர்

நிலப்பரப்பை பாரதீய ஜனதா அரசு எந்த நஷ்ஈடும் தராமல் கையகப்படுத்திக் கொண்டது இந்த நிலம் கோயில் கட்டுவதற்கு தேவையாம். தொடர்ந்து 12 வயது சிறுவனிடமிருந்து 70 வயது கிழவர் வரை. முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக 'தடா'வில் கைது செய்யப்பட்டார்கள்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிக்கையின் செய்தியாளர் குப்தா என்பவர் இப்படிச் சாட்சியம் சொன்னார்:

"அயோத்தியிலுள்ள இந்துக்கள் வகுப்புவாதிகளல்ல. அவர்கள் பல முஸ்லிம்களைத் தங்கள் இல்லங்களில் தங்க வைத்து தப்பிக்க வைத்தார்கள். இது அவர்கள் தங்கள் உயிருக்கு ஆபத்தான வேலை எனத் தெரிந்தும் செய்தார்கள்."

"கொலைகளையும் கொளுத்துகிற வேலைகளையும் செய்தவர்கள் வெளியிலிருந்து வந்த கரசேவகர்களே!"

குப்தா என்ற பத்திரிக்கையாளர் இன்னொரு செய்தியையும் சொன்னார்:

"இந்த மொத்தப் பிரச்னையுமே அரசு இயந்திரங்களின் ஆக்கங்களே! அன்றைய மாவட்ட நீதிபதி கே.கே. நய்யார் சிலைகளைப் பள்ளிவாசலில் வைத்துப் பூஜை நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலம் இந்த அநியாயத்தைத் தொடங்கி வைத்தார். இவர்தான் முஸ்லிம்கள் அவர்களின் பள்ளிவாசலில் நுழைவதையும் தடுத்தார். அவர் நீதியில் அக்கறை உடையவராக இருந்திருந்தால் முழு சூழ்நிலையும் வேறுவிதமாக இருந்திருக்கும்.

பள்ளிவாசலில் சிலைகளை வைத்தது; தொழுகை நடப்பதைத் தடுத்தது; பூட்டைத் திறந்து பூஜைக்கு வழிவிட்டது; அடிக்கல் நாட்டிட அனுமதித்தது.

இடிப்பதைத் தடுக்கத் தவறியது. அந்த இடத்தில் கோயில் கட்ட அனுமதித்தது. எல்லாவற்றிக்கும் காங்கிரஸ் கட்சியே பொறுப்பு. இப்போதைய தீர்ப்புக்கும் அதுவே பொறுப்பு.

அயோத்தியில் வாழ்பவர்கள் வகுப்புவாதிகளல்ல. ஆதலால் தான் அவர்கள் அடுத்து வந்த தேர்தலில் (1989) எல்லா பாரதீய ஜனதா வேட்பாளர்களையும் தோல்வியுறச் செய்தார்கள். இந்துத்துவாவின் பெயரில் வந்த வெளி மாநிலத்தவர்கள்தாம் இத்தனையையும் செய்தார்கள்."

ஹாஜி மஹ்பூப் அஹ்மத் என்பவர் இப்படிக் கூறுகின்றார்:

"1992 நவம்பர் முடிவில் நான் பிரதமருக்கு ஒரு தந்தியை அனுப்பினேன். அதில் பாபரி பள்ளிவாசலுக்கு ஆபத்து காத்திருக்கின்றது என்பதைச் சொன்னேன். அத்தோடு முஸ்லிம்களின் உயிர்களும் உடைமைகளும் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றன என்பதையும் எடுத்துச் சொன்னேன்."

1992 டிசம்பர் 6ம் நாள் 10.30 மணிக்கு நான் பிரதமரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். பிரதமர் மிகவும் 'பிசியாக இருக்கின்றார்' என்று சொல்லிவிட்டார்கள். எனினும் கரசேவகர்கள் பள்ளிவாசலை நெருங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லி விட்டேன். இந்தச் செய்தியை குமாரமங்கலம் அவர்களிடம் சொல்லிவிடும்படி சொன்னார்கள். நான் குமாரமங்கலம் அவர்களிடம் சொல்லிவிட்டேன். குமாரமங்கலம் நான் ஏதாவது செய்கின்றேன் என்றார்.

இதை நான் செய்து கொண்டிருந்த போது கரசேவகர்கள் 16 வயதான என் மகனை அடித்துக் கொன்றார்கள். அவனை என் வீட்டுக்கு முன்னேயே எரித்தார்கள். அவனது அழுகுரலைக் கேட்டு கொண்டிருந்த நான் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தேன். பின்னர் கரும் புகை மண்டலம் கிளம்பிற்று. எங்கள் வாழ்வை அது கருக்கிற்று.

முஸ்லிம்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும் பைத்துல் முகத்தஸை முஸ்லிம்களிடமிருந்து பறித்துப் பாய்ந்த படைகளும் இதே போன்ற கொடுமைகளையே செய்தன. ஆனால் முஸ்லிம்கள் அதை ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைமையில் மீட்டபோது யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை. யூதர்களுக்கே எந்தக் கெடுதியும் செய்யவில்லை. கிறிஸ்தவர்கள் அவர்களின் தனியார் சட்டப்படி வாழ அனைத்து வசதிகளையும் அய்யூபி அவர்களிடம் பெற்றார்கள்.

இந்த வரலாறுகளை வஹீத்துத்தீன் கான் அவர்களும் அவர்களுக்கு ஆலவட்டம் சுழற்றுபவர்களும் கவனிக்கட்டும்.

# பாபரி மஸ்ஜித் வரலாற்றில் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநியாயங்கள்

வரலாற்றின் வாயில் வழி நுழைந்தால், 1788களில் ஆங்கிலேயர்களின் சதி ஒன்று பட்டவர்த் தனமாக வெளிப்படும்.

அது தங்கள் காலணி ஆதிக்கம் இந்தியாவில் நிலைக்க மிகக் கேவலமானதொரு வழி முறையைக் கையாண்டார்கள் என்பதே! முதன் முதலில் பிரான்ஸ் நாட்டின் டிஃபின்தாலர் : Tiffen Thaler (Jesuit Priest) பாதிரி ஒருவரை விட்டு ஓர் பொய்யை இட்டுக் கட்டினார்கள்.

அந்தப் பொய், பாபரி பள்ளிவாசல் இருக்குமிடத்தில் தான் இராமர் பிறந்தார் என்பதே!

1788களில் தாம் ஆங்கிலேயர்கள் முஸ்லிம்கள் இந்துக்கள் ஆகியோரின் ஒருங் கிணைந்த எதிர்ப்பைச் சந்திக்க மாட்டாமல் திணறிக் கொண்டி ருந்தார்கள்.

தெற்கில் திப்புசுல்தானும் வடக்கில் இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த முஸ்லிம் மன்னர்களிடமிருந்தும் பயங்கர எதிர்ப்பு ஆங்கிலேயர்களுக்கு.

எதிர்ப்பு எனச் சொன்னால் நாலுபேரோ, நானூறு பேரோ ஓரிடத்தில் குழுமி நின்று கோஷம் போட்டார்கள் என்றில்லை.

மாறாக ஆயுதந்தாங்கி போராடி ஆங்கிலேயர்களை பிணமாக வீழ்த்திக் கொண்டி ருந்தார்கள். ஆங்கிலேயர்கள் மரணத்தின் மடியில் வீழ்ந்து கொண்டே இருந்தார்கள்.

இந்துக்களையும் முஸ்லிம் களையும் பிரித்தாக வேண்டும் என்பதில் முனைப்போடிருந்த ஆங்கிலேயர்களுக்கு விலைப் போக இங்கே சில பாசிச எண்ணங்கொண்ட இந்துக்கள் காத்துக் கிடந்தார்கள்.

அவர்களைக் கொண்டு பாபரி பள்ளிவாசல் இருக்குமிடத் தில் தான் இராமர் பிறந்தார் என்ற வதந்தியைப் பரப்பினார்கள் ஆங்கிலேயர்கள்.

இதை அப்போதைய இந் துக்களும் நம்பவில்லை. முஸ்லிம் களும் நம்பவில்லை.

எனினும் ஒரு ஆராய்ச்சி யாளர் இந்தக் கூற்று உண்மையா? என்பதைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். இப்படி ஒரு ஆய்வை மேற்கொள்ள இவரை யாரும் கேட்டுக்கொள்ளவில்லை. அவரே இந்த ஆய்வை மேற் கொண்டார்.

இந்த ஆய்வாளர் ஸ்காட் லாந்து என்ற நாட்டைச் சார்ந்த பிரான்சிஸ் பச்சானன் (Frnachis Buchanan).

இவர் அயோத்தியாவுக்கே சென்று இந்த ஆய்வை மேற் கொண்டார். 1810இல் இவர் வெளியிட்ட அறிக்கையில் பாபரி பள்ளிவாசல் இருக்குமிடத்தில் தான் இராமர் பிறந்தார் என்பது ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய் என்பதைத் தெளிவுப்படுத் தினார். (Source: Interview with Professor D.N.Jha Frontline Octobner 22,2010)

இந்த உண்மையை டி.என். ஜா என்ற வரலாற்றுப் பேரா சிரியர் தனது எழுத்துக்கள், பேச் சுக்கள், பேட்டிகள் இவற்றில் மிகவும் விளக்கமாகக் குறிப் பிட்டுள்ளார்.

ஆய்வாளர் பிரான்சிஸ் பச்சானனுடைய ஆய்வு அன்று இட்டுக்கட்டப்பட்டு புழக்கத்தில் விடப்பட்ட பொய்யை வதந்தியை மண்மூடிப் போகச் செய்தது.

உண்மையைச் சொன்னால் இந்துக்களும் - முஸ்லிம்களும், ஆங்கிலேயே ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிப்பதில் கவனமாக இருந்தார்களே அல்லா மல் இது போன்ற வதந்திகளுக்கு வால் பிடித்து சொந்தநாட்டு மக்களையே பிளந்து போட்டு ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரை பலவீனப் படுத்திட விரும்பவில்லை.

ஆனால் ஆங்கிலேயர்கள், தங்களுக்குகெதிராக இந்துக் களிடமிருந்தும் முஸ்லிம்களிட மிருந்தும் வரும் எதிர்ப்பை இல்லாமலாக்க இந்துக்களையும் முஸ்லிம்களையும் மோத விடு வதே ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தனர். அதனால், தங்கள் கைகளில் சிக்கிய பாசிச எண்ணங்கொண்ட இந்துக்களை

முஸ்லிம்களுக் கெதிராகத் திருப்பிக் கொண்டே இருந்தார் கள். அதற்கு பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார் என்ற பிரச்சாரத்தை இடைவிடாமல் செய்து வந்தார்கள்.

ஆங்கிலேயர்கள் இதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றார் கள். 1855இல் இந்த பொய் பிரச்சாரத்தை மையமாகக் கொண்டு ஒரு இந்து முஸ்லிம் கலவரம் வெடித்தது. இது ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி.

இதனால் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கும் அநீதிக் கும் எதிராக இந்துகளும் முஸ்லிம் களும் ஓரணியில் திரளுவதை ஒடித்துப் போட்டிடலாம் எனக் கருதினார்கள்.

ஆனால் அது அதிக நாள்கள் நீடிக்கவில்லை.

1857இல் (அதாவது 1855 கலவரம் முடிந்த இரண்டே ஆண்டுகளில்) சிப்பாய் கலகம் நடைபெற்றது. இதையே இந்தியாவின் முதல் விடுதலைப் போர் எனப் பின்னாளில் பேசினார்கள். இதில் முஸ்லிம்கள் தலைமையில் இந்துக்களும் நின்று போர்புரிந்து ஆங்கிலேயர் களை கதிகலங்கச் செய்தார்கள்.

இது ஆங்கிலேயர்களின் கோபத்தை ஒட்டு மொத்தமாக முஸ்லிம்கள் மேல் திருப்பி விட்டது.

பின்னர் தாங்கள் மேற் கொண்ட ஆய்வில் சிப்பாய் கலகம் என்பது முஸ்லிம்கள் ஏற்பாடு செய்த ஜிஹாத் என கண்டு பிடித்தார்கள்.

மேலும் விவரங்களுக்கு பார்க்க **வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2008.**

இந்தக் கண்டுபிடிப்பு களுக்குப் பிறகு நான் ஒரு முஸ்லிமை எங்கே கண்டாலும் சுடுவேன் என அறிவித்தார்கள் ஆங்கிலேயர்கள் (ஆதாரம்: Muslims India by Abul Hasan Ali. Nadvi)

சிப்பாய்க் கலவரம் ஆங்கி லேயர்களுக்கு அதிர்ச்சியைத் தந்த தால் அவர்கள் இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்தே ஆக வேண்டும் என்பதில் முனைப் போடு நின்றார்கள்.

பாசிச சிந்தனை கொண்ட இந்துத்துவ வாதிகள் அதற்குப் பெருமளவில் துணை நின்றார்கள். (இவர்கள் அதாவது பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார் என்று வதந்தியை வழிபடுபவர்கள் (அன்று மின்றும் இவர்கள் செய் யும் தேசிய சேவை இதுதான்.)

பின்னர் 1881 முதல் இந்துத் துவவாதிகள். இந்த வதந்தியை நீதிமன்ற ஆவணங்களாக ஆக்கிட முயற்சிகளை மேற்கொண்டார் கள்.

1885 இல் இவர்கள் தொடுத்த வழக்கில், இராமர் பாதம் பதிந்த 'இராமர் சபுத்ரா' ஒன்று இருப்ப தாக வழக்கொன்றை பைஜாபாத் துணை நீதிமன்றத்தில் தொடர்ந் தார்கள்.

இவர்களின் கூற்றை நீதிமன்ற ஆவணமாக மாற்றிட காத்துக்கிடந்தார்கள் ஆங்கிலேயர் கள். தங்களுக்கு எல்லாவகையிலும் உதவிவரும் ஆங்கிலேயர்கள். இதிலும் பெரிய அளவில் உதவி செய்வார்கள் என்ற அழுத்தமான நம்பிக்கையின் கீழ்தான் இந்துத் துவாதிகள் அன்று வழக்கைத் தொடுத்தார்கள்.

அதே போல் ஆங்கிலேயர் கள் அவர்களுக்கு ஓர் இமாலய உதவியைச் செய்தார்கள். அந்த உதவி பள்ளிவாசல் வளாகத்திற்கு வெளியே 'ராம் சாபுத்ரா' என் றொரு இடம் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்கள்.

இந்த உதவியைச் செய்த ஆங்கிலேயர்கள், அங்கே, அதாவது ராம் சாபுத்ராவை மையப்படுத்தி எந்த கட்டடத்தை யும் கட்டக் கூடாது எனக் கூறி விட்டார்கள். காரணம், முஸ்லிம் கள் அந்த வழியே பள்ளிவாசலு க்குச் செல்வார்கள். கலவரங்கள் வரலாம் எனக் கூறிவிட்டார்கள்.

அதாவது ராம் சாபுத் ராவையும் நியாயப்படுத்தி விட்டார்கள். கோயில் கட்டு வதையும் தடுத்துவிட்டார்கள்.

இப்படிக் குழப்பியதற்கு காரணம் ஆங்கிலேயர்கள் இந்துக் களும், முஸ்லிம்களும் தங்கள் தயவின் கீழ் வந்துவிட வேண்டும். தங்களை எதிர்ப்பதைப் பற்றிய எண்ணங்களையே விட்டுவிட வேண்டும் என்பதே!

இந்துத்துவவாதிகள், ஆங்கிலேயர்கள் ராம் சாபுத்ரா வை ஆவணப்படுத்தி தந்து விட்டார்கள் என மகிழ்ந் தார்கள். தொடர்ந்து கோயில் கட்ட ஆங்கிலேயர்களிடம் மன்றாடி னார்கள்.

முஸ்லிம்கள் எங்கே கோயில் கட்ட அனுமதி வழங்கி தங்கள் அமைதியைக் கலைத்து விடுவார்களோ என கதி கலங்கி, கோயில் கட்ட அனுமதி வழங்கக்

கூடாது என ஆங்கிலேயர்களைக் கோரினார்கள்.

இந்துத்துவவாதிகள் கோயில் கட்ட அனுமதி கேட்டு மேல் முறையீடு செய்தனர். இப்போதுதான் மொத்த பிரச்னையும் முஸ்லிம்கள் புரிந்து கொண்டார்கள். நியாயத்திற்காகப் போராடினர்.

இந்த மேல் முறையீட்டில், பைஜாபாத் மாவட்ட தலைமை நீதிபதி எப்.ஈ.ஏ. செரமியர் (Cheramir) மார்ச்சு 18,1886இல் முஸ்லிம்கள் புனிதமாகக் கருத்தும் ஓர் இடத்தில் கோயில் கட்டவேண்டும் எனக்கோருவது அர்த்தமற்றது. 356 ஆண்டுகளாக முஸ்லிம்கள் புனிதமாகக் கருதும் இடத்தில் கோயில் கட்ட எந்த விதத்திலும் அனுமதி வழங்க முடியாது எனக் கூறி இந்துத்துவ வாதிகளின் முறையீட்டை முற்றாக தள்ளுபடி செய்தார்.

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அப்போது 'ராம் சாபுத்ரா' என்ற பாபரி பள்ளிவாசல் வளாகத்திற்கு வெளியே உள்ள இடந்தான் பிரச்னையானதே அல்லாமல் பாபரி மஸ்ஜித் நின்ற இடமே பிரச்னையாகவில்லை.

இருந்தாலும் ஆங்கிலேயர்களின் தூண்டுதலால் முஸ்லிம்களுக்கெதிரான கெடுபிடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்துத்துவவாதிகள் இரண்டாவது மேல் முறையீடு ஒன்றை தாக்கல் செய்தார்கள்.

முஸ்லிம்கள் பிரச்னையை ஆழ்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். தங்கள் வாதங்களை முறையாக முன் வைத்தார்கள்.

அவற்றை ஆய்வு செய்த டப்ள்யூ.எங்(W. Yong) என்ற அவ்த் பகுதியின் நீதித்துறை ஆணையர் அறுதியாக நவம்பர்,1, 1886 இல் இப்படிக் கூறினார்.

There was nothing whatsoever on record to show that the Hindu plaintiff was in any sense the proprietor of the land in question. The civil authorities have promptly dismissed the plaintiffs claim.

அதாவது,

"குறிப்பிட்ட இடம், இந்து மனுதாரருக்குத்தான் சொந்தம் எனக்காட்டிட எந்த ஆவணமுமில்லை. அவர்கள் எந்த விதத்திலேயும் அந்த இடத்திற்கு சொந்தக்காரர்களல்ல. கீழ்நீதிமன்றத்தார் அவர்களின் மனுவை நிராகரித்தது சரியே!"

இந்தத் தீர்ப்பில் ராம் சாபுத்ரா என்பது எந்த விதத்திலும் இந்துத்துவவாதிகளுக்குச் சொந்தம் எனக் கூறவில்லை.

இந்தத் தீர்ப்பிற்குப் பின்னரும் இந்துத்துவவாதிகள் தங்கள் அடாவடித்தனங்களை தொடர்ந்தார்கள்.

விடுதலை கிடைத்த நாட்களுக்குப் பின்னர் 1949 டிசம்பர் 22/23 அன்று இரவு இரண்டு சிலைகளை இரவோடு இரவாகப் பள்ளி வாசலுக்குள் வைத்தார்கள்.

டிசம்பர் 22 அன்று இஷா தொழுகை என்ற அன்றைய நாளின் கடைசி தொழுகையை பாபரி பள்ளிவாசலில் முடித்து விட்டு, 23ஆம் நாள் காலையில் பஜ்ர் என்ற வைகறை தொழுகைக்கு வந்த முஸ்லிம்கள் கற்களால் தாக்கப் பட்டார்கள். அதையும் மீறி, அவர்கள் பாபரி மஸ்ஜிதில் தொழுகை நடத்த சென்றார்கள். ஆனால் பள்ளிவாசலுக்குள் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன.

சிலைகளைக் கண்ட முஸ்லிம்கள் அதிர்ச்சியடைந்தார்கள். விவகாரம் காவல் துறையின் கவனத்திற்கு சென்றது.

பைஜாபாத் துணை காவல்துறை ஆணையர் கே.கே. நய்யார் வந்தார் சிலை இருந்த பகுதிக்குப் பூட்டுப் போட்டு பிரிதொரு வாசல் வழி இந்துக்களை சிலைகளுக்கு பூஜை செய்ய அனுமதித்தார். முஸ்லிம்களைத் தொழ விடாமல் தடுத்தார்.

பின்னர் பிரதமர் நேரு தலையிட்டார். ஆனால் சிலைகளை அகற்றிட அவர் போட்ட ஆணையை அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் வழி மறித்தார். அனைத்தையும் தாண்டி சிலைகளை வைத்தவர்கள் மீது எஃப். ஐ.ஆர். என்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவும், சிலைகளை அகற்றிடவும் போட்ட உத்தரவு இதே கே.கே. நய்யாருக்குத்தான் வந்தது.

பெயரளவிற்கு ஒரு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது. ஆனால் சிலைகள் அகற்றப்படவில்லை.

பின்னர்தான் தெரியும் கே.கே. நய்யார் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் உறுப்பினர் என்பது. (Front line 22,2010)

**- அநீதிகள் அடுத்த இதழிலும்**

**இன்ஷாஅல்லாஹ்**

***குறிப்பு : 2009 டிசம்பர் வைகறை வெளிச்சத்தில் பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் என்ற கட்டுரையையும் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.***

# கஷ்மீர் தீர்வு என்ன?

கஷ்மீர் மக்கள் சந்திக்கும் இன்னல்களுக்கு அளவே இல்லை.

அவர்களைக் கொன்று குவிப்பவர்கள் , பெண்களைக் கற்பழிப்பவர்கள், வேறு யாருமில்லை பாதுகாப்புப் படையினரே!

நமது நாட்டை பி.ஜே.பி. ஆட்சிச் செய்ய தலைப்பட்ட நாள் முதலே கஷ்மீரை தீவிரவாதிகளின் பகுதி என்றும், அதை பராமரிக்க சிறப்பான படைகளும் பயிற்சிகளும் தேவைப்படுகின்றன என்றும், கூறி கஷ்மீரை இஸ்ரேலியர்களின் கைகளில் ஒப்படைத்தது பாரதீய ஜனதா கட்சி அரசு.

அன்று முதல் இன்றுவரை கஷ்மீரில் இளைஞர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள்.

இன்றளவும் 12,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமற் போயிருக்கின்றார்கள்.

கணவன் வேலைக்குப் போனான் திரும்பி வருவான் என எதிர்பார்த்தப் பெண்கள் கணவனை இன்றளவும் திரும்பப் பெறவில்லை.

காவல் துறையினர் விசாரணை என்ற பெயரில் அழைத்து சென்ற ஆண் பிள்ளைகள் திரும்பவே இல்லை.

கஷ்மீரில் மட்டுந்தான் உலகில், காணமற்போன குழந்தைகளின் பெற்றோர்கள் நடத்தும் இயக்கம் ஒன்று செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது.

இப்படிக் காணமற் போனவர்களில் பலர், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் கடத்திவரப்பட்டுக் கொலை செய்யப்படுகின்றார்கள்.

இந்தக் கொலைகளைக் காவல் துறையினரே முன்னின்று நடத்துகின்றார்கள்.

அவற்றிற்கு என்கவுண்டர் எனப் பெயர் வைத்துக் கொள்கின்றார்கள்.

நமது இந்தியத் திருநாட்டில் மத்திய உளவுத்துறை ஐந்து இடங்களில் இரகசிய சித்திரவதைக் கூடங்களை நடத்துகின்றது.

இந்தச் சித்திரவதைக் கூடங்களில் மிகையாகச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள். கஷ்மீரிலிருந்தும் நேப்பாளிலிருந்தும் கடத்திவரப்படும் முஸ்லிம் இளைஞர்கள்.

இந்த சித்திரவதைக் கூடங்களில் சித்திரவதைகளை ஏன் செய்கின்றார்கள் மத்திய உளவுத் துறையினர்.

மத்திய உளவுத்துறையின் ஏற்பாட்டில் அல்லது வழிகாட்டுதலின் கீழ், இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள் வைக்கும் குண்டுகளுக்கும் வெடித்து சிதறும். அப்பாவி இந்துக்களின் பிணங்களுக்கும் பொறுப்பேற்கத்தான்.

இப்படி கஷ்மீர் இளைஞர்களை இல்லாமலாக்கிவிட்டு பெண்களை கற்பழித்துக் கொண்டிருக்கின்றது நமது இராணுவமும் அதற்கு பக்கபலமாக நிற்கும் உளவுத்துறையும்.

கடந்த வருடம் சோபியான் என்னுமிடத்தில் ஆயிஷா, நிலோபர் என்ற இரண்டு பெண்களைக் கற்பழித்தவர்கள் மீது இந்திய அரசு அல்லது கஷ்மீரில் கொட்டம் நடத்தும் காங்கிரஸ் கூட்டணி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

இப்படி காவல்துறையும் பாதுகாப்புப்படையும் செய்யும் கபளீகரங்களைத் தட்டிக் கேட்க முடியாது. காரணம் அங்கே கஷ்மீரில் இவர்கள் செய்யும் கொலைகளிலிருந்தும் கற்பழிப்புகளிலிருந்தும் இவர்களைப் பாதுகாக்க சிறப்புச் சட்டம் ஒன்று இருந்து கொண்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தைப் பற்றிய விரிவான விளக்கம் ஒன்றை வைகறை வெளிச்சம் அக்டோபர் 2009 இதழில் தந்திருக்கின்றோம்.

முஸ்லிம்களே இல்லாத கஷ்மீர் ஒன்றை உருவாக்கிட மத்திய அரசு திட்டம் வைத்திருக்கின்றது என பாத்திமா ஹுஸைன் என்ற எழுத்தாளர் குறிப்பிடுவது உண்மைதான் என ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அங்கே - கஷ்மீரில் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுகின்றார்கள்.

மட்டுமல்ல, ஒரே கிராமத்தில் கூட்டாக புதைக்கப்பட்ட பிணங்கள் 900 அகழ்ந்தெடுக்கப்பட்ட கோரமும் கஷ்மீரில் தான் நடந்தது.

இதில் காணாமல் போனவர்கள், என அரசு பதிவேட்டில் பதியப்பட்டிருந்த இளைஞர்கள் ஏராளமானோர் உண்டு.

இத்தனையும் பாதுகாப்புப் படையினர் செய்யும் போது அதைத் தட்டிக் கேட்டால் “இராஜகுத்தம்” வந்துவிடும் எனப்

பேசுவது முட்டாள்தனத்தின் முதிர்ச்சியைத் தான் காட்டும்.

ஒரு சிறு தகராறில் மக்கள் தங்கள் எதிர்ப்பைக்காட்டிட வீதிக்கு வந்தால், அவர்களைத் துப்பாக்கியால் சுடுவது, பல இளைஞர்களைப் பிணமாக்குவது.

இந்த துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து தங்கள் எதிர்ப்பைக் காட்ட வீதிக்கு வந்தால் அவர்கள் மேல் மேலும் துப்பாக்கிச் சூடு நடத்துவது.

அதையும் எதிர்க்க வீதிக்கு வந்தால் இன்னும் பல இளைஞர்களைப் பிணமாக்குவது.

காரணம் கேட்டால் கல்லால் அடித்தார்கள் என பட்டாளத்து பயில்வான்கள் பதில் சொல்லுகின்றார்கள்.

குடிமக்கள் கல்லால் அடித்தால் அதை ஏ.கே. 47 துப்பாக்கிகளைக் கொண்டு எதிர்கொள்ளும் பாதுகாப்புப் படை இந்தியாவில் மட்டுந்தானிருக்கின்றது.

இங்கே - கஷ்மீரில் - யூதர்களின் நிருவாகந்தான் நடக்கின்றது என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டு.

பாலஸ்தீனிலும், யூதர்கள் இளைஞர்களை மட்டுமே குறி வைத்துக் கொலை செய்கின்றார்கள். நோக்கம், அடுத்தத் தலைமுறையை அடியோடு அழிப்பது.

அதைத்தான் கஷ்மீரிலும் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

'AFSPA' என்ற ஆயுதந் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகார சட்டத்தைப் பின் வாங்குங்கள் என்ற நமது மனித உரிமை ஆர்வலர்களின் - குரல்கள் இன்னும் நமது மத்திய அரசாங்கத்தில் காதுகளில் விழவில்லை.

இந்தச் சட்டந்தான் அவர்களுக்குப் பாதுகாப்பையும் எல்லோரையும் கொலை செய்யும் நெஞ்சுரத்தையும் தந்து கொண்டிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களின் உயிரை பறித்த பின். ஆயிரக்கணக்கான இளம் பெண்களின் கற்பை பறித்து உயிரையும் பறித்தபின் அது பற்றி பரிசீலிக்கப்படும் எனக் கூறும் பச்சோந்தி அரசொன்று மத்தியிலும், அதன் பினாமியாக (கஷ்மீர்) மாநிலத்திலும் பெற்றிருக்கின்றோம்.

இந்நிலையில் அந்த மக்கள் தங்களை முற்றாக விடுவித்துக் கொள்வதுபற்றி சிந்திக்கத் தலைபட்டு விட்டார்கள்.

அரசு அவர்களின் வெந்த புண்ணிலே வேலை பாய்ச்சுவதைப் போல், கஷ்மீரிலிருந்து வெளிவந்த அல்லது வெளியே அழைத்து வரப்பட்ட பண்டிட்களுக்கு பணத்தை அள்ளிக் கொட்டி பவிசாக வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. அதே அரசு கஷ்மீர் வீதிகளில் இராணுவத்தாலும், பாதுகாப்புப் படையாலும் பிணமாகும். இளைஞர்களுக்கும் கற்பை இழக்கும் கன்னியர்க்கும் சாதாரண நீதி கூட கிடைக்காமல் செய்து விடுகின்றது.

ஆகவே எங்கும் அநீதி. எதிலும் அநீதி என கஷ்மீர் மக்களை விரக்திக்குள் தள்ளி விட்டோம்.

அவர்கள் இன்று 'விடுதலை' எனப் பேசுகின்றார்கள் என்றால் அதற்கான முழு பொறுப்பையும் மத்திய, மாநில அரசுகளே ஏற்க வேண்டும்.

அந்த மக்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தும் மக்கள் மேல் தேசத்துரோக குற்றத்தை சுமத்த முனையும் ஈனப் புத்தியைக் கைவிட வேண்டும்.

நமது காவல் துறையினரை அதிரடி தாக்குதல் வழி கொலை செய்யும் மாவோயிஸ்டுகளிடம் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் எனக் கூறுகின்றோம். ஆனால் கஷ்மீரில் வீதிக்கு வந்தாலே அப்பாவிகளைப் பிணமாக்குகின்றோம் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஏன் இந்தப் பாரபட்சம்?

# அருந்ததி ராய் பேச்சும் பாயும் சட்டமும்

அருந்ததி ராய் என்றொரு பிரஞ்கை உள்ள மனித உரிமை போராளி இந்தியாவில் நீதிக்காகப் போராடி வருகின்றார்.

நர்மதா அணைத்திட்டத்தால் வீடுகளையும் விளைநிலங்களையும் இழக்கவிருந்த கிராமத்து மக்களுக்காகப் போராடினார் அந்நாளில்.

வெந்ததை உண்போம் - விதி வந்தால் சாவோம். வேறெதையும் அறியோம் என இருந்த மக்களின் வீடுகளை, விளைநிலங்களை அணைக்கட்டி வெள்ளத்தால் நிரப்பும் திட்டத்தை, அதிகார வர்க்கம் கொண்டு வந்த போது, அந்த ஆபத்தையும், தாங்கள் அனைத்தையும் இழப்போம் என்பதையும் அந்த மக்கள் அறியாமலிருந்தார்கள்.

அந்த மக்களுக்காகப் போராடினார் அருந்ததி ராய்.

இது போன்ற வாய் இல்லா பூச்சிகளுக்காகப் போராடியதற்காக சிறைதான் பரிசு என வந்த போது தயங்காமல் சிறை சென்றார்.

2001 டிசம்பர் 13 இல் நமது நாடாளும் மன்றத்தைத் தாக்கிட அப்போதைய அதிகாரவர்க்கம் செய்த சதியை அம்பலப் படுத்தியவர் அருந்ததிராய் அவர்கள்.

நாடாளும்மன்றத்தைத் தாக்கிட வந்தார்கள் என்ற பழியை முஸ்லிம்களின் மேல் போட்டு, எஸ்.ஏ.ஆர். ஜிலானி என்ற டில்லி பல்கலைக்கழகப் பேராசிரியரை தூக்கில் போட நீதிமன்றம் முனைந்தபோது அந்தத் தீர்ப்புக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு களம் கண்டவர். அதற்கான நிதி உதவிகள் தேவைப்பட்டபோது தனது சொந்தப் பணத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சங்களை முதல் தவணையாகத் தந்தவர்.

இவர் அண்மையில் டெல்லியில் நடந்த கஷ்மீர் குறித்த கருத்தரங்கம் ஒன்றில் பேசிடும் போது கஷ்மீர் மக்கள் விடுதலையை தேடுகின்றார்கள் என அடித்துப் பேசினார்.

உடனேயே பத்திரிக்கைகள் கஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி அல்ல எனப் பேசிவிட்டார் எனப் பூகம்பத்தைக் கிளப்பினார்கள். பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் உடனேயே அருந்ததிராயைக் கைது செய்ய வேண்டும் என்றார்கள். காரணம் இந்தியாவுக்கு எதிராகப் அவர் பேசிவிட்டார் எனக் கூறினார்கள்.

உடனேயே உள்துறை அமைச்சர் நாங்கள் அருந்ததி ராயின் உரையைப் பரிசீலித்து வருகின்றோம் என்றார். பின்னர் சட்டம் ஒழுங்கு மாநில அரசாங்கத்தின் பணி எங்களுக்கில்லை அந்த கவலை என்றார். பின்னர் அருந்ததி ராயை ஒன்று செய்யப் போவதில்லை என்று முடித்தார்கள்.

**பாரதீய ஜனதாவும் தேசவிரோதம்**

பாரதீய ஜனதாவுக்கு தேச விரோத செயல்களைப் பற்றிப் பேசிட எந்தத் தகுதியுமில்லை.

காரணம் அதன் மூல அமைப்பாகிய ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத் சானதன் சாஸ்தா போன்ற அமைப்புகள் தாம் நாட்டின் பல்வேறு இடங்களில் குண்டுகளை வைத்து, அப்பாவி இந்துக்களையும் முஸ்லிம்களையும் கொலை செய்திருக்கின்றார்கள்.

கோடிக்கணக்கான அரசு பணத்தைத் விரயம் செய்திருக்கின்றார்கள்.

இன்னும் ஒரு படி மேலேபோய் இங்கே இருக்கின்ற அரசையும் அரசியல் சாசன சட்டத்தையும் எடுத்துவீசி விட்டு ஒரு இரத்தப் புரட்சியின் மூலம், ஓர் இந்து ராஷ்டிராவை கொண்டு வர இஸ்ரேலை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றார்கள்.

இப்படியொரு மாபெரும் தேச துரோகத்தை படிப்படியாக அரங்கேற்றிக் கொண்டிருக்கும்

இவர்கள், மக்கள் உணர்வை வெளிப்படுத்திய அருந்ததி ராயை கைது செய் என்பதா? அதைக் கேட்டு சில கோட்டான்கள் கொக்கரிக்கின்றன.

ஆனால் பொட்டில் அறைந் தாற் போல் அருந்ததிராய் அதற் குப் பதில் சொல்லி இருக்கின்றார்.

# கைது செய் : என கூச்சலிட்டவர்களுக்கு அருந்ததி ராயின் பதில்



"நான் கஷ்மீர் சீரி நகரிலிருந்து கொண்டு இதனை எழுதுகின்றேன். இன்றைய பத்திரிகைகள் என்னை கைது செய்யலாம் எனச் செய்திகளை வெளியிட்டுள்ளன. காரணம் நான் கஷ்மீர் பற்றி அண்மையில் பொதுக் கூட்டங் களில் பேசியதே! நான் பேசியவை லட்சக்கணக்கான மக்கள் இங்கு தினமும் பேசுவதுதான். அதையே பல ஆண்டுகளாக எழுத்தாளர் களும் விமர்சகர்களும் சொல்லி வருகின்றார்கள். என்னுயை பேச்சை முறையாக பார்ப்பவர் கள், அந்த பேச்சு நீதிக்காகக் கொடுக்கப் பட்ட குரல் தான் என்பதைப் புரிந்து கொள்வார் கள், இந்தப் பூமியில் மிகவும் குரூரமான இராணுவ கெடு பிடிகள் நிறைந்த, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட, பகுதி யில் கஷ்மீர் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கஷ்மீர் மக்களுக் காகவும், கஷ்மீருக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து பண்டிட்களுக்காகவும், தலீத் இராணுவ வீரர்களுக்காகவும், (இந்த தலீத் இராணுவ வீரர்கள், கடலூர் (தமிழ்நாட்டிலுள்ள) என்ற ஊரிலுள்ள குப்பைத் தொட்டிகளினிடையே புதைக்கப்பட்டிருந்தார்கள். நான் பேசினேன். கஷ்மீரில் நடக்கும் ஆக்கிரமிப்பிற்கு தங்கள் வரிப்பணத்தைத் தாரை வார்த்து தந்து கொண்டிருக்கும்,இந்திய குடிமக்களுக்காகவும் பேசினேன். அந்த மக்கள் அரசின் தீவிரவாத நாடாக மாறிக்

கொண்டிருக்கும் ஒரு பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் கள்.

நேற்று நான் 'சோபியான்' என்ற கஷ்மீருடைய பகுதிக்குப் பயணம் செய்தேன். இது கஷ்மீரிலுள்ள ஆப்பிள்கள் அதிகமாக விளையும் ஒரு பூமி. இங்கேதான் கடந்த வருடம் ஆயிஷா, நிலோபர், என்ற இரண்டு இளம் பெண்கள் குரூரமாகக் கொலை செய்யப் பட்ட சம்பவம் நடந்தது. இந்த இடம் 47 நாள்களுக்கு உலகின் இதரப் பகுதிகளிலிருந்து துண்டிக் கப்பட்டிருந்தது. இந்த இளம் பெண்கள், கற்பழிக்கப்பட்டு, ஒரு ஓடையில் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தார்கள்.

நான் நிலோபர் என்ற பெண்ணின் கணவர் ஷக்கீல் என்பவரை சந்தித்தேன். அவர், ஒரு கூட்டம், மக்கள் தன்னை புடை சூழ அமர்ந்திருந்தார். அவர்கள் அனைவரும் சோகத் தால் சூழப்பட்டுக் கிடந்தார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை. ஆகவே 'விடுதலை' ஒன்றே வழி என்றே நினைக்கின்றார்கள். கல்லால் அடித்தவர்களை நான் சந்தித்தேன். பாதுகாப்புப் படை யினரை கல்லால் அடித் ததிற்கு அவர்களின் கண்கள் வழி யே துப்பாக்கியால் சுட்டிருந்தார்கள். அவர்களில் பலரது நகக்கண்கள் பிடுங்கப்பட்டிருந்தன.

நான் இந்தியா உடைய வேண்டும் எனப் பேசியதாகச் சிலர் இன்றைய பத்திரிகைகளில் எழுதி யுள்ளார்கள். நான் வெறுப்பைக் கக்கும் பேச்சைப் பேசிவிட்ட தாகவும் எழுதியுள்ளார்கள்.

ஆனால், என்னுடைய பேச்சு அன்பு, பெருமை இவற்றைப் பின்னணியாகக் கொண்டு அமைந் தவை. பெண்கள் கற்பழிக்கப் பட்டுக் கொலை செய்யப்படக் கூடாது. ஆண்கள் கொலை பாதகங்களுக்கு உள்ளாகக் கூடாது. இளைஞர்களின் நகங்கள் பிடுங்கப் படக் கூடாது. அவர்கள் இந்தியர் கள் எனச் சொல்லிட வேண்டும் என்பதற்காக இப்படி யெல்லாம் அவர்களைக் கட் டாயப்படுத்தக் கூடாது என்பதற் காகத்தான் நான், அப்படிப் பேசினேன். என்னுடைய பேச்சு, நியாயம் நடைபெறும் பூமியில் வாழ்ந்திட வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தது. எழுத் தாளர்கள் தங்கள் மனம் திறந்து பேசினார்கள் என்பதற்காக அவர்களை கைது செய்ய வேண்டும் எனப் பேசுவது வெட்கக் கேடானது. நியாயம் கேட்பவர் களை சிறையில்தான் போடு வோம் என்பது மானக் கே டானது. அப்பாவிகளை கற்பழிப் பவர்கள், கொலை செய்பவர்கள் ஏழை களைக் கொள்ளையடிப் பவர்கள் இவர்கள்தாம் இந்தியா வில் சுதந்திரமாகத் திரிவார்கள் என்பது இந்தியாவின் அவ மானம்"

*அருந்ததிராய் 26.10.2010.*


**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்** **துவக்கம் 1980**

# அல்ஜாமி அத்துல் அரபிய்யா சுபுலுஸ்ஸலாம்

*மத்ரஸா தெரு, அய்யம்பேட்டை – 614201*

# அரபிக்கல்லூரி மாணவர்களுக்கு ஓர் அழைப்பு

**இன்ஷா அல்லாஹ் வருகிற 25.09.2010 ஷவ்வால் பிறை 16 சனிக்கிழமையன்று கல்வியாண்டிற்கான அட்மிஷன் நடைபெறுகிறது. இங்கு சில்சிலா நிஜாமிய்யாவின் முழுமையான பாடத்திட்டத்தினை ஒரு நாளைக்கு 7 பீரியடுகள் வீதம், ஆங்கிலம், கணிப்பொறி மற்றும் அப்ஜலுல்உலமா அரசுத் தேர்வுடன் சேர்ந்து 7 வருடப் படிப்பை ஐந்தே வருடங்களில் பூர்த்தி செய்து ஸனது (DIPLOMA) வழங்கப்படும்.**

**இது முற்றிலும் இலவச சேவையாகும்.**

**தொடர்புக்கு:**

*நாஜிர் : மல்லவி அல்ஹாஜ்*

**பி.எம். ஜியாவுத்தின் அஹ்மது பாகவி**

**தலைவர் - செயலாளர்**

**தொலைபேசி : 9443306269**

# கர்கரேயைக் கொலை செய்தது யார்?

## நூலின் புதிய திருப்பம்!

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் ஒரு வரலாற்று திருப்பத்திற்குக் கட்டியங் கூறும் நூல்.

இந்தவகையில் இந்த நூலை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொது வழக்கு நமது உச்சநீதிமன்றத்தில் அன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், கர் கரேயைக் கொலை செய்தது ஓர் உள்ளிருப்பு வேலை. ஆகவே அதனை மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

ஆனால் இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதாவது (Dismissed as withdrawn) மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக தள் ளுபடி செய்தது. எனினும் மனுதாரர் சம்மந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தை அணுகலாம் என அனுமதி அளித்தது உச்சநீதி மன்றம்.

அதே போல் இந்த நீதி மன்றத்தில் அதாவது உச்சநீதி மன்றத்தில் இந்த மனு திரும்பப் பெறப் பெற்றதாகத் தள்ளுபடி செய்ததை காரணங்காட்டி எந்த உயர்நீதிமன்றமும் இதனை ஏற்க மறுக்கக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம் கூறிற்று.


இந்நிலையில் மும்பை நீதிமன்றம் 26/11 மும்பை தாக்குதல் வழக்கு விசாரணையை விரைவு படுத்தியது. அத்தோடு நில்லாமல் உள்துறை அமைச்சர் பா. சிதம் பரம் அவர்கள் மும்பை தாக்குதல் பற்றி எந்தக் குழப்பமும் வேண் டாம், மும்பை தாக்குதல் குறித்த நீதிமன்றத் தீர்ப்பு விரைவில் வந்துவிடும் என அறிவித்தார்.

அதே போல் நாம் உச்சநீதிமன்றத்திலிருந்து மும்பை நீதிமன்றம் வருவதற்கு முன் வழக்கை முடித்து தீர்ப்பை வழங்கிவிட்டார்கள்.

எல்லாக் குற்றத்தையும் ஒன்றாக அஜ்மல் கசாப் மீது போட்டு அவனுக்கு தூக்கு தண்டனையைத் தந்து வழக்கை முடித்துவிட்டார்கள்.

இஃது நாம் மும்பை நீதிமன்றத்தை அணுகுவதில் மற்றொரு தடையை வெட்டிப் போட்டது. அஃது மும்பை நீதிமன்ற தீர்ப்புக்காக நாம் காத்திருந்தாக வேண்டும் என் றொரு நிலையை ஏற்படுத்தியது.

காத்திருந்தோம். தீர்ப்பு வந்தது. மொத்த பழியையும்




கேசாப் - இன் மேல் போட்டு அவனுக்கு மரண தண்டனை வழங்கிற்று.

ஆனாலும் கர்கரேயை யார் கொலை செய்தார்கள் என்பதை துல்லியமாகக் கூறிடவில்லை. கர்கரேயின் மேல் யாருடைய துப்பாக்கியிலிருந்த குண்டு பாய்ந்தது என்பதும் கூறப்படவில்லை.

சுருங்கச் சொன்னால் மொத்த தீர்ப்பும் மத்திய உளவுத்துறை எழுதிய தீர்ப்பைப் போலவே இருந்தது.

தீர்ப்பு, கர்கரேயை, யார் கொலை செய்தார்கள் என்பதைப்

பற்றிய விளக்கம் எதையும் சொல்லாத அதே நேரத்தில் நமது ஐயங்களை, நமது வாதங்களை மேலும் வலுப்படுத்தின.

மும்பை கீழ் நீதிமன்றம் வழங்கிய 1588 பக்கங்களைக் கொண்ட, தீர்ப்பை முழுமையாகப் படித்து தீர்ப்பிலிருந்து நமது வாதங்களை வலுவடைய செய்யும் குறிப்புகளையும் இணைத்து நாம் மும்பை நீதிமன்றத்தில் 17-8-2010 அன்று வழக்கொன்றை தாக்கல் செய்தோம்.

டெல்லியில் - உச்சநீதி மன்றத்தில் நாம் தாக்கல் செய்த பொது நல வழக்கு போலல்லாமல் இன்னும் கூர்மை கூடிய 'கிரிமனல் ரிட்' வழக்காகும்.

இதனை மும்பை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நோட்டீஸ்களை அனுப்பி இருக்கின்றது. வழக்குகள் அனைத்தும் ராதா காந்த் யாதவ் என்ற முன்னாள் பீகார் சட்டமன்ற உறுப்பினர் தான் தொடர்ந்து வருகின்றார்.

**எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் மீதும் - பெரோஸ் மீடியா மீதும் வழக்கு**

கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலை எழுதி மும்பை தாக்குதல் குறித்து பல உண்மைகளை உலகறிய செய்தவர் முன்னாள் மராட்டிய காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப்.

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் நூல் மத்திய உளவுத் துறையின் மீது நேரடியாக எய்யப்பட்ட அம்பு.

அதனை எதிர்கொள்ள வக்கற்ற மத்திய உளவுத்துறை ஓர் இந்துத்துவாவாதியை ஏவிவிட்டு ஓர் வழக்கை தொடுத்துள்ளது. அதில் முஷ்ரிஃப் அவர்கள், பொய்யை அள்ளிக் கொட்டி ஒரு நூலை எழுதி இருக்கின்றார். அவர்மீது நீதிமன்றம், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கண்ணை மூடிக்கொண்டு இந்த வழக்கை ஏற்றுக்கொண்ட கீழ் நீதிமன்றம், முஷ்ரிஃப் அவர்களுக்கும், நூலை வெளியிட்ட பெரோஸ் மீடியாவுக்கும் நோட்டீஸ் அனுப்பியது.

நீதிமன்றத்தில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள், தன்னுடைய நூலில் கூறப்பட்டிருப்பவை அனைத்தும் உண்மை என்பதை நிரூபிக்க தனக்கு வாய்ப்புதந்திட வேண்டும். அத்தோடு இந்த வழக்கையும் தான் மும்பை நீதிமன்றத்தில் தொடுத்திருக்கும் வழக்கோடு இணைத்திட வேண்டும் என வாதிட்டார்.

அதற்கு பின், வழக்குத் தொடர்ந்தவர் காணாமற் போய் விட்டார். இப்படி தடைகள் பலவற்றைத் தாண்டி நீதிக்காக நமது அநீதிமன்றங்களில் போராடிக் கொண்டிருக்கின்றார் எஸ்.எம். முஷ்ரிஃப்.

**மாலிகோனில் முக்கிய சாலைக்கு கர்கரேயின் பெயரைச் சூட்டினார்கள் முஸ்லிம்கள்.**

மாலிகோனில் நடத்திய குண்டு வெடிப்புகளினால்தான் அபிநவ் பாரத் என்ற இந்துத் தீவிரவாத அமைப்பும் அதன் தேசத்துரோக சதிகளும் உலகுக்குத் தெரியவந்தது. இதனை கண்டுபிடித்த மாவீரர்தான் "கர்கரே". கர்கரே இந்த நாட்டுக்கு ஆற்றிய பெருந்தொண்டை மனதிற்கொண்டு அவருடைய பெயரை பிராதன சாலை ஒன்றுக்கு சூட்டியுள்ளார்கள் மாலிகோன் முஸ்லிம்கள். அந்தச் சாலைக்கு இனி ஷஹீத் கர்கரே சாலை என்று பெயர்.

**எம்.ஜி.எம்.**

## உலமாக்களுக்கும் ஜமாத் டிரஸ்ட்டிகளுக்கும் அமைப்புகளுக்கும் ஒரு வேண்டுகோள்!

இன்றைய மணமுடித்த இளைஞர்களுக்கிடையே தலாக் கலாச்சாரம் பரவிவருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

தலாக் செய்யப்பட்ட பெண்ணின் வீட்டாருடன் சரியான செட்டில்மெண்ட் செய்யாமலேயே மறுமணம் செய்துகொள்ளப் பலர் முயலுவதைப் பார்க்கிறோம். இதன் விளைவாக அந்தப் பெண்ணின் பெற்றோர் பல இழப்புகளுக்கு ஆளாகினர் என்பது கண் கூடு.

அகவே இத்தகைய இளைஞர்களுக்கு என்.ஓசி. கொடுப்பதற்கு முன்னரும், தஃப்தர் பதிவேடு கொடுக்கும் சமயத்திலும், முந்திய பெண் வீட்டாரிடம் ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டுகிறேன்.

இப்படிக்கு
**கேப்டன் என்.ஏ. அமீர் அலி**
சமுதாய ஆர்வலர் மற்றும் கல்வியாளர்
சென்னை - 600 024.

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# அனுபவம் புதுமை



**இலக்கியச் சுடர்**
**ரஹ்மத் ராஜகுமாரன்**
**(கைபேசி: 9443446903)**

(நபியே!) உங்களது இறைவன் மலக்குகளை நோக்கி, “நான் பூமியில் என்னுடைய பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஏற்படுத்தப் போகிறேன்” எனக் கூறிய சமயத்தில் அவர்கள் “பூமியில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக் கூடிய சந்ததிகளைப் பெறும் அவரை அதில் உன்னுடைய பிரதிநிதியாக ஆக்குகிறாயா. . . ? நாங்களோ உன்னுடைய பரிசுத்த தன்மையைக் கூறி உன்னுடைய புகழைக் கொண்டு உன்னை புகழ்ந்து கொண்டிருக்கின்றோம்” என்று கூறினார்கள். அதற்கவன், “நீங்கள் அறியாதவற்றை எல்லாம் நிச்சயமாக நான் நன்கறிவேன்” எனக் கூறிவிட்டான். பின்பு ஆதமுக்கு எல்லாப் பொருள்களின் பெயர்களையும் அவற்றின் தன்மைகளையும் கற்றுக் கொடுத்து, அவைகளை அந்த மலக்குகளுக்கு முன்பாக்கி ‘மலக்குகளே! ஆதமுக்கு என்னுடைய பிரதிநிதி ஆவதற்குரிய தகுதி இல்லை என்று கூறினீர்களே. . . ! இதில் நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால் இதோ உங்கள் முன்னிருக்கும் இவற்றின் பெயர்களை எனக்கு அறிவியுங்கள்’ எனக் கூறினான். அவ்வாறு அறிவிக்க முடியாமல் அவர்கள் இறைவனை நோக்கி, ‘நீ மிகத் தூய்மையானவன். நீ எங்களுக்கு அறிவித்தவற்றைத் தவிர வேறு ஒன்றையும் நாங்கள் அறியமாட்டோம். நிச்சயமாக நீ மிக்க அறிந்தவனும் ஞானம் நிறைந்தவனாகவும் இருக்கின்றாய்’ எனக் கூறினார்கள். பின்னர் இறைவன், “ஆதமே! நீங்கள் அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவியுங்கள் எனக் கூறினான். அவர் அவர்களுக்கு அவற்றின் பெயர்களை அறிவித்தார்.”

**குர்ஆன் (3:30-33)**

நபி ஆதம் (அலை) அவர்களுக்கு இறைவன் அன்று கற்றுக் கொடுத்த பாடம் இன்று நம்மிடம் பதிவாகி இருக்கிறதா. . .? சொல்லிக் கொடுத்தவன் அவனல்லவா? பாடம் கேட்டுக் கொண்டது அவனின் முதல்படைப் பல்லவா? அதுவும் மற்ற படைப்பினங்களின் விமர்சனத்தை மீறி இறைவன் படைத்த படைப் பல்லவா. . .? நாமும் அவனின் படைப்புதானே, நம்மைப் படைக்கும் போது நமக்கும் தனித் தனியாக தன் ரூஹை ஊதினான் என்பதாக குர்ஆனில்,

“பின்னர் ஓர் அற்பத்துளியாகிய இந்திரியச் சத்திலிருந்து அவனுடைய சந்ததியை படைக்கின்றான். பின்னர் அதனைச் செப்பனிட்டுத் தன்னுடைய ரூஹை அதில் புகுத்தி உங்களை உற்பத்தி செய்கிறான். உங்களுக்குக் காதுகள், கண்கள், உள்ளங்கள் ஆகியவற்றை அவனே அமைக்கிறான்”

**குர்ஆன் (32:89)**

நமக்கும் தனித்தனி பாடங்கள் சொல்லப்பட்டுத் தானே இருக்கும். நம்முடைய மனதில், மூளையின் ஞாபக மடிப்புகளில் இறைவனின் ரூஹ் படிந்திருக்கிறதா. . . ? கொஞ்சம் சிந்திப்போம்.

ஒரு பறவை கூடுகட்டு வதைப் பார்க்கும் போது நாம் வியப்படைகிறோம். சிங்கம் கர்ஜிக்கும் போது, ஒரு நதி அருவியாய் விழும்போது. . . . என்று அவரவர் தகுதிக்கேற்ப வியப்படைந்து அவைப் பற்றிப் புத்தகம் எழுதுகிறோம். கவிதை வடிக்கிறோம்.

. . . . இருந்தாலும் நமக்குள்ளேயே இருக்கும் ஒரு மகத்தான வியப்பைப் பற்றி நாம் கண்டு கொள்வதே இல்லை. அது இருப்பதாக நமக்கு உணர்ச்சியே இல்லை. நான் குறிப்பிடுவது நம் மனதில் பதிந்திருக்கும் ஞாபகங்கள் திறமைகள். . . .

ஒரு பறவை இரண்டு லட்சம் வருஷமாக ஒரே மாதிரிதான் கூடு கட்டிக் கொண்டே இருக்கிறது. அதிலே எந்த முன்னேற்றமும் இல்லை. அதே மாதிரி சிங்கம் அக்காலத்திலிருந்து இன்று வரை அதே மாதிரிதான் கர்ஜிக்கிறது. ஆனால் மனிதன் அக்காலங்களில் குகைகளில் வாழ்ந்தவன் இன்று நகர்புறங்களில் 500 மாடி கட்டி வாழ ஆரம்பித்து நாளைய மனிதன் அடுத்த கிரகத்தை கட்டி ஆள முடியுமா என எதிர்ப் பார்க்கிறான். சிங்கம் கர்ஜித்து பயமுறுத்துவதை மனிதன் அணு ஆயுதம் செய்து அவனின் பய முறுத்தல் உலகையே ஆட்டிப் படைக்கிறது.

இதனால்தான் நமக்குள்ளே இருக்கும் மகத்தான வியப்பைப் பற்றி சற்று அடையாளம் கண்டு வைப்போம் என மார்ட்டன் ஹண்ட் (Morton Hunt) என்பவர் “தி யூனிவர்ஸ் வித்தின்” (The Universe within) என்கிற ஆய்வில் கீழ்க் காணும் பத்துக் கேள்விகளை சற்றுத் தீவிரமாக யோசிக்கச் சொல்கிறார்.

1. **சென்ற வாக்கியத்தின் கடைசி வார்த்தைத் தொடரை யோசித்துப் பாருங்கள். அதைப் படித்தபோது உங்கள் மனத்தில் நிகழ்ந்தது என்ன. . .?**

   **நீங்கள் பார்த்தது அச்சில், காகிதத்தில் சில வடிவங்களை, அந்த வடிவங்களை கண்மூலம் மூளைக்குள் இருக்கும் பல்லாயிரம் கணக்கான எழுத்து வடிவங்களுடன் அதை ஒப்பிடுகிறீர்கள். அந்த ‘டிக்ஷனரி’ யில் “யோசித்துப் பாருங்கள்” என்கிற வார்த்தைத் தொடர் கிட்டியதும் அதை அந்த வாக்கியத்தின் பின்னணியில் பொருத்தி “இந்த ஆளு நம்மை யோசிக்கச் சொல்றான்” என்ற அர்த்தம் பண்ணிக் கொள்கிறார்கள். இதெல்லாம் நிகழ்வது ஒரு கணத்தில்!**

2. **நீங்கள் இப்போது இருக்கும் வீட்டிற்கு முன்பு மற்றொரு வீட்டில் குடியிருந்தீர்கள் அல்லவா .. . ?அதில் வாசல் கதவு இடது பக்கம் திறந்ததா. . . . வலது பக்கம் திறந்ததா. . . ?**

   **இந்த கேள்விக்குப்பதில் சொல்ல உங்கள் மூளைக்குள் ஒரு கேள்வி அனுப்பி எங்கேயோ ஒரு மூலையில் பதிந்திருக்கும் உங்கள் பழைய வீட்டின் பிம்பத்தை தூசி தட்டிக் கொண்டு வந்து, அதன் கதவை குறிப்பாக அழைத்து வலது பக்கமா, இடது பக்கமா என்று கண்டு பிடிக்கிறீர்கள். இதற்கும் ஒரு கண நேரமே ஆகிறது.**

3. **உங்கள் வீட்டிலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்கு எப்படிப் போவது. . . . ? அதற்குப் பதில் சொல்ல உங்கள் மனதில் வீட்டிலிருந்து ஸ்டேசனுக்கு ஒரு மேப் மாதிரி அமைத்துக் கொண்டு அதை வாக்கிய ரூபத்திற்கு மாற்றுகிறீர்கள். அப்படி வாக்கிய வடிவம் தரும் போது மொழி அமைப்பு, இலக்கணம் இவைகளிலும் தவறுவதில்லை. மேலும் கேட்பவருக்கு உரிய மரியாதை கேட்பது ஆனா,பெண்ணா போன்ற விஷயங்களும் உங்கள் வாக்கிய அமைப்பை பாதிக்கின்றன.**

4. **திப்பு சல்தானின் டெலிபோன் நம்பர் என்ன. . .. ?**

   **உங்கள் மனம் இந்தக் கேள்வியே அபத்தமானது என்று நிராகரிக்கிறது அல்லவா? காரணம் திப்பு சுல்தான் காலத்தில் டெலிபோன் கண்டுபிடிக்கப் படவில்லை எனவே கேள்வி அபத்தம் என்ற முடிவுக்கு வந்தீர்களா. . ?**

5. **ஒரு தாயுக்கும் பிள்ளைக்கும் ஏற்படக்கூடிய பிணைப்பையும், அன்பையும் தெரிவிக்கும் மூன்றெழுத்து வார்த்தை என்ன? முதல் எழுத்து ‘பா’.**

   **இந்த கேள்விக்கு பதில் சட்டென்று சொல்லி விடுகிறீர்கள் ‘பாசம்’**

என்று. ஆனால் இந்த பதிலைச் சொல்ல உங்கள் சிந்தையில் நடந்த விந்தை என்ன யோசித்துப் பாருங்கள். உங்கள் மனத்தில் உள்ள பத்தாயிரம் அல்லது 20 ஆயிரம் வார்த்தைகளைத் தேடி அந்த 'பாச'த்திற்கு வந்தீர்களா. . . இல்லை. இந்த பாசம் என்கிற வார்த்தையை மட்டும் சட்டென்று கொய்து கொண்டு வந்தீர்களா. . .? இல்லை கேள்வி கேட்கும் போதே இது பாசம் தான் என்று தீர்மானித்தீர்களா. .?

6. ஆங்கிலத்தில் மணி என்ன என்று கேளுங்கள் என்று உங்களை பணித்தால், உடன் நீங்கள் "வாட் இஸ் தி டைம்" என்கிறீர்களே. . . எப்படி அது?

மொழிபெயர்ப்பு என்பது வார்த்தைக்கு வார்த்தை நிகழ்கிறதா, இல்லை வாக்கியமாக உருப்போட்டு வைத்திருக்கிறீர்களா? இது எப்படி நிகழ்கிறது.

7. ஆசிரியர்: உங்கள் மகன் 'பழம்' என்று சொல்லிக் கொடுத்தால் பயம் என்று சொல்கிறானே. . .?

தகப்பனார் : அது எங்க பயக்க வயக்கங்க. . . .

இந்த 'கடி ஜோக்குக்கு நீங்கள் சிரித்தீர்களா இல்லையா. . .? இதை ஒரு நாயிடமோ கம்ப்யூட்டரிடமோ சொன்னால் சிரிக்காது. உங்களை மட்டும் சிரிக்கவைத்த (அல்லது முறைக்க வைத்தது) எது? ஏன்?'

8. நாளைக்கு நாலு நாள் முன்னாள் வியாழக்கிழமை என்றால் நேற்றைக்கு மூன்று நாள் அப்பால் என்ன கிழமை. . .? விடை : செவ்வாய்.

இதற்கு விடை கண்டுபிடிக்க உங்கள் மனதில் படிப்படியாக சிந்திக்கிறீர்கள். அன்றாட வாழ்க்கையில் பல பிரச்சினைகளை இந்த முறையில் சிந்திக்கிறீர்கள்

9. விதைக்கு மரம் எப்படியோ அப்படி குழந்தைக்கு. . .? ரீசனிங் (Cognitive Reasoning) என்கிறார்கள்.

இந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்கிறீர்கள். இதை காக்னட்டிவ்

அதை முழுமையாக விளக்க 50 பக்கங்கள் ஆகும். சுருக்கமாகச் சொன்னால், முதலில் விதைக்கும் மரத்துக்கும் உள்ள குணாதிசயங்களையெல்லாம் அலசிப் பார்த்து அவைகளுக்குள் உள்ள ஒரு உறவை ஒருவிதிமுறையாக்கிக் கொண்டீர்கள். அந்த விதிமுறைப்படி குழந்தைக்கு யார் அல்லது எது வரும் என்று சிந்தித்துப் பார்த்து விதை மரமாகிறது. அதுபோல் குழந்தை முழு மனிதனாகிறது என்று தீர்ப்பளிக்கிறீர்கள்.

10. கீழ்காணும் பொருள்களில் குழு சேராதது எது? ரோஜா, மல்லிகை, செவ்வந்தி, தாமரை, திருவள்ளுவர். . . சட்டென்று 'திருவள்ளுவர்' என்று சொல்லிவிட்டீர்கள். . . ஆனால் எப்படி. . .? வார்த்தைகளை ஒவ்வொன்றாகப் படிக்கும் போது ஒரு பொது குணாதிசயத்தைக் கண்டுபிடித்து, அந்த குணாதிசயம் பொருந்தாத ஒரு வார்த்தையை விலக்கினீர்கள்.

இந்த அனைத்தும் தினசரி அதிசயங்கள். உங்கள் அன்றாட செயல்பாடுகளில் சிந்தனையை சகட்டு மேனிக்கு உபயோகிக்கிறீர்கள். அதன் விந்தை பற்றிக் கவலையே படாமல் மேற்கூறிய ஒவ்வொரு சிந்தனையின் போதும் உங்கள் மூளைக்குள் நியூரோன்களின் (Neurons) பாதையில் செல்லும் சிக்கலான மின் கலத்தைப் பற்றி யாரும் சிந்திப்பதே இல்லை. சிந்திக்கவும் முடியாது.

ஹார்வார்டு (Harawrd) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஷெல்ட்ன் வைட் (Sheldon White) நம் மூளையில் உள்ள இணைப்புகள் அமெரிக்காவில் அத்தனை டெலிபோன் இணைப்புகளையும் விட அறுநூறு மடங்கு அதிக சிக்கலானது என்கிறார். மற்றொரு அதிசயம். நம் மனத்திலுள்ள செய்தி வங்கி (Data Bank). மேற்சொன்ன பத்து வகை கேள்விகளுக்காக எத்தனை செய்தி வங்கிகளிலிருந்து தகவல் எடுத்தீர்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த செய்தி வங்கியைத் தான் நபி ஆதம் (அலை) அவர்களுக்கு நிரப்பிக் கொடுத்து அதை சொல்லச் சொன்னான் இறைவன். இதே கேள்வியை

மலக்குகளிடம் கேட்ட போது (2:30) நீ அறிவித்ததைத் தவிர வேறொன்றையும் நாங்களே அறிய மாட்டோம் என்றார்கள். ஆனால் நபி ஆதம்(அலை) அல்லாஹ் அறிவித்ததைக் கொண்டு மேலும் தங்களுடைய சிந்தனையால் வேறு பல வடிவங்கள்கொடுத்து அதை உணர்ந்து வெளிப்படுத்தினார் கள்! இதுதான் உண்மை.

மேற்சொன்ன விஷயமாக, கார்னெகி மெல்லான் (Carnegie Mellon) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஹெர்பர்ட் சைமன் (Herbert Simon) கூற்றுப்படி ஒரு செஸ் ஆட்டக்காரரின் மூளையில் 50,000 செஸ் வடிவங்கள் பதிந்திருக்கின்றன என்கிறார். அதைப் போல தேர்ந்த கட்டடக்கலை நிபுணர்கள் மூளை யில் 50,000 கட்டட வடிவங்கள் பதிந்திருக்கின்றன.

. . . இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் உள்ளவர்கள் மூளையில் அந்தந்த துறையின் வடிவங்கள் பதிந்திருக்கின்றன.

இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான், ஹுசைன் (ஓவியம்), ஷேக்ஸ்பியர் (நாடகங்கள்), ஷெல்லி (கவிதை) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (இயற்பியல்) ஆண்டன் செகா (சிறுகதை) மைக் டைசன் (குத்துச் சண்டை), கவாஸ்கர் (கிரிக்கெட்) ஜலாலு தீன் ரூமி (தத்துவம்) இமாம் கர்ளாவி (தத்துவவிளக்கம்) ஹலரத் அப்துல் காதிர் ஜீலானி (மெய்ஞானம்) ... இவர்கள் அனைவரும் அவரவர் துறையில் 50,000 வடிவங்களாவது மனதில் வைத்திருக்க வேண்டும் என கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டொனால்டு நார்மன் (Donald Norman) கூறுகிறார்.

ஜான் கிரிஃபித் (John Griffith) என்பவர் நாம் நம் வாழ்நாளில் ஒரு சராசரி மனிதன் ஒரு கலைக்களஞ்சியத்தைப் போல் 500 மடங்கு செய்திகளைச் சேகரித்து வைத்துக் கொள்ள முடியும் என்கிறார்.

. . . இந்த மாதிரி ஒவ்வொரு மனிதனும் தனக்கு கிடைக்கிற அனுபவ அறிவைக் கொண்டு புதுமையான வடிவங்களாக அதற்குக் கொடுத்து அதை ஒவ்வொன்றையும் தக்க தருணம் பார்த்து வெளியிடும் போதுதான் உலகமே அதனைக் கண்டு வியக்கிறது. இந்த அனுபவ புதுமையான அறிவுக்குத் தான் இறைவன்

“ஆதமுக்கு நீங்கள் பணிந்து ஸுஜூது செய்யுங்கள்” எனக் கூறியபோது இப்லீஸைத் தவிர அனைவரும் ஸுஜூது செய்தார் கள்.

**குர்ஆன் (2:34)**

உலகமாந்தர்கள் அனை வரும் செய்யும் ஒவ்வொரு சாகஸங்களும் இவர்களின் மூலப்பிதா நபி ஆதம் (அலை) அவர்களுக்கு பெருமைத் தேடி தரும் என்பதால் தான் அவர்களுக்கு ஸுஜூது செய்யச் சொன்னானோ என எண்ணத் தோன்றுகிறது.






# கர்கரேயை கொலை செய்தது யார் ?

## நிலை (GEARS CHANGE) மாற்றம்

இந்த உதாரணங்கள் நான் படித்த சில பத்திரிகைகளில் இருந்து எடுக்கப்பட்டவை. இதே சேதிகளை வெவ்வேறு நாட்களில் வெவ்வேறு பத்திரிகைகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். இந்த மிகப்பெரிய பட்டியலை நான் உங்களுக்கு தந்திருப்பதன் நோக்கம் இந்த பிராமணிய சக்திகளும் IB என்ற மத்திய உளவுத்துறையும் எவ்வளவு அழகாக புரளிகளை விதைக்கின்றன. எவ்வளவு அழ காகத் தங்கள் வலைக்குள் சோனி யா காந்தி, ராகுல் காந்தி, வருண் காந்தி, மாயாவதி, L.K. அத்வானி, நரேந்திர மோடி, 11 முக்கியமாக மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் பிரபலங்களான சச்சின் டெண்டுல்கர், சவுரவ் கங்குலி, இராகுல் டிராவிட் போன்றோரை விழ வைக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவது. மேலும் முக்கியமான கட்டிடங்களுக்கு ஆபத்து, முக்கிய கோயில்களுக்கு ஆபத்து என்ற கருத்துகளைப் பரப்பி முஸ்லிம்களுக்கு எதிராக அனைவரையும் திருப்புகின்றனர்.

ஆக, முஸ்லிம் தீவிரவாதம் என்பது பற்றிய ஆர்.எஸ்.எஸ்.ன் பிந்தைய காலத்திட்டத்தை மற்றும் விளையாட்டை IB என்ற மத்திய உளவுத்துறை மற்றும் ஏனைய உளவுத்துறை நிறுவனங்கள் விளையாடி முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றன என்பது தெள்ளத் தெளிவாகிறது. இவர்கள் பரப்பி வரும் இந்த செய்திகள் எல்லாம் ஆதாரமற்ற புரளிகள் மற்றும் இவர்கள் கற்பனையில் உதித்தவை. இல்லையெனில் குறைந்த பட்சம் இவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களில் ஏதாவது ஒரு சிலவாவது நடந்திருக்கும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இப்போது வரவேற்கத்தக்க ஒரு செய்தி என்னவென்றால், மேலே 52-வதாக சொல்லி இருக்கும் செய்தி வெளி வந்தவுடன் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் முதன் முறையாக இது குறித்து கடந்த ஏப்ரல் 2009-ல் சில ஆய்வுகளை மேற்கொண்டு ஏப்ரல் 2009-ல் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இத்தகைய அச்சுறுத்தல் எதுவும் இல்லை. ஆனால் நாம் கவனமாக இருக்க வேண்டும். உடனடியாக விமானக் கடத்தல்கள் நடக்க இருப்பதாக வந்த தகவல் உண்மை இல்லை. இது குறித்து விமான நிலையங்களுக்கு

சென்ற இதழ் தொடர்ச்சி

விடப்பட்ட எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டு விட்டன என்று கூறினார். மேலும் ஆதாரமற்ற செய்திகளை வெளியிட வேண்டாம் என்று ஊடகங்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். உள்துறை அமைச்சரின் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை வரவேற்கத் தக்கது. ஆனால் இந்தச் செய்திகளெல்லாம் அவருக்கு கீழ் இருக்கும் IB என்ற மத்திய உளவுத்துறையிலிருந்தே பரப்பப்படுகின்றன என்பதை அவர் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஆதாரமற்ற செய்திகளைப் பரப்பும் IB என்ற மத்திய உளவுத்துறையையும் கண்டிக்கவும் இத்தகைய விஷமத்தனத்தை வேண்டும் என்றே செய்யும் அவர்களைத் தண்டிக்கவும் வேண்டும்.

**பாதுகாப்புச் சோதனைகள் "முஸ்லிம் தீவிரவாதி" என்பதை மேலும் பரப்பும் ஓர் கருவி**

இத்தகைய பாதிப்புகள் செய்திகளைப் படிப்பதுடன் முடிவடைந்து விடுவதில்லை. இச்செய்திகளின் தாக்கத்தினால்

ஏற்படுத்தப்படும் பாதுகாப்புகள் VVIPகள், விமான, ரயில் நிலையங்கள், வணிக தலங்கள் மற்றும் பொது இடங்கள் என விரிவடைந்து இதனால் பாதிக்கப் படும் அனைவரும் இல்லாத அல்லது இருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளைத் தெரிந்து கொள்கின்றனர். வெறுப்படை கின்றனர். பொதுவில் முஸ்லிம் களை வெறுக்கக் கற்றுக் கொள் கின்றனர். அந்த மனநிலைக்கு கொண்டு வரப்படுகின்றனர். இது தான் இதன் மோசமான பகுதி. ஆனால் இது இதனை திட்ட மிட்டவர்களுக்கு இதுதான் வரவேற்கத்தக்கப்பகுதி.

### போலித் தாக்குதல்கள் மற்றும் காவல்துறை படு கொலைகள்

IB இத்தகைய ஆதாரமற்ற புரளிகளை உருவாக்குவ தோடு மட்டும் நின்று விடுவதில்லை. அதனை உறுதிப்படுத்த சில தீவிரவாத தாக்குதல்களையும் அதன் பின்னணியில் சில துப் பாக்கி சூடுகளையும் காவல்துறை படுகொலைகளையும் திட்ட மிட்டு நடத்துகிறது. இதன் பின்ன ணியில் எந்த வித எதிர்வினை யுமின்றி எல்லா தீவிரவாதிகளும் கொல்லப்படுகிறார்கள். பின்னர் அவர்கள் முஸ்லிம் தீவிரவாத இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என அடையாளம் காணப்படுகிறார் கள். இந்த மாதிரியான எதிர் தாக்குதல்களில் குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு தீவிரவாதி களையாவது உயிருடன் பிடிக்க முடியும். அவ்வாறு உயிருடன் பிடிப் பதையே அனைவரும் விரும்புவர். ஏனெனில் அப்போது அவர்கள் சார்ந்த தீவிரவாத இயக்கங்கள், அவர்களுடைய எதிர்காலத் திட்டங்கள் போன்ற வற்றைக் கண்டு பிடிக்க முடியும். ஆனால் அதிகமான நேரங்களில் இத்தகைய எதிர் தாக்குதல்களில் தீவிரவாதிகள் கொல்லப்படுகின் றனர். இதன் மூலம் தகவல்கள் மேலும் கிடைப்பது தடை படுகிறது. இவ்வாறு கொல்லப் படும் நபர்களின் முன் சில ஆயுதங்கள் போடப்பட்டு அவர் கள் உண்மையான தீவிரவாதிகள் போல் காட்டப்பட்டாலும் இந்த மாதிரியான ஆயுதங்கள் IB என்ற மத்திய உளவுத்துறைக்கும், RAWவிற்கும் மிகச் சுலபமாக கிடைக்கக் கூடியதென்பதால் இவையெல்லாம் ஒர் ஆதார மாகாது. இதன் மூலம் IB என்ற மத்திய உளவுத்துறை விரும்புவது பொதுவான இந்துக்கள் மத்தியில் முஸ்லிம்களைப் பற்றி தவறான சிந்தனைகளை உருவாக்கி அதன் மூலம் இந்த சமூகத்தின் மீது பிராமண ஆதிக்கத்தை ஏற்படுத்து வது.

### தீவிரவாதக் கட்டுக் கதை கள்

இத்தகைய தீவிரவாதத் தாக்குதல்களைப் பற்றி IB என்ற மத்திய உளவுத்துறையின் தூண்டு தலின் பேரில் ஊடகங்களில், தொடர்ச்சியாக தகவல்கள் வெளியிடப் படுகின்றன. அவை இஸ்லாமிய - தீவிரவாதத்தைப் பற்றி அற்புதமாக, எந்த வித விசாரணையுமின்றிப் பேயைப் போன்று உருவகப்படுத்தி காட்டு கின்றன.

இவர்கள் கூறுவதைப் போன்று முஸ்லிம் தீவிரவாதம் அவ்வளவு பயங்கரமானதா? அல்லது அப்படியொன்று உள்ள தா? தீவிரவாதத்தின் வரலாற்றை திரும்பிப் பார்த்தால் அதன் உளவியல் அது செயல்படுத்தப் பட்ட விதம் இவற்றைப் பார்த் தால் இல்லை என்று பதிலே கிடைக்கும்.

1. **U.S. ஜனாதிபதி ஆப்ர ஹாம் லிங்கன் அவர்கள் தெற்கு மாநிலத்தை அமெரிக்காவிலிருந்து தனி யாக பிரித்துக் கேட்ட குழு வினரை சார்ந்த ஒருவரால் அதை எதிர்த்ததற்காக 15 ஏப்ரல் 1865 ல் கொல்லப் பட்டார்.**

2. **செர்பிய தீவிரவாத குழு வான "பிளாக் ஹாண்ட்" கறுப்பு கைகள் என்ற இயக்கத்தை சார்ந்தவர் களால் ஆஸ்த்ரோ ஹங் கேரி அரசரின் வாரிசான ஆர்ச்டியூக் பிரான்ஸ் ஃபெர்டினான்ட் என்பவர் போஸ்னியாவை செர்பிய பேரரசின் கீழ் இணைக்க வேண்டும். ஆஸ்திரிய- ஹங்கேரிய பேரரசின் கீழிருந்து விடுவிக்க வேண் டும் என்ற கோரிக்கையை காரணம் காட்டி சரஜீவோ என்ற இடத்தில் ஜுன் 1914ல் கொல்லப்பட்டார். இதுவே முதல் உலகப் போருக்குக் காரண மானது.**

3. **அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடியின் கொலையின் புதிரோ இன்றும் விடுபடவில்லை. கென்னடி 22, நவம்பர் 1963ல் கொலை செய்யப் பட்டார். அவர் மீடியாக் களுக்கு எதிரான நிலை யை எடுத்ததற்காக மாபி யாக்களால் அமெரிக்க உளவுத் துறையைக் கொண்டே கொல்லப்**

***பட்டார் என்று இப்போது சந்தேகிக்கப்படுகிறது.***

4. ***கறுப்பு இன மக்களுக்கு எதிரான இனவெறி மற்றும் சமூக பகிஷ்கரிப்புகளுக்கு எதிராக போராடிய மார்டின் லூதர் கிங் ஜூனியர் அவர்களின் படுகொலையும் புதிரானதே. இதில் பிடிபட்ட ஜேம்ஸ் எர்ல்ரே என்பவர், "வெள்ளை இனவெறி மக்களின் இரகசிய ஏற்பாட்டில் தான் ஒரு மீன் குஞ்சே" என்று அறிவித்தார்.***

5. ***பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ 27 டிசம்பர் 2007 அன்று ஷியாக்களுக்கு எதிரான லஷ்கரே ஜஸ்வி என்ற அடிப்படைவாதிகளால் அவர் இஸ்லாத்திற்கெதிரான நிலையை எடுத்தற்காக கொல்லப்பட்டார்.***

நாம் வெகுதூரம் சென்று பார்க்க தேவையில்லை. இந்தியாவில் மட்டும் நாம் மூன்று தேசத் தலைவர்களை கடந்த 60 வருடங்களில் பலி கொடுத்துள்ளோம். நம் தேசப்பிதா காந்தியடிகள் கருணையின்றி பிராமணீய தீவிரவாதி களால் கொல்லப்பட்டார். பாகிஸ்தானின் மீது அவர் கொண்டிருந்த பரிவின் காரணமாகவே அவர் கொல்லப்பட்டார் என்று கூறப் பட்டாலும் சுதந்திர இந்தியாவில் பிராமணீய ஆதிக்கத்தை எதிர்த் ததற்காகவே அவர் கொலை செய்யப்பட்டார் என்பதே உண் மை. இதே போல் பிரதம மந்திரி இந்திராகாந்தி அவர்கள் ப்ளூ ஸ்டார் நடவடிக்கையை மேற் கொண்டதற்காக காலிஸ்தான் தீவிரவாதிகளால் கொல்லப்பட் டார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களோ அனைவரும் கண்டு நடுங்கக்கூடிய LTTE யினரால் இலங்கை அரசிற்கு இராணுவ உதவி செய்த காரணத்திற்காக கொல்லப்பட்டார்.

இதன் மூலம் தெரிய வருவது உண்மையான தீவிரவாதம் அதை எதிர்க்கும் தலைவர்களை உயிருடன் வாழ விட்டதில்லை. ஆனால் இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாதத்தில் மட்டும் இது மாற்றமாக உள்ளது. IBயாலும் ஊடகங்களாலும் மிக பயங்கரமான இது வரை சந்தித்திராத தீவிரவாதமாக முஸ்லிம் தீவிரவாதம் உருவகப் படுத்தப்பட்டாலும் இத்தீவிரவாதத்தால் தங்களுக்கெதிரான மதவாத பிராமணீய தலைவர்களின் உயிருக்கோ, இவர்களால் வெறியேற்றப்பட்டு முஸ்லிம்களுக்கெதிராக பேசும் மற்ற நிறுவனங்களின் தலைவர்களின் உயிருக் கோ இதுவரை எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. இவர்கள் தினந்தோறும் சென்று வந்து கொண்டிருந்தாலும் இவர்கள் மீது எந்த விதமான தாக்குதலும் கூட தொடுக்கப்பட்டதில்லை.

ஒரு வாதத்திற்கு இவ் வாறு சொல்லலாம், பிராமணீய தலைவர்கள் ஏன் தாக்கப்படுவதில்லையென்றால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அல்லது எங்கே அவர் களை தாக்கினால் ஒட்டு மொத்த ஹிந்துக்களும் முஸ்லிம்களுக்கெதிராக திரண்டு எழுந்து அதனால் முஸ்லிம்களை இரத்த காடாக மாற்றி விடுவார்களோ என்ற பயம். ஆனால் இந்த இரண்டு வாதங்களும் சரியான வாதங்களல்ல, ஏனெனில் கடந்த காலம் நமக்கு உறுதிப்படுத்துவது என்னவென்றால் மாநிலங்களின் தலைவர்கள் மீது நடை பெற்ற தாக்குதல்களில் எத்தனை பாதுகாப்பு வளையங்களையும் மீறி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தவும் தங்கள் இலக்கை அடையவும் வல்லமை படைத்த வர்கள். அவர்களை யாரும் தடுக்க முடியாது. இரண்டா வதாக இவர்கள் உருவகப் படுத்தும் ஜிஹாதி தீவிரவாதத் திற்கு கருணையோ இரக்கமோ கிடையாது. ஜிஹாதி தீவிரவாதி கள் தங்கள் கொள்கையை நிறைவேற்ற ஒரு சில ஆயிரம் முஸ்லிம்களை பலி கொடுக்கவும் தயங்க மாட்டார்கள். உண்மை யென்னவெனில் இத்தகைய பயங்கரம் ஒன்று இல்லவே இல்லை. இந்த நாட்டின் நீள அகலங்களில் சுதந்திரமாகச் சுற்றும் பிராமணீய தலைவர் களுக்கு இது நன்றாகவே தெரியும்.

## இந்திய முஸ்லிம்கள் தீவிரவாதிகளா?

இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாதம் இருக்கிறது என்பதற்கு எந்தவிதமான வரலாற்று ஆதாரமும் கிடையாது. ஆங்கிலேயர் காலத்தில் மற்ற இந்துக்களைப் போலவே முஸ்லிம் புரட்சியாளர்கள் மற்றும் தேச பற்றாளர்கள் 1857-ல் நடந்த முதல் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார்கள். பின்னர் மகாத்மா காந்தியின் தலைமையில் போராடிய போராளிகள் ஆங்கிலேயர் களால் தீவிரவாதிகள் என்று அழைக்கப் பட்டார்கள்.

சமீப கால வரலாற்றில் மூன்று பெரிய சம்பவங்களில் முஸ்லிம்கள் ஈடுபட்டது கண்டு பிடிக்கப் பட்டது. ஒன்று 1993-ல் நடந்த மும்பை குண்டு வெடிப்பு. 2-வது 1998-ல் கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு. 3வதாக 2001-ல் கந்தஹாருக்கு கடத்தப்பட்ட இந்திய ஏர்லைன்ஸ் விமானம். இந்த மூன்றில் கந்தஹார் சம்பவம் மட்டுமே தீவிரவாதத் தாக்குதல் எனக் கூறமுடியும். 1993-ல் நடந்த மும்பை குண்டு வெடிப்புகள் பாபர் மஜித்

இடிப்பை தொடர்ந்து நடை பெற்ற கலவரத்தில் முஸ்லீம்கள் அழிக்கப்பட்டதற்கு பதிலடியாக சில முஸ்லீம் குற்றவாளிகளால் நடத்தப் பட்டது. அதே போல், கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு களும் சங்பரிவாரத் தினரால் நடத்தப்பட்ட கலவரத் தின் ஆதங்கத்தினால் தூண்டப் பட்டவை. இந்த இரண்டு சம்பவங்களும் கண்டிப்பாக தீவிரவாதம் என்ற வரையரைக் குள் வராது. தீவிரவாதம் என்ற மாயை IBயால் ஏற்படுத்தப் படுவது. ஏனெனில், பிராமணீய சக்திகளின் தீவிரவாதத்தை மறைப்பதற்காக இந்த பிராம ணிய தீவிரவாதம் பல வடிவங் களில் பல அளவுகளில் பல இடங்களில் நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

### RSS, VHP மற்றும் பஜ்ரங்தள்–இன் தீவிரவாத செயல்கள்

1. மார்ச் - 2000 - புனேயில் பஜ்ரங்தள் - ஆல் நிர்வகிக்கப் பட்ட பயிற்சி கூட்டத்தில் மற்ற பயிற்சிகளுக்கு மத்தியில் ஜெலட்டின் குச்சியின் பயிற்சியும் வழங்கப்பட்டது. 40 முதல் 50 மாநில அளவிலான தொண்டர்கள் இப்பயிற்சியை எடுத்துக் கொண்டனர். நந்தியத்தை சேர்ந்த சு. ஹிமான்சு பன்சே என்பவர் இந்த கூட்டத்தின் தலைவர் (ஏப்ரல் 2006-ல் ஒரு வெடிகுண்டைத் தயாரித்துக் கொண்டிருந்த போது தவறுதலாக வெடித்து இவர் இறந்து போனார். இந்தக் கூட்டம் பஜ்ரங்தளத்தின் அகில இந்திய உடற்பயிற்சி பிரிவின் தலைவர் மில்லிந் பரந்தே என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. (2006 நந்தேத் குண்டு வெடிப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி)

2. 2001 - நாக்பூரிலுள்ள போன்சாலா ராணுவப் பள்ளி வளாகத்தில் சுளுளு மற்றும் பஜ்ரங்தள் உறுப் பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 40 நாட்கள் பயிற்சி முகாமில் நாடெங்கி லுமிருந்து 115 பேர் பங்கேற்றனர். இவர்களில் 54 பேர் மகாராஷ்டிராவைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு ஆயுதங்களைக் கையாள் வது, வெடிகுண்டுகளைத் தயாரிப்பது, வெடிக்க வைப்பது போன்ற பயிற்சி கள் வழங்கப்பட்டன. இவர் களுக்கு பயிற்சி அளித்தது ஓய்வு பெற்ற மற்றும், பணியில் இருந்த ராணுவ அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்ற மூத்த IB அதிகாரி கள், (2006 நந்தியத்தில் நடந்த குண்டுவெடிப்பு வழக்கிலும், 2008 மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கிலும் நடந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு).

3. 2003 புனேவில் சிங்கத் ரோட்டில் அகான்க்ஷா ரெசார்டில் நடைபெற்ற பயிற்சியில் சங்க உறுப்பினர் களுக்கு குண்டு வெடிப்பது, தயாரிப்பது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. 50 இளைஞர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்றனர். மிதுன் சக்கரவர்த்தி என்ற புதிய நபர் பயிற்சி அளித்தது மட்டுமல்லாமல் மிகப் பெரிய அளவிலான வெடிப் பொருள்களை கடைசி நாளன்று வழங்கினார். இவரைத் தவிர இந்த பயிற்சியை ஓய்வுப் பெற்ற இராணுவ அதிகாரிகள் புனேயைச் சார்ந்த வெடிகுண்டு நிபுணர் நாகேஷ்தவதே என்பார், பேராசிரியர் ஷரத்குந்தே மற்றும் டாக்டர் தியோ என்ற வேதியியல் பேரா சிரியர் கள் வழங்கினர். நந்தேத் மற்றும் மாலே கான் குண்டு வெடிப்பு வழக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு.

4. 15, மே 2002 புனே நகரத்தில் 15 வயது முதல் 45 வயது வரையுள்ள 153 சங்பரிவார் உறுப்பினர் களுக்கு 21 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இங்கு அவர்கள் காக்கி அரைக் கால் சட்டையுடன் கம்பு களுடனும், கோக்கோ மற்றும் கபடியுடனும், இந்து ராஜ்ஜியத்தை பற்றி கற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு சமஸ்கிருதத் தில் பேசுவது கற்றுக் கொடுக்கப்பட்டது. பூட்டிய கதவுகளுக்கு பின்னால் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த கதவுகளுக்கு பின்னால் புதிய ஆட்கள் யாரும் அனுமதிக்கப் படவில்லை. இதே போன்ற முகாம்கள் நாடு முழுவதும் 71 இடங்களில் அதே நேரத்தில் நடத்தப் பட்டன. மகாராஷ்ட் ராவில் உள்ள லத்தூரில் இதே போன்ற பயிற்சி 45 வயது முதல் 60 வயது வரை மூத்த குடிமக்களுக்கு வழங்கப்பட்டது. (புனே நியூஸ்லைன், இந்தியன் எக்ஸ்பிரஸ் 15 மே 2002)

(தொடரும்)

# அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு

# ஆர்.எஸ்.எஸ்.இன் சதியே. . ..

2007 அக்டோபர் 11ம் நாள் நோன்பு திறக்கும் நேரம் அஜ்மீர் ஷெரீப் தர்காவில் குண்டு வெடித்தது. இதில் 4 பேர் உடனடியாக கொல்லப் பட்டனர்.

50 க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர். தற்போது இவ்வழக்கின் 806 பக்க குற்றப்பத்திரிக்கை இராஜஸ்தான் தீவிரவாத தடுப்பு படையினரால் (Anti Terrorism Squad) கூடுதல் தலைமை குற்றவியல் நீதிபதி ஜகேந்திர குமார் ஜெயின் முன்பாக வெள்ளியன்று அஜ் மீரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் முக்கிய சதிகாரனாக இக்குண்டு வெடிப்பிற்கு திட்டம் தீட்டி தந்ததாக ஆர்.எஸ்.எஸ்.- இன் அனைத்திந்திய செயற்குழு உறுப்பினர் மற்றும் பிரச்சாரக் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதி களின் தற்போதைய தலைவன் மோகன் பகத்தின் வலது கரம் என்ற பெருமைகளுக்கு சொந்தக் காரனான இந்திரேஷ் குமார் என்பவன் குற்றஞ் சாட்டப் பட்டுள்ளான்.

இக்குண்டு வெடிப்பிற்கான சதித் திட்டம் எவ்வாறு உருவாக்கப் பட்டது என்பது குற்றப்பத்தி ரிக்கையில் தெளிவாக கூறப் பட்டுள்ளது. 2005 அக் டோபர் 31ம் தேதி. ஜெய்ப்பூரி லுள்ள MI ரோட்டிற்கு அருகி லுள்ள குஜராத்தி சமாஜ் விருந் தினர் மாளிகையில் அறை எண் 26ல் இச்சதித்திட்டம் உருப் பெற்றது. இச்சதித் திட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுவாமி அசிமானந்த், இந்திரேஷ் குமார், பிரக்யா சிங் தாகூர் (ஆம் அதே பெண் சாமியார்தான்), சுனில் ஜோஷி, ராம்ஜி கல் சங்கரா, தேவேந்திர குப்தா, லோகேஷ் ஷர்மா, சந்தீப் தங்கே, சந்தர் சேகர்



லெவே மற்றும் பல ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் (ஹிந்துஸ்தான் டைம்ஸ், All Voices.com, New Kerala.com, திஹிந்து, Daily News and Analysis, Two Circles.net, India Newz.com, தி டைம்ஸ் ஆஃப் இந்தியா அனைத்திலும் 22 மற்றும் 23 அக்டோபர் 2010).

**யார்யாருக்கு என்னென்ன பொறுப்பு**

1. **சுனில் ஜோஷி குண்டு வெடிப்புகளை நிகழ்த்த வேண்டும்.**
2. **லோகேஷ் சர்மாவும் ராம்ஜி கல்சங்கராவும் ஆயுதங் களை தருவிக்கவும் எந்த இடத்தில் வைப்பது என்பதையும் பார்த்து கொள்ள வேண்டும்.**
3. **தேவேந்திர குப்தா போலி அடையாள அட்டைகளை தந்து செல்போன்களையும் சிம்கார்டுகளையும் வாங்க வேண்டும்.**
4. **இதற்கான பணத்தை வசூல் செய்யும் பொறுப்பு சந்தீப் தங்கே மற்றும் சுனில் ஜோஷியுடையது.**
5. **இதில் சுனில் ஜோஷியால் ஆரம்பிக்கப்பட்ட இயக்க மான ஜெய்வந்தேமாதரம், அபிநவ் பாரத் மற்றும் ஆர்.எஸ்.எஸ். இன் முக்கிய மான உறுப்பினர்கள் பங்கேற்பார்கள்.**
6. **இக்குழுவிற்கு ஆர்.எஸ். எஸ். இன் இந்திரேஷ் குமார் தலைவன்.**
7. **இக்குழுவின் உறுப்பினர் கள் தங்களை மற்ற சாத்வீக மதக் குழுக்களோடு இணைத்து கொள்ள வேண்டும். அப்போது தான் எந்த சந்தேகமும் வராமல் இந்த குண்டு வெடிப்புகளை நிகழ்த்த முடியும். இது இந்திரேஷ் குமார் முன் வைத்த யோசனை.**

இவையெல்லாம் குற்றப் பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ளன. இவர்கள் மீது இந்தியன் பீனல் கோட் 302,323,295A (Explosive Act), 201, and 120B போன்ற பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. அதாவது கொலை, கொலை முயற்சி சதித்திட்டம் தீட்டுதல், வழி பாட்டுத் தலத்தை சேதப்படுத்துதல், வெடிகுண்டுகளை கையாளுதல் போன்ற பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப் பட்டுள்ளது (டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஹிந்துஸ்தான் டைம்ஸ், All Voices.com, The HIndu 23.10.2010)

இவ்வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோதே இவ்வழக்கின் முக்கிய குற்றவாளி யான சுனில் ஜோஷி ஆர்.எஸ்.எஸ். காரர்களால் மத்திய பிரதேசத்தில் உள்ள மோ (MHOW) என்ற இடத்தில் கொல்லப்பட்டான். சுனில் ஜோஷி பிரமுக் பிரச்சாரக் என்ற முக்கிய ஆர்.எஸ்.எஸ். பதவியை மத்திய பிரதேசத்தில் மோவிலும் ஜார்கண்டிலுள்ள ஜம்தடாவிலும் பதவி வசித்து வந்தான். (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா சென்னை 25 அக்டோபர் 2010).

கர்னல் புரோகித் இவர்க ளுடைய தொடர்பையெல்லாம் விசாரணையில் வெளிப்படுத் தினான் (TOI 25 அக்டோபர் 2010)

குற்றம் சாட்டப்பட்டவர் களில் குப்தாவும், லோகேஷ் சர்மாவும், சந்திரசேகர் லெவியும் நீதிமன்றம் காவலில் உள்ளனர். இவர்களில் சந்திரசேகர் லெவி வெள்ளியன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டான். குப்தா, லோகேஷ் இருவரும் ஹைதரா பாத்திற்கு மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.



இந்திரேஷ் குமார்

சந்தீப் தங்கே, ராம்ஜி குலசங்கரே ஆகிய இருவரும் தலைமறைவாக உள்ளனர். (தி ஹிந்து 23.10.2010)

ஆக இந்துத்துவா பிரா மண ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதி களின் குண்டு வெடிப்பு சதி மீண்டும் ஒரு முறை அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. மாலேகான், ஹைதராபாத் மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்புகளின் வரிசையில் மீண்டுமொறு சதி, இந்துத்துவா பிராமண சக்திகளின் நாட்டுக் கெதிரான சதி வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

**ஆரம்பகட்ட விசாரணை**

ஆனால் அஜ்மீர் தர்காவில் குண்டு வெடித்தவுடன் இதன் ஆரம்பகட்ட விசாரணைகள் வழக்கம் போல் முஸ்லிம்களையே குற்றம் சாட்டின.

1. **ஜெய்ஷ் - எ - முஹம்மது மற்றும் ஹுஜி ஆகிய அமைப்புகளுடன் இணை ந்து செயல்படும் லஷ்கர்- இ-தொய்பாவின் மீது வலு வான சந்தேகம் உள்ளது.**

2. ஷாஹித் பிலால் என்பவன் ஜெய்ஷ்-ஏ-முஹம்மது இயக்கத்தின் தலைமறைவு குழுக்களுடன் இணைந்து இந்தத் தாக்குதலை வடிவமைத்தான்.

3. கராச்சியை மையமாகக் கொண்டிருந்த பிலால் சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு வழக்கிலும் தேடப்பட்டு வந்தான். குஜராத்தை இருப்பிடமாக கொண்ட ரசூல்கான் பல இளைஞர்களை டாக்கா மற்றும் வளைகுடா நாடு களின் வழியாக பாகிஸ்தானுக்கு ஆயுத பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைத்தான். (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே, 12 மற்றும் 13 அக்டோபர் 2007)

4. குண்டு வெடிப்பில் பலியான சையத் சலீம் என்பவர் ஐதராபாத்தை சேர்ந்தவர். சில மாதங்களுக்கு முன் அஜ்மீருக்கு குடிவந்த அவர் தர்காவுக்கு அருகில் ஒரு கடையை அமைத்து கடிகாரங்கள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்து வந்தார். உளவுப் பிரிவுகள் பின்வரும் காரணங்களுக்காக அவர் இந்த குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்தன.

5. அவர் ஐதராபத்தை சேர்ந்தவர். அவர் சிறிய வியாபரம் செய்வதற்காக அஜ்மீரில் வசித்து வந்தாலும் அவருடைய குடும்பம் இன்னும் ஐதராபாத்தில் தான் இருக்கிறது.

6. குண்டு வெடிப்பிற்கு சில நாட்களுக்கு முன்பாக அவரை சந்திப்பதற்கு ஒரு பெண் வந்திருந்தார். அந்த பெண்ணிடம் ஒரு பை இருந்தது. அந்தப் பெண் குண்டு வெடிப்பிற்கு இரண்டு நாட்கள் முன்பாக அஜ்மீரை விட்டு வெளியேறினார். அந்த பையில் தான் வெடிப் பொருள்கள் இருந்திருக்க வேண்டும். அதை அந்தப் பெண் தான் சலீமிடம் கொடுத்திருக்க வேண்டும் என்றும் போலிசார் சந்தேகித்தனர்.

7. சில வயர் துண்டுகள் அவருடைய சட்டைப் பையில் இருந்து கண்டெடுக்கப்பட்டன. (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 14 அக்டோபர் 2007)

8. முஸ்லிம் தீவிரவாதிகள் எப்படி முஸ்லிம்களை தாக்குவார்கள் என்ற கேள்விக்கு மத்திய உள்துறை செயலர் லஷ்கரே தொய்பா சூஃபி ஞானிகளுக்கு எதிரானதாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே அவர்கள் இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்று பதிலளித்தார். ( சாகால் தினசரி, புனே, 12 அக்டோபர் 2007)

எவ்வளவு கவனமாக இந்த கயவர்களால் இம்முஸ்லிம் சமுதாயத்தின் மீது பழி சுமத்தப் படுகிறது. எவ்வளவு கேவலமான அருவருப்பான செயல். கொல்லப்பட்டதும் முஸ்லிம், கொன்றதும் முஸ்லிம் காரணம் சூஃபியிஸம், வஹாபியிஸம். இதுதான் மத்திய உளவுத்துறையின் கவனமான காய் நகர்த்தல்.

குண்டு வெடிப்பில் இறந்தவர்களில் ஒருவரான சலீம்தான் சதிகாரர் என போலிசாரும் புலனாய்வு பிரிவுகளும் குற்றஞ்சாட்டிய போது சலீமின் மனைவி குழந்தைகள், பெற்றோர் மற்றும் உறவினர்கள் எத்தகைய துன்பத்தை அடைந்திருப்பார்கள். அவர்களுடைய உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும். சமுதாயத்திலிருந்து எத்தகைய புறக்கணிப்பை அவர்கள் சந்திக்க நேர்ந்திருக்கும். அவர்கள் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக அனுபவித்து வரும் இந்த வேதனைக்கு மாற்றாக அரசு சலீமின் குடும்பத்திற்கு என்ன நஷ்டஈடு வழங்கப் போகிறது? கண்டுமூடித்தனமாக இத்தகைய குற்றச்சாட்டுகளை சலீமிற்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் சொன்ன போலீசார், உளவுத்துறை, மத்திய உள்துறை செயலர் மற்றும் இச்செய்திகளை எந்தவித ஆய்வுக்கும் உட்படுத்தாமல் நியாயமற்ற முறையில் வெளியிட்ட பத்திரிக்கைகள் இவற்றின் மீது என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொள்ளப்போகிறது?

எதுவும் கிடையாது என்பதே இக் கேள்விகளுக்கான பதில்.

### ஆர்.எஸ்.எஸ். எனும் விஷம்

85 ஆண்டுகள் விஷம் இன்று இந்தியா முழுவதும் பரவிவிட்டது. 1925ல் தொடங்கப் பட்ட ஆர்.எஸ். எஸ். தன்னுடைய விஷத்தை தேசப் பிதா காந்தி

யடிகளின் நெஞ்சில் தோட்டா வாக பாய்ச்சி கொலை செய்தது. நாடெங்கிலும் இந்து முஸ்லிம் கலவரங்களை உண் டாக்கி பல்லாயிரம் முஸ்லிம்களை காவு கொண்டது. தற்போது இந்திய அரசியல் அமைப்பை உடைத்து நாட்டுக் கெதிராக போர் நடத்தி நாட்டை யே பிடிக்கும் அளவிற்கு வளர்ந்து விட்டது. அவாளு டைய கொடி டெல் அவிவில் பறக்கின்றது. அவாகளுக்கு போர் தளவாடங்கள் நேபாளி லிருந்தும், இஸ்ரேலி லிருந்தும் ஏன் இந்திய இராணுவத் தில் உள்ள தேச பக்தியாளர்களிட மிருந்தும் கிடைக்கின்றன.

சமீபத்தில் ஹெட்லைன்ஸ் டுடே என்ற டி.வி. சேனல் குஜராத் கலவரக்காரர்களை படம் பிடித்து காட்டிய டெகல்கா நிருபர் ஆஷிஷ் கேதானுடன் சேர்ந்து ஒரு இரகசிய படப் பிடிப்பை இந்துத் துவா சக்தி களுக்கு எதிராக நடத்தியது. அது இந்திரேஷ் குமார் என்ற ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதிக்கு அஜ்மீர் குண்டு வெடிப்பில் உள்ள தொடர்பை அம்பலப்படுத்தியது. பி.ஜே.பி.யின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஜாமியா மில்லியா பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியை கொலை செய்ய திட்டம் போட்டிருந்ததை அவன் வாய் வழியாகவே படம் பிடித்து காட்டியது.

மேலும் ஆர்.எஸ்.எஸ். இன் கர்நாடக மாநிலத்தின் உறுப் பினரும் ராம் சேனா தலைவனு மான பிரமோத் முத்தலிக் - இன் தேச பக்தியை படம் பிடித்து காட்டியது. இவன் ஒரு நபரிடம் கர்நாடகாவில் பெங்களூரிலும், மங்களூரிலும் கலவரங்கள் நடத்த 60இலட்ச ரூபாயை பேரம் பேசியதை அம்பலப்படுத்தியது.

மஹாராஷ்டிராவில் உள்ள ஆர்.எஸ்.எஸ்.இன் அங்கமான சிவசேனா குண்டர்கள் கர்நாடக அரசியல்வாதி நாடாளுமன்ற உறுப்பினர் சையத் மன்சூர் என்பவரை ஸீ டி.வி. அலுவலகத் தில் காட்டுமிராண்டிதனமாக தாக்கியதையும் அவர் முகத்தில் தாரை பூசியதையும் அனைவரும் பார்த்தனர்.

குஜராத் கலவரத்தில் ஈடு பட்டு பெண்ணை கற்பழித்து கொன்ற மேலும் கர்ப்பிணி பெண்ணின் வயிற்றை கிழித்து கொலை செய்த பாபு பஜ்ரங்கி போன்றவர்களின் பேட்டியும் மறைமுகமாக படம்பிடித்து காட்டப்பட்டது. ஆனாலும் இவர்களுக்கெதிராக இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லை. இவர்கள் கைது செய்யப் படவும் இல்லை. விசாரிக்கப் படவும் இல்லை.

இதே தான் இவ்வழக்கிலும் நடக்கிறது. இந்திரேஷ் குமார் இன்னும் கைது செய்யப்பட வில்லை. விசாரிக்கப்படவில்லை. அவனை நெருங்க ஏ.டி.எஸ். பயப்படுகிறது. இவனுடைய சதித்திட்டம் தெளிவாக வெளிப் பட்டுவிட்ட பின்னும் தீவிரவாத தடுப்பு படையின் கூடுதல் எஸ்.பி. இது எந்த தீவிரவாத இயக்கத்தின் செயலும் அல்ல மாறாக இது ஒருசில தீவிரவாத போக்கு கொண்டவர்களின் செயல். இந்த குற்றவாளிகள் அவர்களாகவே தங்களுக்குள் ஒரு கூட்டத்தை உருவாக்கிக் கொண்டார்கள் என வாய் கூசாமல் பேட்டியளிக்கிறார்.

ராஜஸ்தான் முதல் மந்திரி அஷோக் கேலாட் இன்னும் ஒரு படி மேலே போய் ஆர்.எஸ்.எஸ். உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கெஞ்சுகிறார்.

அய்யா என்ன நடக்கிறது இங்கே? எந்த ஒரு குண்டு வெடிப்பு நடந்தாலும் நாட்டி லுள்ள பல முஸ்லிம்கள் கேள்வி கேட்கப்படாமல் கைது செய்யப் பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். பல ஆண்டுகள் சிறையிலடைக் கப்படுகிறார்கள். பெங்களூர் குண்டு வெடிப்பிற்கு சிறையில் இருந்த இருகால்களும் ஊனமாக தன் உடல் நலம் மோசமடைந்து மருத்துவ சிகிச்சையை சிறை யிலேயே மேற்கொண்ட மதானி திட்டம் போட்டு கொடுத்தாராம். அவரை கைது செய்ய கர்நாடகா போலிசார் ஊர் விட்டு ஊர் வந்து நோன்பு பெருநாளில் அவர் வீட்டை சுற்றி வளைத்து பெரிய தீவிரவாதியை கைது செய்வதை போல் கைது செய்தது, எந்தவித ஆதாரமும் இல்லாமல். ஆனால் இவன் தான் குற்றவாளி என குற்றப்பத்திரிகையில் குற்றம் சாட்டப்பட்ட இந்திரேஷ் குமார் இன்னும் கைது செய்யப்பட வில்லை. விசாரிக்கப்படவில்லை. அரசாங்கமும் ஆர்.எஸ்.எஸ். இடம் மயிலே மயிலே இறகு போடு என்ற பாணியில் நீ உண்மையை ஒத்துக் கொள் என கெஞ்சிக் கொண்டு இருக்கிறது. இதுதான் இந்திய நீதி.

அது சரி முஸ்லிம்களுக்கு ஒரு சட்டம், அவாளுக்கு ஒரு சட்டம்.

**அபூ அப்ரஹ்**

# டோனி பிளேயரின் மைத்துனி இஸ்லாத்தை ஏற்றார்!

What I wanted to share with you today is that, I am Lauren Booth and I am a Muslim'

'இன்று நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புவது நான் லாரன் பூத் - நான் ஒரு முஸ்லிம்'

***(23.10.2010 லண்டன்)***

ஐரோப்பியர்கள் அனைவரும் இஸ்லாத்தை எதிர்க்க வேண்டும் என்றொரு பெரும் முயற்சி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கின்றது.

அவர்கள் எதிர்த்தால் மட்டும் போதாது, அவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர் ஐரோப்பியர்கள்.

இந்த எதிர்ப்பின் அரிப்பாகத் தான் இஸ்லாம் சொல்லும் ஆடை விதிகளை (புர்காவை), எதிர்க்கின்றார்கள். புர்காவை தடை செய்கின்றார்கள் ஐரோப்பியர்கள்.

ஏன் பள்ளிவாசல்களில் நிமிர்ந்து நிற்கும் மினாரட்களையே அவர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

சுவிச்சர்லாந்தில் மினாரட்களையே தடை செய்தார்கள்.



ஐரோப்பாவைத் தொடர்ந்து அவர்கள் என்ன சொன்னதையே சொல்லி பழகிவிட்ட நம்மவூர் பால்தாக்கரேக்களும் புர்காவை எதிர்க்க தொடங்கியுள்ளார்கள். அவருக்கு முஸ்லிம் பெண்கள் தங்கள் பதிலை பகிரங்கமாகத் தந்துள்ளார்கள்.

ஆனால் அனைத்தையும் மீறி ஐரோப்பாவில் மிகவும் வேகமாக வளரும் மார்க்கமாக இஸ்லாம் இயங்கி வருகின்றது.

இந்தப் பின்னணியில் பல ஐரோப்பிய சீமாட்டிகள் இஸ்லாத்தை ஏற்று வருவது, எந்தக் கொம்பனாலும், இஸ்லாம் இந்த உலகை ஆளும் கொள்கையாகவும், மக்கள் மனதில் வீற்றிருக்கும் கொள்கையாகவும் ஆகிடுவதை, தடுந்திட இயலாது என்பதை பறைசாற்றுகின்றது.

ஆப்கானிஸ்தானை தாக்கிட வேண்டும். ஈராக் - ஐ தாக்கிட வேண்டும். அதன் பின் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டையும் தாக்கி மொத்தத்தில் இஸ்லாத்தை இல்லாமலாக்கிட வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டார் அமெரிக்க அதிபர் செருப்படி புகழ் புஷ். அவருக்கு எல்லா விதத்திலேயும் துணை நின்றார் பிரிட்டன் நாட்டு அதிபர் டோனி பிளேயர்.

அமெரிக்காவில் அநியாயங்களுக்குத் துணை போக தன் சொந்த நாட்டு மக்களிடமே பொய் சொன்னார். ஏமாற்றினார்.

ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், அப்பாவி மக்களை லட்சக்கணக்கில் கொன்று குவித்தார்கள்.

இந்த அநியாயங்கள் எல்லை தாண்டவே போருக்கு எதிரான அணி என்றொன்று அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உருவானது.

இந்தப் போருக்கு எதிரான அணியை பிரிட்டனின் அப்போதைய பிரதமர் டோனி பிளேரின் மனைவி செரி பிளேரின் தங்கை லாரன் பூத் என்பவர்தான் தலைமை ஏற்று நடத்தினார்.

இவர் மிகச்சிறந்த பத்திரிகையாளரும் கூட. பிரிட்டனிலிருந்து வெளிவரும் எல்லாப் பத்திரிகைகளிலும் பணியாற்றி இருக்கின்றார்.

பிரிட்டனில் பெண்களால் நடத்தப் பெரும் மிகப் பெரிய அமைப்பு. "பெண் பத்திரிகையாளர்களின் குழுமம்". இந்தப் பெண் பத்திரிகையாளர்களின் குழுமத்தில் இவர் மிக முக்கியமான உறுப்பினர்.

பத்திரிகையாளர் மட்டுமல்ல மிகப் பெரிய மனித உரிமை ஆர்வலரும் கூட. இதனால்தான் இவர் 9/11 அமெரிக்க தலைமையிலான ஈராக் போரையும், ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பையும் எதிர்க்க மக்கள் இயக்கம் (Anti War Rallies)நடத்தினார்.

**காஸா பகுதி !பாலஸ்தீன்:**

பாலஸ்தீனில் கடந்த 100 ஆண்டுகளாக யூதர்கள் பல்வேறு தீவிரவாதங்களை நிறைவேற்றி வருகின்றார்கள், அமெரிக்காவின் உதவியுடன்.

இதையும் லாரன் பூத் உலக நாட்டவர்களை அணி சேர்த்து எதிர்த்தார்.

2005ஆம் ஆண்டில் யூதர்களின் முற்றுகையின் கீழிருக்கும் காஸா பகுதியைத் தரிசிக்க சென்றார். அங்கே இருந்து கொண்டு உலகிலுள்ள பத்திரிகைகளிலெல்லாம் காஸா பகுதியில் யூதர்கள் நடத்தும் அநியாயங்களை எழுதி இஸ்ரேலுக்கும் அதற்கு துணை நிற்கும் அமெரிக்காவிற்கும் தலை குனிவை ஏற்படுத்தினார்.

இதனால் ஆத்திரமடைந்த யூதர்கள், அவரைக் காஸா பகுதியை விட்டு தன் நாட்டுக்கு அனுப்ப மாட்டோம் என அடம் பிடித்தனர். உண்மையைச் சொன்னால் சிறை வைத்தார்கள்.

தான் காஸா பகுதியில் சிறை இருந்ததை "என்னை காஸா பகுதியில் 40 கிலோ மீட்டருக்கு x 10 கிலோமீட்டரில் சிறை வைத்திருந்தார்கள் என நையாண்டியாக குறிப்பிட்டார்".

அதே போல் காஸா பகுதியில் நான்அதிக நாள்கள் இருந்ததால், காஸா பகுதி மக்கள் என்னென்ன அல்லல்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்தேன் என்றார்.

இதனால் பாலஸ்தீன மக்களின் துயர் துடைப்பிற்காக தனது பத்திரிகை துறை அனுபவங்களைப் பயன்படுத்தினார்.

2008 ஆம் ஆண்டில் 45 மனித உரிமை ஆர்வலர்களை உலகமெங்குமிருந்து ஒருங்கிணைத்து பாலஸ்தீனத்திற்கு அமைதி பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள் யுவானி ரிட்லி அதில் பாலஸ்தீன மக்களுக்கு குறிப்பாக காஸா பகுதிமக்களுக்கு தேவையான மருந்து வகைகளும் அடங்கி இருந்தன.

யூவானி ரிட்லிக்கு இது விஷயத்தில் பெரிய அளவில் துணை நின்றவர் லாரன் பூத் என்ற இன்று செய்தியாகி இருக்கும் டோனி பிளேயரின் மைத்துனி.

இந்நிலையில் யுவானி ரிட்லி, ஈரானின் PTV என்ற பிரஸ் தொலைக்காட்சியில் ஆங்கிலப் பிரிவில் பத்திரிகையாளராக பணியாற்றி வந்தார். அவருடன் இவரும் ஈரானின் தொலைக்காட்சியில் பணிபுரிய தொடங்கினார்.

**இஸ்லாம்**

ஈரானிலிருந்த நாட்களில் ஈரான் மக்கள், பாலஸ்தீன மக்களிடம் காட்டும் அன்பும் ஆதரவும் தன்னை பெரிதும் கவர்ந்ததாகக் கூறுகின்றார் லாரன் பூத்.

அங்கே தன்னுடைய ஆன்மீக தேட்டங்களுக்கு விடை கிடைத்தாகக் கூறி 2010 செப்டம்பர் திங்களில் இறை நெறியாம் இஸ்லாத்தைத் தன் வாழ்வின் வழி காட்டியாக ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார். இந்த அறிவிப்பை அக்டோபர் 23/10 இல் தான் கலந்து கொண்ட உலக அமைதியும் ஒற்றுமையும் Global Peace and Unity Event இல் வைத்து அறிவித்தார்.

**குழந்தைப் பருவம்**

லாரன் பூத் அவர்கள் லண்டனிலுள்ள லிஸ்டன் என்னுமிடத்தில் 22 ஜூலை 1967 இல் பிறந்தார். இவரது இயற் பெயர் சாராபூத்.

சிறுவயது முதலே செய்தித் துறையில் ஆர்வமிக்கவராக இருந்தார். பின்னர் அதையே தன் வாழ்க்கையாகவும் ஆக்கிக் கொண்டார்.

வளமான குடும்பத்தில் பிறந்தவர். டோனி பூத் என்ற பிரபல்யமான ஆங்கில நடிகரின் ஆறாவது குழந்தை லாரன் பூத். தாயார் சிமித்தா பூத்.

இவர் கிரேடார்பி Craig Darby என்பவரை மணந்தார். இவர் பிரிட்டனின் பிரபல திரைப்பட நடிகர்.

2004இல் பிரிட்டனி லிருநது பிரான்ஸ் நாட்டுக்கு வாழ்ந்திட வந்தார். அங்கே தன்னுடைய கணவர் இரு சக்கர வாகனத்தில் குடும்பத்தோடு சென்றுகொண்டிருக்கும் போது விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்டார்.

இந்த விபத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் அவர் 2009இல் மீண்டும் பிரிட்டன் வந்துவிட்டார்.

**இஸ்லாத்தை ஏற்றபின்**

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இவர், பன்றி இறைச் சியை உண்பதை நிறுத்திவிட்டார்.

இவருடைய மகள்கள் அலெக்சென்டரியாவும், ஹோபி யும் கூட அதை நிறுத்தி விட்டார் கள்.

கடந்த 45 நாட்களாகத் தான் குடிக்கவில்லை. என்னுடைய வாழ்க்கையில் நான் நீண்ட நாட்கள் குடிக்காமலிருப்பது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர்தான் ஈரானின் தொலைக் காட்சியில் பணிக்குவரும் போ தெல்லாம் தலையையும் மறைத்துக் கொண்டுதான் வருவார். மேலை நாட்டவர்களைப் போல் இறுக்க மான ஆடைகளை அணியாமல் தாராளமான புர்கா போன்ற ஆடைகளையே அணிந்து வருவார் என இவருடைய சக பத்திரிகை யாளர்கள் கூறுகின்றார்கள். விரைவில் நான் புர்க்காவுக்குள் முழுமையாகப் புகுந்து விடுவேன் என இப்போது அறிவித்துள் ளேன்.

தொடர்ந்து தொய்வில் லாமல் ஐந்து நேரமும் தொழுதும் வருகின்றார். திருக்குர்ஆனை தொடர்ந்து கற்று வருகின்றார்.

கிருஸ்தவத்தை நடை முறை வாழ்க்கையில் பின்பற்றி வந்தவர் இப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் அல்லாஹ்வை ஐந்து வேளை தொழுதுவருவதும் அனைவரை யும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தி யுள்ளது.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நான் இஸ்லாமிய சமுதாய அமைப்பில் அங்கத் தினராக இணைந்ததில் பெருமை கொள்கின்றேன் என்றார். அவர்கள் அன்பானவர்கள் அடுத்தவர்களை அரவணைத்து வாழ்பவர்கள் என்றும் கூறினார்.

முஸ்லிம் உலகத்தின் மேல் ஆவேசமாகப் போர் தொடுத்துக் கொண்டிருக்கும் டோனி பிளேயருக்கு தான் எழுதிய கடிதத்தில்

‘நீங்கள் இஸ்லாத்தின் மேல் கொண்டிருக்கும் கருத்துக்கள் மோசமானவை, ஆபத்தானவை.

இஸ்லாமிய உலகின் மேல் நீங்கள் கொண்டிருக்கும் பார்வை யை மாற்றிக் கொள்ளுங்கள்’ எனக் கூறி இருக்கின்றார்.

இனி அவர் இஸ்லாத்திற்கு தொடர்ந்து சேவை செய்வார்.

**இன்ஷா அல்லாஹ்.**

## லண்டனில் மஸ்ஜித்களுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது
## சர்ச்சுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை குறைகின்றது

**www.dailymail.co.uk**

லண்டனின் கிருஸ்தவ ஆலயங்களில் நிருவாகக் கூடமாகக் கருதப்படும். டயோசிஸ், அண்மையில் ஆய்வொன்றை நடந்தியது.

இந்த ஆய்வில் சர்ச்சுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகின்றது என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

2000 ஆண்டில் பிராட்போர்டு Bradford இல் சர்ச்சுக்கு வந்து சென்றவர்கள் 13,500. 2008இல் சர்ச்சுக்கு வந்து சென்றவர்களின் எண்ணிக்கை 8,700.

இதே கால அளவில் 80,000 முஸ்லிம்கள் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை பள்ளிக்களுக்குச் செல்கின்றார்கள். 20,000 முஸ்லிம்கள் ஐந்து நேரமும் பள்ளிவாசலுக்குச் சென்று வருகின்றார்கள்.

சர்ச்சுக்கு செல்பவர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் பிராடுபோர்டு டயோசிசை கலைத்துத் விட்டு பக்கத்தினுள் ரிப்பன் - லீடு ஆகிய டயோசிஸ்களுடன் அதனை இணைத்துவிட முடிவு செய்துள்ளார்கள்.

சர்ச்சுக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் சர்ச்சுகளின் வருமானமும் பெருமளவில் குறைந்துள்ளது.

# கவிக்கோ அப்துல் ரஹ்மானின் துணைவியாரை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்!

*15.10.2010 அன்று தமிழர் மனமெல்லாம் வாழும் கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்களின் துணைவியார் மஃஹபூபா பேகம் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்.*

*அவர்களின் நல்லுடல் 17.10.2010 காலை 10.30 மணிக்கு சென்னை ஒட்டிவாக்கம் மஜ்ஜிதுல் நூர் பள்ளிவாசல் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது.*

*அடக்கத்திற்கு பின் கவிக்கோ அவர்களுக்குத் சமுதாய தலைவர்களும் அவர்களின் உற்ற நண்பர்களும் தேறுதல் கூறினார்கள்.*

*'சன்' தொலைக்காட்சி நேருக்கு நேர் நிகழ்ச்சி புகழ் வீரபாண்டின் பேசிடும்போது கவிக்கோ அவர்களின் துணைவியார் எந்த அளவுக்கு கவிக்கோவின் வளர்ச்சிக்குத் துணைநின்றார் என்பதை எடுத்துக் கூறினார்.*

*அவர்களை நாங்கள் பயணங்களுக்கு அழைத்துச் செல்லும்போது நான் அவர்களை கவிக்கோவை - உங்கள் கைகளில் ஒப்படைக்கின்றேன் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறியே அனுப்பி வைப்பார்கள். அந்த அளவுக்கு அவர்களைப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள் என்றார் அறிவுமதி.*

*கவிக்கோவின் துணைவியார் அவர்கள் தாங்கள் கவிக்கோவை தேடிப் போகும் போதெல்லாம், எப்படித் தங்களை உபசரித்தார்கள் என்பதை நினைவு கூர்ந்தார்கள். தமிழ் ஆராய்ச்சித்துறை தலைவர் இளங்கோ அவர்கள் என்னைப் போன்ற ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியவர் கவிக்கோ. நாங்கள் கவிக்கோவிடம் பாடம் பயிலச் செல்லும் போதெல்லாம் எங்களை அன்போடு உபசரித்தவர் அவரது துணைவியார் என்றார்.*

*இறைவன் எனக்கு எத்தனையோ அருட்களை அள்ளி வழங்கினான். ஆனால் நான் கேட்காமலே இறைவன் எனக்களித்த அருள் கொடைதான் என் மனைவி. குடும்ப சுமைகளைத் தானே சுமந்து என்னை சாதனை களத்தில் சுதந்திரமாக திரியவிட்டவர் என் மனைவி என கவிக்கோ நினைவு கூர்ந்தார்.*


*இப்படிக் கவிக்கோவின் துணைவியார் பற்றிய நினைவுகள் மக்களை நெகிழச் செய்து கொண்டிருந்தபோது தனது உரையில் மௌலவி முஸ்தபா காஷிமி அவர்கள், கவிக்கோ அவர்கள் தங்களது நூல்களிலெல்லாம்* Copy Right *என்ற பதிப்புரிமையை தங்கள் மனைவியின் பெயருக்கே எழுதி வைத்திருந்தார்கள். இனிமேலும் அவர்கள் அந்தப் பதிப்புரிமைகளை மாற்றிடக் கூடாது எனக் கேட்டுக் கொண்டார்கள்.*

*இதற்கு தனது உரையில் கவிக்கோ அவர்கள், தங்கள் மனைவியின் பெயரில் ஓர் அறக்கட்டளைத் தொடங்கப் பெறும் அஃது ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யும் எனக் கூறினார். அல்ஹம்ந்து லில்லாஹ்.*

*கவிக்கோ அவர்களின் பாவங்களை மன்னித்து அல்லாஹ் அவர்களுக்கு சுவர்க்கத்தில் உயர்ந்த இடத்தை வழங்கிடுவானாக.*

**உறுப்பினர்கள் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**
**வைகறை வாசகர் வட்டம்**
**வேர்கள் வெளியீட்டகம்**




இந்த மாதம் வேர்டில் ஒரு வித்தியாசமான டூலைப் பற்றி படிக்க இருக்கின்றோம். வேர்டில் உள்ள மெயிலிங் (Tool)டூல் தான் அது.

உங்களுக்கு நிறைய வாடிக்கையாளர்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் அனைவருக்கும் ஒரே விதமான கடிதத்தை அனுப்பவேண்டும். இதற்கு மெயில் மொர்ஜ் பற்றி தெரியாதவர்களிடம் எப்படி அனுப்புவது என்று கேட்டால் கடிதத்தை டைப் செய்து முடித்தபின் அதனை காப்பி செய்து கொண்டு ஒவ்வொரு பக்கத்திலும் அதனை பேஸ்ட் செய்த பின் உங்களுக்கு தேவையான முகவரியை டைப் செய்து அத்துடன் இணைத்து கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள்,

இவ்வாறு செய்வது படிப்பதற்கு வேண்டுமானால் சுலப மானதாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் இவ்வாறு கடிதங் களை உருவாக்குவது மிகவும் சிரமமானது. மேலும் அவ்வாறு உருவாக்கிய கடிதத்தில் தேவை யான ஒரு முகவரியை திருத்துவது அந்த முகவரியை தேடுவது அதனை அழிப்பது போன்ற விஷயங்களும் சிரமமானது.

மெயில் மொர்ஜ் இதனை மிக சுலபமாக்கித் தருகின்றது. அதே போல போஸ்ட் என்வலப் (Envelop) கார்டுகளில் முகவரியை டைப் செய்ய வேண்டும் என்றாலும் அல்லது லேபிள்கள் உருவாக்க வேண்டும் என்றாலும் மெயில் மொர்ஜ் டூல் மூலம் அதனை செய்வது மிகவும் சுலபமானது.




இதற்கு முதலில் மெய்லிங் மெனுவில் உள்ள என்வலப் என்ற டூலை தேர்வு செய்யுங்கள். அதில் Delivery Address என்ற இடத்தில் யாருக்கு கடிதம் செல்ல வேண்டு

மோ அவருடைய முகவரியை டைப் செய்யுங்கள். Return Addressல் உங்களுடைய முகவரியை டைப் செய்யுங்கள். பின்னர் Optional சென்று Envelop size என்பதில் உங்களுடைய என்வலப் எந்த அளவோ அந்த அளவை தேர்வு செய்து கொள்ளுங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் அளவு அதில் இல்லை என்றால் Custome Size என்பதை தேர்வு செய்து உங்களுடைய கார்டின் அளவை அதில் டைப் செய்யுங்கள். பின்னர் OK கொடுத்து விட்டு Add to Document என்பதை தேர்வு செய்யுங்கள். உங்களுடைய என்வலப் உங்களுடைய டாகுமெண்டில் வந்து விடும்.





இதே போல் நீங்கள் ஏதாவது லேபிள்களை செய்ய விரும்பினால் மெர்ஜ் மெனுவில் Labels என்பதை தேர்வு செய்து லேபிளில் உங்களுக்கு வர வேண்டிய விஷயத்தை டைப் செய்து பின்னர் Full Page of Same Label என்பதை தேர்வு செய்து OK கொடுங்கள். அந்த பக்கம்




முழுவதும் நீங்கள் விரும்பிய லேபிள் வந்துவிடும்.

இப்போது பல முகவரிகளை ஒருகடிதத்துடன் இணைக்கும் மெயில் மெர்ஜை பார்க்க லாம். முதலில் Start Mail Merge என்பதை தேர்வு செய்து Letters என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் Select Recepients என்ற மெனுவில் என்பதை தேர்வு செய்து கொள்ளுங்கள். தற்போது தெரியும் திரையில் New Address List என்று வந்திருக்கும். அதில் ஏற்கனவே சில குறிப்பிட்ட தலைப்புகள் கொடுக்கப் பட்டிருக்கும். அந்த தலைப்புகளை முதலில் நீக்கிவிட வேண்டும். பின்னர் நமக்கு தேவையான தலைப்புகளை உருவாக்க வேண்டும்.

முதலில் Customize columns என்பதை தேர்வு செய்யுங்கள்.




பின்னர் தெரிகின்ற திரையில் எல்லா தலைப்புகளையும் Delete செய்யுங்கள். பின்னர் Delete என்ற பட்டனை தேர்வு செய்யுங்கள். உங்களுக்கு தேவையான





தலைப்பை கொடுங்கள். பிறகு OK கொடுங்கள். இது ஒரு கலத்திற்கு (Column) உள்ள தலைப்பு.




இதே போன்று உங்களுக்கு எத்தனை தலைப்புகள் தேவையோ அத்தனையும் உருவாக்கிக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு இங்கே நான் Customer Name, Address,Area,City, Pincode, PhoneNumber என்ற தலைப்புகளை உருவாக்கியுள்ளேன். இந்த தலைப்புகளை உருவாக்கிய பின் OK தாருங்கள்.





அந்தந்த தலைப்புகளுக்கு கீழே உங்களுடைய வாடிக்கையாளர்களின் தகவல்களை தட்டச்சு செய்யுங்கள். புதிய தகவல்களை சேர்க்க New Entry என்பதையும் ஏற்கனவே தட்டச்சு செய்ததை நீக்க Delete Entry என்பதையும் தேர்வு செய்யுங்கள். தேவையான தகவல்களை



தட்டச்சு செய்த பின் OK என கொடுங்கள்.

இப்பொழுது ஒரு புதிய கடிதத்தை உருவாக்க வேண்டும். அதில் நாம் தட்டச்சு செய்து வைத்துள்ள இந்த முகவரிகளை இணைக்க வேண்டும். எனவே புதிய கடிதத்தை உருவாக்குங்கள். அதில் யாருக்கு அனுப்ப வேண்டும் என்ற இடத்தை (பெறுநர் முகவரி) காலியாக விடுங்கள்.

அனுப்புநர் முகவரியில் உங்களுடைய முகவரியை தட்டச்சு செய்யுங்கள். தேவை யான விவரங்களை தட்டச்சு செய்யுங்கள்.





பின்னர் பெறுநர் முகவரி வரவேண்டிய இடத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள். Insert Merge Field என்பதை தேர்வு செய்து உங்களுடைய வாடிக்கை யாளர் தகவல்களை அதன் தலைப்புகளை தேவையான இடங்களில் Insert செய்து கொள்ளுங்கள்.

இதன் பின்னர் Preview Result என்பதை தேர்வு செய்யுங்கள். தானாக நீங்கள் தட்டச்சு செய்து வைத்துள்ள முகவரிகள் இந்த டாகுமெண்டில் வந்துவிடும். இதில் முதல் முகவரி மட்டுமே தற்போது திரையில் தெரியும். அடுத்தடுத்த முகவரிகளுக்கு செல்ல என்பதற்கு அருகில் உள்ள வலப்புற இடப்புற அம்புகுறி களை தேர்வு செய்தால் அடுத்தடுத்த முகவரிகள்




வந்துவிடும்.

Find Recepient என்பதை தேர்வு செய்து உங்களுடைய வாடிக்கையாளர்களில் தேவையான நபரை கண்டு பிடிக்கலாம்.




இறுதியாக Finish and Merge என்பதை தேர்வு செய்தால் வரக்கூடிய திரையில் நேரடியாக பிரிண்ட் என்பதை தேர்வு செய்து பிரிண்டருக்கு அனுப்பலாம். அல்லது ஒரு புதிய டாகுமெண்டில் Edit Individual Document என்பதை தேர்வு செய்து எல்லா வாடிக்கை யாளர்களுக்கும் கடிதம் அனுப்பவேண்டும் என்றால் All என்பதை தேர்வு செய்து அல்லது குறிப்பிட்ட வாடிக்கையாளர் களுக்கு அனுப்ப வேண்டும் என்றால் From மற்றும் Tol எந்த வாடிக்கையாளரில் இருந்து எந்த வாடிக்கையாளர் வரை என்பதை




நிரப்பி OK என்பதை தேர்வு செய்தால் அது தனியாக ஒரு டாகுமெண்டில் வந்து விடும் தேவைப்பட்டால் அதை சேமித்து வைத்து கொள்ளலாம். இல்லை தேவைப்படும் போது இந்த மெயில் மெர்ஜ் டாகுமெண்டை திறந்து தேவையான வாடிக்கை யாளர்களுக்கு மீண்டும் அனுப்பிக் கொள்ளலாம்.

ஒருவேளை வேறொரு டாகுமெண்டிலும் இதே வாடிக்கையாளர்கள் பட்டியல் தேவைப்படுகிறது என்றால் Select Recepient என்ற இடத்தில் Type a New List என்பதற்கு பதிலாக Use Existing List என்பதை தேர்வு செய்து தேவையான அட்ரஸ் ஃபைலை (டேடாபேஸை) இணைத்துக் கொள்ளலாம்.

**தஞ்சாவூரில்**
**வைகறை வெளிச்சம்**
**இதழ்களை**
**பெற , வேர்கள்**
**பதிப்பகத்தின்**
**வெளியீடுகளை பெற**
**மற்றும் சந்தா**
**தொடர்புக்கு**
**பின்வரும்**
**சகோதரரை**
**தொடர்பு**
**கொள்ளவும்.**

நைனா முஹம்மது


**89401 53872**

## புதைக்கப்பட்ட மக்கள்!
## மறைக்கப்பட்ட வரலாறுகள்!

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!

### டாக்டர் அங்க் சுவீ

### தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்




### ஷாப்ரா, ஷத்திலா படுகொலைகள்

காஸா மருத்துவமனையை நாங்கள் மயானமாக்கி விட்டோம்!

நீங்கள் வேண்டு மானால் உங்கள் நாடுகளுக்குப் போகலாம்! என்ற இஸ்ரேலியர் களின் சொற்கள் எங்கள் இதயங் களை குத்திக் கிழித்தன. நாங்கள் நிலைகுலைந்தோம்.

எங்கள் நிலை - (நாங்கள் மருத்துவமனையில் உயிர் பிழை க்க வந்தவர்களையும் சுட்டுக் கொலை செய்துவிட்டார் களே என்ற ஆதங்கம் -) அந்த இஸ்ரேலியரை இன்னும் கோபத் தில் ஆழ்த்தியது.

பாலஸ்தீன மக்கள் மீது யாரும் அனுதாபப்படக் கூடாது, யாரும் அவர்களுக்கு உதவி செய்யக் கூடாது, என்றொரு எழு தாத விதியை அவர்கள் செயல் படுத்திக் கொண்டிருந்தார் கள்.

எங்களையெல்லாம் அமெ ரிக்க தூதரகம் அழைத்துச் சென்று வரிசையாக உள்ளே போங்கள் என உத்தரவிட்டார்கள்.

ஷாப்ரா, ஷத்திலா, அகதிகள் முகாமில் இத்தனை முஸ்லிம்கள் பிணமானார்கள் என்றால் அதற்கு இந்த அமெரிக்கர்கள் தாம் காரணம்.

இந்த அமெரிக்கர்கள் தாம் இந்த முகாம்களிலிருந்த ஆண் களையெல்லாம் அப்புறப்படுத்திட காரணமாக இருந்தார்கள்.

இந்த அமெரிக்கர்கள், ஐக்கிய நாடுகள் சபை, இவை தந்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தான் தங்கள் பாதுகாவலர்களான ஆண்களை விட்டுப் பிரிய அந்த அகதிகள் முகாம்களில் வாழ்ந்த, பாலஸ்தீன குடும்பங்கள் சம்மதித் தன. ஆண்கள் பிரிக்கப்படாம லிருந்திருந்தால் அவர்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றிட நிச்சயமாக முன் வந்திருப்பார்கள். சண்டை போட்டாவது செத்திருப் பார்கள்.

இத்துணை பெரிய துரோ கத்தை அந்த அகதி களுக்குச் செய்த அந்த அநியாயக்கார அமெரிக்காவின் தூதரகத்திற்குள் செல்ல எனக்கு மனம் வரவில்லை.

தூதரகத்திற்கு நேர் எதிர் திசையில் நடந்து அங்குள்ள காம்ரேடோ ஹோட்டலுக்குச் செல்வது என முடிவு செய்தேன்.

இந்தக் காம்ரேடோ ஹோட்டலில்தான் எல்லா நாட்டுப் பத்திரிகையாளர்களும், தங்கள் உல்லாச புரியை அமை த்துச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் தினமும் செய்தியைச் சேகரித்தார்கள். எந்த அளவுக்கு அவற்றை உலகமக்களுக்குச் சொன்னார்கள் என்பது தெரியவில்லை.

எனது முடிவை, அமெரிக்க தூதரகத்திற்குள் செல்லாமல் காம்ரேடோ ஹோட்டலுக்குச் சென்று அங்குள்ள பத்திரிகையாளர்கள் வழி, காஸா மருத்துவமனையில் என்ன நடந்தது? என்பதை அறிந்திடும் எனது முடிவை, நண்பர் பால்மோரிஸிடம் சொன்னேன்.

அவரும் என்னைப் போன்ற மனநிலையில்தான் இருந்தார். ஆகவே! பால் மோரிஸ் உடனேயே சம்மதம் தெரிவித்தார்.

நாங்கள் இருவரும் காம்ரேடோ ஹோட்டல் நோக்கி நடந்தோம்.

வரிசையில் நின்ற இதர மருத்துவர்கள் நாங்கள் அவர்களை விட்டு வெளியே வருவதைக் கண்டார்கள். கண்ணீரே பலரது கண்களை மறைத்துக்கொண்டு நின்றது.

நாங்கள் காம்ரேடோ ஹோட்டலை வந்தடைந் தோம் பத்திரிகையாளர்கள் அறைக்கு நேரே சென்றோம்.

அப்போதுதான் பல பத்திரிகையாளர்கள் ஷாப்ரா, ஷத்திலா, அகதிகள் முகாமிலிருந்து திரும்பி வந்திருந்தார்கள்.

தாங்கள் பதிவு செய்திருந்த வீடியோ ரிக்கார்டிங்களைத் தொலைக்காட்சி பெட்டிகளில் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முதன் முதலில் ஷாப்ரா, ஷத்திலா, முகாம்களுக்குச் செல்லும் முக்கிய சாலையைப் படம் பிடித்திருந்தார்கள்.

ஆமாம் இந்தச் சாலை வழியாகத்தான் எங்களை காஸா மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்தார்கள்.

சாலையின் இரண்டு பக்கங்களிலும் இறந்தவர்களின் சடலங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எங்கள் கண்களின் முன்னால் சுற்றிவளைத்து வைத்திருந்தவர்களை, எங்களை அங்கிருந்து அழைத்துச் சென்றபின் கொலை செய்திருக்கின்றார்கள்.

அந்த உடல்களோடு இன்னும் நூற்றுக்கணக்கான உடல்கள் கிடந்தன.

சடலங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்திருந்தார்கள்.

பல உடல்கள் சின்னா பின்னமாக ஆக்கப்பட்டுக் கிடந்தன. கைகள் துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்தன சில. அதாவது அந்த மக்களை முதலில் சித்திரவதை செய்து பின்னர் கொலை செய்திருக்கின்றார்கள்.

சில உடல்களில் கால் கை மூட்டுகளை ஒயர் (Wire)களால் பிணைத்திருந்தார்கள். இந்த உடல்களில் ஒயர்களைப் பின்னி மின்சாரத்தைப் பாய்ச்சி துடிதுடிக்க வைத்திருக்கின்றார்கள். அல்லது அப்படியே இறந்து போகட்டும் என விட்டு விட்டிருக்கின்றார்கள்.

பெண்களின் உடல்களில் அருவெருப்பான காயங்களிலிருந்தன. இந்தக் காயங்கள் அவர் கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் கூறின.

குழந்தைகளின் பிணங்கள் ஏராளமாகக் கிடந்தன. அவற்றில் பல சிவப்பு நிறஇரத்தத்தால் சூழப் பட்டுக் கிடந்தன.

இன்னும் பல குழந்தைகளின் உடல்கள் ஒருவித கறுப்பு நிற திரவத்தில் கிடந்தன.

இவை குழந்தைகளையும் பல்வேறு சித்திரவதைகளுக்குட்படுத்தி, கொஞ்சம் கொஞ்சமாக கொலை செய்திருக்கின்றார்கள் என்பதையே காட்டின.

பெண்களின் உடலிலிருந்து துணிகள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. ஈவிரக்கமின்றி, அவர்கள் பலமுறை கற்பழிக்கப்பட்ட பின்னரே கொலை செய்யப்பட்டிருந்தார்கள் என்பதையே பெண்களின் சடலங்கள் கிடந்த நிலைக் காட்டிற்று.

இவற்றையெல்லாம் பார்த்த என்னால் மனம் பொறுக்க இயலவில்லை. என்னை மிஞ்சி நெஞ்சம் நொறுங்கி கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

இப்போதுதான் என்ன நடந்திருக்கின்றது என்பதை நான் முதல் முதலாக முழுமையாக என் மனக்கண் முன் ஓட்டிப் பார்க்க முடிந்தது.

உண்மைகள் என்னை உடைத்துப் போடுபவையாக இருந்தன.

இதுவரைக்கும் ‘காஸா’ மருத்துவமனையில் யாரைக் காப்பாற்றலாம் என்ற எண்ணத்திலேயே மூழ்கி, சதா சர்வகாலமும் ஓடி, ஓடி இயங்கிக் கொண்டிருந்த என்னால் இந்தக் கொலை

பாதகங்களைப் புரிந்து கொள்ள இயலவில்லை.

உண்மையைச் சொன்னால் அதற்கான நேரமிருக்கவில்லை.

எண்ணிக்கையில் மிகக் குறைந்த குழந்தைகளையும் பெண்களையும் காப்பாற்றிட நாங்கள் எங்கள் மருத்துவ திறமைகளையெல்லாம் ஒன்று கூட்டி முயற்சி செய்து கொண்டிருந்த போது வெளியே ஆயிரக்கணக்கில் அவர்களைச் சார்ந்தவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மருத்துவமனையின் உள்ளே ஓரிரு குழந்தைகளின் எலும்பு முறிவுகளை சீர் செய்ய நாங்கள் உதிரம் சிந்திக் கொண்டிருந்த போது ஓராயிரம் குழந்தைகள் வெளியே நொறுக் கப்பட்டு கொலை செய்யப்பட்டு புல்டோஷர்களைக் கொண்டு மண்ணோடு மண்ணாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குழந்தைகளை ஒன்றாய்க் கூட்டி அவர்களை வெடி குண்டுகளை வைத்துக் கட்டி இருக்கின்றார்கள். பின்னர் வெடிக்கச் செய்திருக்கின்றார்கள்.

அதிவிரைவாக உயிரை இழந்தவர்களை அதிர்ஷ்டசாலிகள் எனலாம். "Those who had died quickly were the lucky ones".

நாங்கள் காஸா மருத்துவமனையில் சிலருடைய உயிர்களை உடலோடு தக்க வைப்பதற்கு மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தபோது வெளியே இயந்திர துப்பாக்கிகளின் சப்தம் கேட்டது.

அவை போர் களத்து ஓசையல்ல. நிராயுதபாணிகளை யூதர்கள் குடும்பங் குடும்பமாகச் குரூரமாகக் கொலை செய்த போது எழுந்த ஓசை. இது என்னைப் பிழிந்து போட்டது.

குண்டு வீச்சுகள் என நாங்கள் உணர்ந்தவை. அப்பாவிகள் அடைக்கலம் தேடி புகுந்திருந்த அகதிகள் முகாம்கள்.

இஸ்ரேலிய படைகள் அந்த அகதிகள் முகாமை முழுமையாகச் சுற்றி வளைத்து நின்றன. ஓர் ஈ, எறும்பு கூட இஸ்ரேலியப் படைகளின் கண்களிலிருந்து தப்பிக்க இயலாது.



காஸா மருத்துவ மனையில் தஞ்சம் புகுந்திருந்த இரண்டாயிரம் பாலஸ்தீன மக்களை நாங்கள் ஒரு முறை தப்பித்து ஓடிவிடுங்கள் எனச் சொன்னோம்.

அவர்களால் எங்கேயும் ஓடிட இயலவில்லை.

இஸ்ரேலிய இராணுவம் அவர்களைச் சுற்றி வளைத்தது. கொலை செய்தது. இதுதான் நடந்தது என்பதை அறிந்திடும் போது இவர்களின் குரூர நெஞ்சம் என்னை அதிரச் செய்தது.

காஸா மருத்துவமனையில் நாங்கள், இயங்கிடும் வேகத்தைப் பார்த்து தாங்களெல்லாம் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையை நெஞ்சிலே சுமந்து பிடிப்போடு எங்களை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த மக்களையெல்லாம் மண்ணோடு மண்ணாக்கிப் போட்டுவிட்டார்கள். அவர்களின் எலும்புகள் கூட எஞ்சி இருக்கவில்லை.

சில நாள்களுக்கு முன்னால் வரை இவர்கள் மிகவும் நம்பிக்கையோடு இருந்தார்கள்.

அமெரிக்காவின் வாக்குறுதிகளை அவர்கள் மலை போல் நம்பினார்கள்.

அமைதி உடன்படிக்கை என்ற பெயரில் அவர்களின் சகோதரர்களையும், கணவர்களையும், தந்தைமார்களையும் அப்புறப்படுத்திய போது இப்படியொரு படுகொலையைச் செய்வார்கள் என எண்ணிப் பார்த்ததில்லை.

அந்த அமைதி உடன் படிக்கையை அவர்கள் வாழ்வதற்கு ஒரு வாய்ப்பாகவே பார்த்தார்கள். ஆனால் அதுவே அவர்களின் மரண சாசனமாக அமைந்துவிட்டது. இவர்களின் மென்மையையும் இங்கிதத்தையும் நான் நேரில் பார்த்தவள், ரசித்தவள் அவர்கள் தந்த அரபு காப்பியை நான் நேரில் சுவைத்தவள்.

எங்களுடைய மருத்துவ அறிவையும் அனுபவத்தையும் கொண்டு காப்பாற்றிய சிலரையும் இவர்கள் ஈவிரக்கமின்றி கொலை செய்துவிட்டார்கள்.

நாங்கள் முட்டாள்களாகி விட்டோம். என்னுடைய இயலாமையை நினைத்து நானே வெட்கப்பட்டேன்.

இஸ்ரேலியரின் ஈனப் புத்தியை நாங்கள் புரிந்து கொள்ளவே இல்லை.

அகதிகள் முகாமிலுள்ள ஆண்களெல்லாம் அப்புறப் படுத்தி விட்டால் எல்லாம் சீராகிவிடும் என எண்ணி ஏமாந்தவர்களின் நானும் ஒருத்தி.

ஆமாம் ஆண்கள் அப்புறப் படுத்தப்பட்டுவிட்டால் பெண்கள் பாதுகாப்பைப் பெறுவார்கள். அவர்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வார்கள்.

அடுத்தத் தலைமுறை தழைக்கும் என எண்ணினோம். ஆனால் அந்தத் தலை முறையின் தலையில் துப்பாக்கிக் குண்டுகளை நுழைத்தார்கள். கழுத்துக்களை அறுத்தார்கள்.

கடவுளே என்னைக் கை விட்டுவிட்டார். அவருக்கும் மனசாட்சி இல்லையோ என்றது என் மனது. எதை புனிதமான சேவை என நினைத்தோமோ அது நொடி பொழுதும் நிலைக்கவில்லை.

மழலைகளின் முன் பெற்றோர்கள் கொலை செய்யப்படும் போது அவர்கள் எப்படி துடித்திருப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் எதுவுமில்லை. எல்லாம் முடிந்து விட்டது. அஜீசா ஒரு முறை உன்னைப் பார்க்கும் வாய்ப்பு இனி கிடைக்குமா? நீ என்ன ஆனாய்! ஆனால் நீ தந்தப் பொறுப்பை உன்னைப் போல் என்னால் காப்பாற்றிட இயலவில்லை அஜீசா!

என்னை மன்னிப்பாயா?

நீ போராட போந்த போது தடுத்த இந்தப் பாவியின் முகத்தை நீ மீண்டும் ஏறெடுத்துப் பார்ப்பாயா?

இப்படி நான் என்னை இகழ்ந்து கொண்டிருந்தபோது பவுல் மோரிஸ் என்னிடம் அழாதே என்றார்.

ஆமாம் நான் என்னில் சுழலவிட்ட எண்ணங்களை என் கண்கள் அவை வடித்த கண்ணீரால் காட்டி கொடுத்தது.

எண்ணைத் தேற்றினார் பால் மோரிஸ்.

நான் என் எண்ணங்களைப் பால் மோரிஸிடம் பகிர்ந்தேன்.

சற்று மனச் சுமை இறங்கியது.

பால் மோரிஸிடம் அஜீஸாவைப் பற்றிச் சொன்னேன்.

ஆஜீசாவைப் பற்றியும் ஊடகத்தைச் சார்ந்தவர்கள் பேசிக் கொண்டார்கள் என்றார்.

என்ன பேசினார்கள் என்றேன்.

அஜீசா எங்களை விட்டுப் பிரிந்த பின் என்ன நடந்தது என்பதை பால் மோரிஸ் சொல்லத் தொடங்கினார். நான் இமை கொட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். அது,

(இன்ஷா அல்லாஹ்)


**அடுத்த இதழில். . .**


**வெளிவந்த மூன்றே மாதங்களில் முதல் இரண்டு பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்தன**

**தற்போது பரபரப்பான விற்பனையில் (தமிழில் . . . )**



# கர்கரேயைக் கொலை செய்தது யார்?



**விரிவாக்கப்பட்ட மூன்றாம் பதிப்பு விற்பனையில்**

**விலை ரூ. 250/-**

தொடர்புக்கு : **வேர்கள் வெளியீட்டகம்,**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் -7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909



Owned and Published by M. Gulam Mohamed from 235 Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed, Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 600 005.